
KALKI 3.9.95 ரூ 3.00
கல்கி
வயல் வெளியில்
ஒரு வசந்தப் புயல்!


சிகரத்தின் உச்சியிலே தனித்து
நிற்கும் ஒனிடா கேஷய்.
தன்னிகரற்ற டிவியின் அனைத்து
சிறப்பம்சங்களுடன் காத்திருக்கிறது.
சரி நிகர் போட்டிக்காக ...
கடுமையான சவாலுக்காக. சவால்
எனில் எப்படிப்பட்ட பிராண்டு
களிடமிருந்து ... ஒனிடா கேஷய்யின்
மகா சக்தி வாய்ந்த மாஸ்டர்
கமாண்ட் கன்ட்ரோல் ...
உலகின் முதன் முதலான
கராவ்கே தேர்வுடன் கூடிய 53 செமீ
டிவியின் வெல்ல முடியாத தரம்...
அல்லது வீட்டிலேயே அரங்க
ஒலியின் அனுபவத்தைத் தரும் இதன்
ஜீ-ஹார்ன் ஒலி. இவற்றைக் கண்டு
மிரளாத பிராண்டுகளிடமிருந்து.
உலகிலே முன்னேற்றம் கண்ட சில
நாடுகளில் இப்போது இதே போன்ற
பிராண்டுகள் மெதுவே தலை தூக்கி
இருக்கலாம்.
ஆனால் அவற்றோடும் போட்டியிடத்
துடியாய் துடிக்கிறது ஒனிடா கேஷய்.
வெற்றி வாகை சூடப் போவது
ஒனிடாதான் ... மற்றவரை
காக்கப்போவது கடவுள்தான்.
ஒனிடா
கேஷய் சீரீஸ்
இந்தியாவிற்குப் பெருமை ...
உலகிற்குப் பொறாமை.
இது தெள்ளத் தெளிவு.
ஒரு இந்திய பிராண்ட் காத்திருக்கிறது
சர்வதேச போட்டிக்காக
Avenues O 395.95



"ஏம்பா... பாத்து சுரங்கம் வெட்டு...! நீ பாட்டுக்கு பாதாள சாக்கடைக் குழாயை உடைச்சிட்டா, அப்புறம் பூரா சாக்கடை தண்ணியும் ஸ்டேஷனுக்குள்ள வந்துடும்... ஆமாம்!"

- சுபா

...கும் முடிவை எடுக்கவில்லையே! புது எழிலோடு திரையில் தென்றல் பரப்பும் பாசவலை



• கே. விஸ்வநாத்

"என் இமேஜே எனக்கு முதல் எதிரி!"

பாசவலையில் நடிகராக அறிமுகமாகியுள்ளார் கே. விஸ்வநாத். இவர் நடிப்பதென்றால் ரூபாய் இருபது லட்சம் தரவும் தயாரிப்பாளர்கள் தயாராக இருக்கிறார்கள்! சாதாரணமாக நடிகர்கள்தான் டைரக்டராக பிரமோஷன் பெறுவார்கள். விஸ்வநாத்துக்கு 'ரிவர்ஸ்' பிரமோஷன்! அவருடன் ஒரு சந்திப்பு.

உங்களது சங்கராபரணமும் சலங்கை ஒலியும் தமிழகத்திலும் பரவலான பாராட்டு பெற்ற படங்கள். அப்படியிருக்க, கமலஹாசனை கதாநாயகனாகக் கொண்ட 'பாசவலை'யை (தமிழில் டப் செய்ததற்குப் பதிலாக) இரு மொழிகளிலும் உருவாக்கியிருக்கலாமே!

"நான் ஆந்திராவைச் சேர்ந்தவன். எனவே தெலுங்கு என் முதல் விருப்பம் என்றாலும் தமிழ்ப் படத்தை இயக்குவதில் எனக்கு ஒப்புதல்தான். ஆனால், "சுபசங்கல்பத்தி"ன் (பாசவலையின் ஒரிஜினல்) தயாரிப்பாளர்கள் இரு மொழிகளில் தயாரிக்



— கடலூர் கன்னியப்பன்

யின் லொகேஷன்கள் எவை?

விசாகப்பட்டினம், அலெபி ஆகிய இடங்கள்தான் அவை. மொத்தப் படப்பிடிப்பும் சுமார் 65 நாட்களில் முடிந்தது. அதில் பெரும் பான்மையான நாட்கள் மேலே குறிப்பிட்ட இரண்டு இடங்களில்தான் நடைபெற்றது.

உங்கள் படங்களில் மக்களுக்கு மெஸேஜ் கொடுக்க வேண்டுமென்று முயற்சி செய்வது இல்லை போலிருக்கிறதே?

மக்களின் மனத்தைக் கெடுக்காத வகையில் என் திரைப்படங்கள் இருப்பதே பாராட்டுக்குரிய விஷயம் என்று நினைக்கிறேன். மெஸேஜ் என் படங்களின் கதையில் இழையோடுவதும் உண்டு. 'சப்தபதி' படத்தில் தீண்டாமையைப் பற்றியும், 'சுபலேகா' படத்தில் வரதட்சணைக் கொடுமையைப் பற்றியும் அலசியிருக்கிறேன்.

ஒரு குறிப்பிட்ட ட்ராக்கில் தெளிவாகப் போய்க் கொண்டிருக்கும் 'பாசவலை'யில் இரண்டு வில்லன்கள் என்ற அனாவசிய 'ஜெர்க்' எதற்கு?

என் இமேஜ் எனக்கு எதிரியாக இருக்கிறது. கதையைப் பற்றி மட்டும் யோசித்துப் பார்த்தால், கதாநாயகனை 'மோடிவேட்' செய்ய அது ஒரு அதிகப்படி காரணம் என்பது புரியும். ஆனால் ஏற்கெனவே நான் இயக்கியிருக்கும் படங்களை நினைத்துக் கொண்டு பார்ப்பதால் இதில் வில்லன்கள் திணிப்பாகத் தெரிகிறார்கள். இந்த "நீங்களுமா விஸ்வநாத்?" என்ற கேள்வி என்னை அவ்வப்போது துரத்திக் கொண்டே இருக்கிறது. க்ளைமேக்ஸில் வில்லனின் தலையை நாயகன் மொத்துவது போன்ற ஒரு காட்சியைப் பார்த்து, சென்சாரிலேயே இந்தக் கேள்வியைக் கேட்டார்கள்! அந்த வில்லன்கள் இல்லாமலும் பாசவலையை எடுத்திருக்கலாம் என்பதையும் நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் Creative artists have no fixed rules.

முதல் படத்திலேயே உங்கள் நடிப்புத் திறமையை அழகாகக் காட்டியிருக்கிறீர்கள். தொடர்ந்து நடிக்க உத்தேசமா?

பாசவலை படத்தில் திரைக்கதை முழுவதையும் எழுதி முடித்தாகி விட்ட சமயம். கமல்தான் கதாநாயகன் என்பது முதலிலேயே முடிவான விஷயம் என்றாலும் நாயுடு கேரக்டருக்கு யாரைப் போடலாம் என்பது தீர்மானிக்கப்படவில்லை. எஸ். பி. பாலசுப்ரமணியமும் (படத்தின் தயாரிப்பாளர்) கமலும் என்னையே அந்த ரோலைச் செய்யச் சொல்லி வற்புறுத்தினார்கள். சிவாஜி கணேசனை அந்தப் பாத்திரத்தில் நடிக்கச் செய்ய அணுகினோம். பெரும்பாலும் வெளிப்புறப் படப்பிடிப்பு என்பதால் உடல்நிலை காரணமாக அவரால் இதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. பிறகு நானே துணிந்து நடித்தேன். மலையாளத்தில் 'ஸ்படிகம்' என்ற பெயரில் வெளியான படத்தை "வஜ்ரமு" என்ற பெயரில் தெலுங்கில் உருவாக்குகிறோம். அதிலும் அப்பா கேரக்டரில் நடிக்கிறேன். ஆனால் அதில் முரட்டு அப்பா. எப்போதுமே இயக்கம்தான் என் முதல் சாய்ஸ். நடிப்பு என்பது அடுத்ததுதான்.

பாசவலை படத்தில் ப்ரியா ராமனை கமல் மணந்து கொள்ளாத முடிவில் யதார்த்தம் இருக்கிறது. ஆனால் அமெரிக்காவில் எட்டு வருடங்கள் படித்து வந்துள்ள கமலின் மகன், கடைசியில் மீனவக் குல்லாயோடு தோன்றுமாறு ஏன் முடிவை வைத்தீர்கள்?

மீனவத் தொழில் என்பதில் எந்தக் கேவலமும் இல்லையே! அந்தத் தொழிலை உயர்த்திக் காட்டத்தான் அப்படி ஒரு முடிவை வைத்தேன். தந்தையின் தொழிலையே - மேல்நாட்டில் சில வருடங்கள் படித்தால் கூட பிள்ளை ஏற்பதில் என்ன தப்பு?

சந்திப்பு : **ஜி.எஸ்.எஸ்.**
வண்ணப்படம் : **யோகா**

காலை 5 மணி, மெது ஓட்டத்துடன் உடற்பயிற்சி, இந்நேரத்திலும் உங்கள் கணக்கிலிருந்து பணம் எடுக்க முடியும் - இந்தியன் வங்கியின் (ATM) வழியாக.



அதிகாலை நேரம். பறவையினங்களின் உற்சாகக் குரல்கள் ஒலிக்க, மென்மையான காற்று உடலைத் தழுவ நீங்கள் உடற்பயிற்சிக்காக மெதுவான ஓட்டத்தில் ஈடுபட்டிருக்கிறீர்கள். அந்த நேரத்தில் இந்தியன் வங்கியின் தானியங்கி. காசாளும் நிலையத்தினுள் (ATM) உங்கள் IB கேஷ்கார்டைச் செலுத்தி உடனடியாக உங்கள் கணக்கிலிருந்து பணம் பெறுவதுதான் எவ்வளவு மகிழ்வான அனுபவம்.



சென்னையில் ஆறு இடங்களில் (ATM) கிளைகள் உள்ளன. **அண்ணாநகர், ஆழ்வார்பேட்டை, துறைமுகம், மயிலாப்பூர், ராயப்பேட்டை (டிரைவ்-இன்), திநகர்.**

இரவோ, பகலோ எந்நேரத்திலும், எந்நாளிலும் ஆண்டு முழுவதும், தானியங்கி காசாளும் நிலையங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் தகுதியைப் பெற, இந்தியன் வங்கியின் சென்னை கிளைகளில் ஏதாவதொன்றில் உங்கள் டெபாசிட் கணக்கில் குறைந்தபட்சம் ரூ. 2,000/- இருக்க வேண்டும்.

இந்த வாய்ப்பு இந்தியன் வங்கியின் சென்னை நகர வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே.

மேலும் விபரங்களுக்கு, இந்தியன் வங்கியின் கிளைகளை அணுகுங்கள்.

ADWAVE/IB/5047 TAM

இந்தியன் வங்கி

தலைமை அலுவலகம்:

31, இராஜாஜி சாலை, சென்னை-600 001.

பாரம்பரியமிகு சேவை - இந்தியன் வங்கியின் தனித்தன்மை.

கவர் ஸ்டோரி



முகம் முழுக்க வெட்கம். மனம் முழுக்கப் பரவசம். விழி முழுக்க வியப்பு. இதழ் முழுக்கப் புன்சிரிப்பு.

பெயர் வசந்தா தேவி. வயது முப்பத்தி ஒன்று. வசிப்பது ஒடாநிலை கிராமம். பெரியார் மாவட்ட மேப்பில் ஈரோட்டிலிருந்து முப்பது கிலோ மீட்டர் தூரத்தில் கொசு அளவுக்குக் குறிக்கப்பட்டிருக்கும். படித்தது ஏழாம் கிளாஸ். தொழில் விவசாயம். இதிலென்ன விசேஷம்?

இருக்கிறது.

அகன்ற நெடுஞ்சாலையில் வயசுப் பெண்கள் சும்மா நடந்து போனாலே திரும்பிப் பார்த்து விழுங்கிப் போகும் வீரமிகு விடலைகள் நிறைந்த பாரத தேசத்தில், வசந்தா படு கேஷுவலாக டிராக்டர் ஓட்டிப் போகிறார்! பின்னால் ட்ரைலர் இணைத்து விவசாயக் கூலிகளை கூட்டி வருகிறார். போதாக் குறைக்கு ராட்சஸன் மாதிரி அகன்று உயர்ந்த புல்லட்டில் ஏறி தட் தட்டென்று புகை கிளப்பி, ஜான்ஸிராணி மாதிரி அவ்வப்போது பதினெட்டு கிலோ மீட்டர் தள்ளி சிலுவம்பாளையத்தில் இருக்கிற அம்மா வீட்டுக்குப் போய் வருகிறார். அங்கே இவருக்குப் பன்னிரண்டு ஏக்கர் நிலம் இருக்கிறது. மஞ்சள், கரும்பு, சோளம், நெல் பயிர் விளைகிறது. இங்கே ஒடாநிலையில் - கணவர் நிலம் பதினாலு ஏக்கர். கணவரின் துணையோடு இருபத்தியாறு ஏக்கர்களைக் கட்டி ஆள்கிறார் வசந்தா.

வயல் வெளியில் ஒரு வசந்தப் புயல்!

வெள்ளித்திரையில் பேண்ட் போட்டு ஸ்கூட்டி ஓட்டும் பெண்களை பாப்கார்ன் கொறித்தபடி ரசிப்பது சாத்தியம். ஆனால் யதார்த்தம் வேறு.

"மொதா கொஞ்சநா கொஞ்ச



• "விவசாயம், லாபமானதில்லிங்க."



• கணவருடன் வசந்தா....



• பொம்பளை ஆளுங்க உதவியோட....

நஞ்ச கஷ்டமா பட்டேன்? எதிர வந்து காணாதது கண்ட மாதிரி முளிச்சிப் பாக்கறதும், ஈன்னு வாயத் தொறக்கறதும், 'த பார்றா'ன்னு பின்னாலேருந்து கூவுறதும், கடை கண்ணிக்குப் போனா கூடிக்கூடி பேசிக்கறதும்... பட்டணத்துல மோட்டார் ஓட்டறதல்லாம் சகசமா இருக்கலாமுங்க. இது பட்டிக்காடு பாருங்க... அதும் அஞ்சு வருசம் முன்னால வரைக்கும் வெறும் அறுப்பு, நடவு சோலி பாத்துக்கிட்டிருந்தவ தானே!"

வசந்தா தேவியின் வாழ்க்கை, ஓர் உணர்ச்சிமயமான நாடகத்தின் காட்சிகளை விடவும் இறுக்கமான சம்பவச் சூழ்நிலைகளைக் கொண்டது.

ஆரம்பப் பள்ளி நாட்களிலேயே அப்பா தவறிவிட, குடும்பத்தின் ஒரே ஆண் வாரிசான தம்பியும் சின்ன வயசிலேயே என்னதென்று கண்டு பிடிக்க முடியாத நோயால் இறந்து பட, ஏழாம் வகுப்போடு வசந்தாவின் படிப்பு முடிந்தது. மிகச் சாதாரண விவசாயக் குடும்பம். சோகமே உருவாக அம்மா. வாழ்க்கை, வயல் காட்டில்தான் என்பது தீர்மானமான விஷயம். களத்தில் இறங்குவது தவிர வேறு வழி?'

போதாக்குறைக்கு, பங்காளிகளால் பிரச்னை. மீசை வைக்காத ஆண் ஆனார் வசந்தா. வெறும் நிர்ப்பந்தங்களாலேயே தம் வாழ்க்கைப் பாதை வடிவமைக்கப் பட்டதாகச் சொல்லும் வசந்தா, வெளிச்சம் என்ற ஒன்றை முதன்முறையாகப் பார்த்தது திருமணத்துக்கு அப்புறம்தான் என்று உருகிச் சொல்கிறார்.

வசந்தாவின் குடும்ப நிலையை முற்றிலும் அறிந்தே, அவரைக் கைப்பிடித்த வடிவேலின் சிந்தனைகள் ஒரு சராசரித் தமிழனின் சிந்தனை போலில்லை.

"பொம்பளைங்கறதாலேயே எதிலயும் பின்னுக்கு நின்னுக்கறதுல நமக்கு சம்மதம் இல்லீங்க. ஆம்பளை செய்யற எதையும் பொம்பளையால நிச்சயமா செய்ய முடியும். ஏன் ஒதுங்கி நிக்கணும்? களை அறுக்கறா. நடவு போடறா. உரம் அடிக்கறா. டிராக்டர் ஓட்டி உழறதுலயும், வெளச்சலைக் கொண்டு போய் காசாக்கிட்டு வர்றதிலயும் என்ன தப்பு?

"இங்க இருந்து (ஓடா நிலை) சிறுவாம் பாளையம் பதினெட்டு கிலோ மீட்டரு. அங்கியும் பண்ணை இருக்கறதால தெனம் ரெண்டு வாட்டியாவது போய் வரவேணும். நைட்டு திரும்பயில ரோடு காலியா இருக்கும். 'சர்தான்... நீயும் டிராக்டர் ஓட்டக் கத்துக்க'ன்னுட்டு சொல்லிக் குடுத்தேன். பிரம்மாதமா ஓட்டுது இப்ப. டிராக்டர்ல ரிவர்ஸ் எடுத்துத் திருப்பறது அத்தினி சுலபமில்ல. நல்லா பழகினவங்களையே வாறிவுட்டும். இது இப்ப என்ன வுட நல்லா ஓட்டுது. சிரிக்கறவன் சிரிச்சிக்கிட்டே



"நீ கட்சில எந்த வேலையும் செய்ய மாட்டியோ?"

"என்ன விசயம் தலைவரே?"

" கால்ல விழுந்து நீ கும்பிடுறப்ப உடம்புல ஏழெட்டு சொடக்கு சத்தம் கேட்டுதே!"

— அம்பை தேவா

இருக்கட்டும். நம்ம வேலையை யாரும் வந்து செஞ்சித்தரப் போறதில்லை... இங்கத்தி ஆளுங்க கிண்டல் பண்ணா, மெட்ராஸ் லேருந்து பேட்டி எடுக்கறேன், போட்டோ புடிக்கறேன்னு வர்றவங்களும் இருக்கத்தானே இருக்கீங்க?"

வடிவேலு பத்தாம் வகுப்புதான் முடித்திருக்கிறார்!

காரியம் யாவிலும் கை கொடுக்கக் கணவர் இருப்பினும், ஒரு விவசாயியின் வாழ்க்கையைப் போல் இன்று மிக சோகமான விஷயம் இருக்க முடியாது என்கிறார் வசந்தா.

விவசாயம் மட்டுமே முக்கியத் தொழிலாக இருக்கும் ஒடா நிலை, சிலுவம்பாளையம் போன்ற ஒரு சதம் கூட நகரவாசனை எட்டிப் பார்க்காத கிராமங்களில் கூட இன்று விவசாயக் கூலிக்கு ஆட்கள் வருகிறதில்லை.

"டவுனுக்குப் போய் ட. கிளாஸ் கழுவித் தந்தாலும் தருவேன்; நடவு சோலி நமக்கு வேணாம்னு போயிடறாங்க. ஆளுங்களுக்காகக் காத்திருக்கறதை நானும் என் புருஷனும் என்னிக்கோ விட்டுட்டோம். கிடைக்கற நாலஞ்சு பொம்பளை ஆளுங்க உதவியோட நாங்களே வயல்ல இறங்கிடுறோம். அறுப்பு வேலை பெரிசில்லீங்க.... கொண்டு போய் 'சென்டர்'ல சேர்த்து, பணம் வாங்கறதுக்குள்ளாற போதும், போதும்னு ஆயிடும்.. மூட்டைங்களை டிராக்டர்ல ஏத்தி, ஓட்டிட்டுப் போயி அங்க தவங்கெடக்கணும்.. இன்னொரு விசயம், பொம்பளை டிராக்டர் ஓட்டறது சுளுவானதில்லைங்க. ரோட்டுல தூக்கித் தூக்கிப் போடும். சைக்கிள் ஓட்றா மாதிரி இதுக்கும் ஒரு 'நேக்கு' வேணும்.. வீட்டுக்கு வந்து உளுந்தா, கை, காலெல்லாம் வலி எடுக்கும் பாருங்க... ப்ச்!"

கடந்த இரண்டு ஆண்டுகளில் பயிரிட்ட மஞ்சள் இன்னும் விலை போகாமல் வீட்டில் முடங்கிக்கிடப்பதில் வசந்தாவுக்கு மிக வருத்தம். மிகவும் சரிந்து விட்ட விலைக்கு சரக்கைத் தள்ளிவிட விருப்பமில்லை. 'நாளை மீண்டும் விலை ஏறாமலா போய் விடும்?' என்று காத்திருக்கிறார்.

"இன்னைய தேதிக்கு விவசாயம் லாபமானதில்லீங்க. ஆனாலும் விட்டுற முடியாதில்ல? போராட்டம் தானுங்க. 'பொம்பளை,என்னா செஞ்சிடப் போறா'ன்னு கேட்கிறவங்க முன்னால, நின்னு காட்டணும் இல்லீங்களா? ஆனாலும் படிப்பு முடிக்க முடியாம போயிடுச்சேன்னுதாங்க வருத்தமாயிருக்குது. ஒரு வழியில அதையும் தேத்திக்கறேன்னு வெச்சிக்கங்க.. எங்களுக்கு மூணு பொட்டைப் புள்ளைங்க. மூணையும் படிக்க வெச்சிருக்கேன். நல்லாவும் படிக்குதுங்க. மொத ராங்க் வாங்குதுங்க! அதுங்க ஆசைப்படறமுட்டும் படிக்கட்டும். அப்புறம் நல்லபடியா கல்யாணம் பேசி முடிக்கோணும்..."

இரண்டு கிராமத்துப் பண்ணைகளுக்கும் டிராக்டரிலும் மோட்டார் சைக்கிளிலும் நாளெல்லாம் பறந்து கொண்டிருக்கிற வசந்தா, இதனால் பிள்ளைகள் படிப்பு பாதிக்கப் படக் கூடாதென்று வடுகப்பட்டி ராஜேந்திரா மெட்ரிகுலேஷனில் சேர்த்து, ஹாஸ்டலில் விட்டிருக்கிறார்.

கேலிப் பார்வை பார்த்த கிராமத்து மக்கள், விழித்துக் கொண்டு இவரை வியப்புடன் நோக்க ஆரம்பித்தது சமீபத்தில்தான்.

'முத்துமல்லா ரெட்டி அறக்கட்டளை' என்னும் அமைப்பு சமீபத்தில் இவரை 'முன்னோடி விவசாயி' என்று விருது அளித்து கௌரவித்து உள்ளது.

"என்னங்க பெரிசா செஞ்சிப்போட்டேன்? எங்க நெலம், எங்க டிராக்டரு, எங்க விவசாயம். இதை நான் செய்யறதுல என்ன பெருமைன்னு தெரியலை. ரொம்ப கூச்சமா இருக்குதுங்க! ஒரோரு பொண்ணுங்க ஏரோப்ளேனே ஓட்டறாங்க... டிராக்டர் ஓட்டறதை மட்டும் ஏன் அதிசயமா பாக்கறாங்கன்னு தெரிலீங்க."

டிராக்டர் ஓட்டுவது தமக்கு நிர்ப்பந்தம், கடமை என்றும் அதைப் பிறர் கேலி பேசுவது இயல்பு என்றும் மிகத் தெளிவாக சிந்தித்து முடிவுக்கு வந்திருக்கிறார் வசந்தா. அத்தகைய பேச்சுகளைத் தீரமாக எதிர் கொள்கிறார்.

நமக்குத்தான் ஆச்சரியம் மேலிடுகிறது. வசந்தாவின் கணவர் வடிவேலுவோ, "அட இதுல என்னங்க ஆச்சர்யம்? ஓடாநெல, தீரன் சின்னமலை கோட்டை கட்டி ஆண்ட பூமி இல்லீங்களா?" என்று நினைவூட்டுகிறார்!

சந்திப்பு : **பா. ராகவன்**

அட்டை வண்ணப்படம், படங்கள்

ஸ்ரீஹரி

பார்க் டவுன்

பெனிபிட் பண்ட் லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம். துவக்கம் 1985 Post Box No: 2806

223, தங்க சாலை, (கந்த கோட்டம் அருகில்) பார்க் டவுன், சென்னை-3 போன்: 582676, 564354

கிளை அலுவலகங்கள்: 2 கிழக்கு மாடவீதி, திருவான்மியூர், சென்னை-41 போன் 413582, 416417

P-995,இரண்டாவது அவென்யு, 12-வது மெயின்ரோடு ஜங்ஷன், அண்ணாநகர், சென்னை-40 போன் 6262656, 6280750



பிக்சட் டிபாசிட்

46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு *
13%	14%	15%	17%	18%	18.5%	19%	20%

21% 5 வருடங்கள் ரூ.50,000/- அதற்கு மேலும்

PB பாண்டு

முதலீடு	காலம்	திரும்பப் பெறும்தொகை
ரூ.25,000	60 மாதம்	ரூ.70,000

குழந்தைகள் கல்வி நலத்திட்டம்

L.K.G. முதல் கல்லூரி தொடக்கம் வரை

வைப்புத் தொகை ரூ. 5,100/-

3-ஆம் ஆண்டு நிறைவிலிருந்து தொடர்ந்து 12 ஆண்டுகள் ரூ.500/- பெறலாம். திட்ட டெபாசிட் காலத்திலிருந்து 16, 17-வது ஆண்டுகளில் தலா ரூ.1,000/- வீதமும், 18-ம் ஆண்டு துவக்கத்தில் ரூ.75,000/-ம் வழங்கப்படும்.

நலத்திட்டத்தின் 5% மாணவர்களுக்கு +2 அரசுத் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் ரூ.25,000/- பரிசாக ஒவ்வொருவருக்கும் நிதி நிறுவனம் வழங்கும்.

திட்டத்தின்பயனை உங்கள் மழலைச் செல்வங்களுக்கு வழங்கி மன நிம்மதி பெறுவீர்! மகிழ்ச்சி அடைவீர்!!

கனகதாரா டிபாசிட்

ரூ.50,000/- முதலீடு செய்வீர்
10ஆம் ஆண்டு முடிவில்
ரூ.50,000/- பெறுவீர்
அடுத்த 20ஆம் ஆண்டு முடிவில்
ரூ.1 கோடி பெறுவீர்

காமதேனு மாபெரும் திரும்பப் பெறும் திட்டம்

டிபாசிட் திட்டம் 15 ஆண்டுகள்	5-ம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை	10ம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை	15ம் ஆண்டு பெறும் தொகை
Rs.6,320	Rs.6,000	Rs.6,000	Rs.56,320

வெகுமதி முதலீட்டுத் திட்டம் - II

ரூ.3450/- செலுத்துவீர்.
252 மாதங்கள் நிறைவில்
ரூ.2 லட்சம் பெறுவீர்.

செல்வக்களஞ்சியம்

டிபாசிட்	காலம்	வருவாய்
Rs.7,500	15 Yrs	Rs.1,25,000
Rs.9,000		Rs.1,50,000

பொற்குவியல் திட்டம்

டிபாசிட்	காலம்	வருவாய்
மாதா மாதம் ரூ.100/-	25 Yrs	Rs.3,00,000

சேமிப்பு திட்டம் 10% P.a.

மறு முதலீட்டுத் திட்டம்

உங்கள் தொகை 45 மாதங்களில் இரட்டிப்பு ஆகும்

டிபாசிட்	12 மாதம்	24 மாதம்	45 மாதம்	60 மாதம்
Rs.1,000	Rs.1,184	Rs.1,430	Rs.2,000	Rs.2,535



பென்ஷனர் நலத்திட்டம் 20% P.a.
ரூபாய் 10 ஆயிரமும் அதற்கு மேலும்: காலம் 1 ஆண்டு
வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

தங்க நகை கடன்
Rs. 3,000 PER 10 GRAM
விடுகளின் பேரில் கடன் வழங்கப்படும்.
(உச்ச வரம்பில்லை)

ஆலோசகர்:
P. பாலசுப்ரமணியம், B.Sc.
முதன்மை அறங்காவலர்
கந்தகோட்டம், சென்னை - 3.

இயக்குனர் குழுத் தலைவர்:
R. விவேகானந்தன், B.Com.

❑ ரூ. 5/- செலுத்தி பங்குதாரர் ஆவீர். ❑ சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டும் ❑ வெள்ளி விடுமுறை

கி. ராஜேந்திரன்

5

தி. நகர் இளப் ரம்மி, டிஃபன்; இடையே நேரம் கிடைத்தால் அரசியல் பற்றிய அரட்டை என்று காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தார் ரங்கநாதன். "இத பாரு இன்பா, நீயாச்சு, உன் பெண் டாட்டியாச்சு, உன் வளர்ப்பு மகளாச்சு. என்னை இதுல எல்லாம் இழுக்காதே" என்றார்.

"அதெப்படி? நீங்கதானே சாயாவை எனக்குக் கட்டி வைச்சீங்க?"

"அதுல என்னோட குற்றம் என்ன? 'நல்ல இடம், அழகான பொண்ணு, பணக்காரக் குடும்பம்'னு தரகர் சொன்னார். 'அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்'னு ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கிட்டீங்க. ஆனா, 'கண்ணொடு கண் இணை நோக்கின், ஒக்கின் வாய்ச் சொற்கள் என்ன பயனும் இல'ன்னு சும்மா இருக்கத் தெரியலே. 'தனிச்சுப் பேசணும்'னு சொல்லி தோட்டத்துக்குப் போனீங்க. சரியா இருபத்தி மூணே கால் நிமிஷத்துக்குப் பிறகுதான் திரும்பி வந்தீங்க. நீ தாலி கட்ட சம்மதிச்சே, அவ கழுத்தை நீட்ட ஒப்புக்கிட்டா. இதுல என் பங்கு என்ன? ஆசிர்வாதம் தான்."

"அந்தப் பழைய கதை எதுக்கு? இப்ப இவங்க எங்கே போனாங்க? அதைச் சொல்லுங்க."

"எங்கிட்ட சொல்லிட்டா போறாங்க? ஏதோ வாக்குவாதம் நடந்துச்சு..."

"என்ன?"

"அவங்களையே கேட்டுக்க; நான் அதை எப்படி சொன்னாலும் தப்பாப்படும். சின்னி கோவிச்சுக்கிட்டு போனான். ரெண்டு நிமிஷம் கழிச்சு 'இன்பா வரும் போது சின்னி இங்கே இல்லேன்னா பூகம்பம் வெடிக்கும்'னு சொல்லிக்கிட்டு இவளும் கிளம்பினா..."

அவன் நெடுமூச்சுடன் சஃபாரியை மறுபடியும் அணிய ஆரம்பித்த போது கதவு திறந்து, ஒருவர் பின் ஒருவராக நுழைந்தனர். அவனைக் கண்டும் காணாதது போல் நடந்து, பாதை பிரிந்து சாயா சமையலறைப் பக்கமும் சின்னி படுக்கை அறைப் பக்கமுமாகப் போனார்கள். 'டமார்' என்று சின்னியின் அறைக்கதவு அறைந்து சாத்தப்பட்டது. இன்பா கை–கால், முகம் கழுவச் சென்றான்.

ஹனிமூன் முடிகிற வரை கூட சந்தோஷம் நீடிக்கவில்லை. "என்ன ஓட்டல் இது, எலி வளை மாதிரி! தங்கினா ஃபைவ் ஸ்டார் ஓட்டலில் தங்கணும்; இல்லே, வீட்டோடு இருக்கணும்" என்றாள். பணக்கார வீட்டுப் பெண். நடுத்தரவர்க்க வாழ்க்கைக்கு அனுசரித்துப் போக முடியாமல் தவித்தாள். மாமனார் தயவில் வாழ இன்பாவின் சுய மரியாதை இடம்தரவில்லை. மகளுக்குச் சின்னச் சின்ன வசதிகளைச் செய்து தர அவர் முன்வந்த போது கூடத் தடுத்தான்.

'வீட்டில் சும்மா இருந்தால் பைத்தியமே பிடித்துவிடும்' என்று கூறிக் கொண்டு அவள் வீதிக்கு வீதி முளைத்தெழும் இங்கிலீஷ் மீடியம் பள்ளிகளுள் ஒன்றில் டீச்சராகச் சேர்ந்தாள். நன்கு படித்த, பணக்கார வீட்டுப் பெண் என்பதே போதிய தகுதிச் சான்றிதழ் ஆயிற்று. சம்பளம் பிரமாதமாக ஒன்றும் இல்லை என்றாலும் கையெழுத்து மட்டும் நாலு இலக்கத்துக்கு வாங்கிக் கொண்டார்கள். அவளுடைய சேவா மனப்பான்மையைத் தாராளமாகப் புகழ்ந்தார்கள்.


'டீச்சர் வேலை பார்ப்பதில் அவளுக்கு அப்படியொன்றும் பிரமாத ஆர்வமில்லை; ஒரு குழந்தை பிறந்தால் சமுதாய நோக்கு டாட்டா கூறி விடும்' என்று நினைத்தார் ரங்கநாதன். 'கு.க. கடைப்பிடிக்கிறார்களோ?' என்று அவருக்கு சந்தேகமாயிருந்தது. கேட்க பயம். 'பதினாறில் குழந்தை பெற்று முப்பதில் பாட்டியாக வேண்டாம். ஆனால் சாயாவுக்கு இருபத்தாறு முடிந்து விட்டதாக ஜாதகம் சொல்கிறதே! உடல் வலிமை குன்றாதபோதே பெற்றுக் கொள்வதுதானே தாய், சேய் இருவருக்குமே நல்லது?' ஒருநாள் லீகோ செட் ஒன்று வாங்கி வந்து தரையில் உட்கார்ந்து பார்ட் பார்ட்டாக இணைத்து ஃபயர் இன்ஜின் உருவாக்கினார்.

"என்னப்பா இது?"

"பரவால்லேடா! பேரன் எதிரே இருக்கிறதா நினைச்சுக்கறேன்" என்றார்.

இன்பாவுக்குக் கண்கள் பனித்தன. ஒரு நல்ல டாக்டரைப் பற்றி விசாரித்துத் தெரிந்து கொண்டு போனான். முதலில் தன்னை சோதனைக்கு உட்படுத்திக் கொண்டு அப்புறம் சாயாவிடம் நயமாகப் பேசி அழைத்துப் போனான். "ரெண்டு பேர் கிட்டயும் ஒரு குறையும் இல்லே" என்றார் டாக்டர். "சில விஷயங்கள் விஞ்ஞான அறிவுக்கு அப்பாற்பட்டவை. உங்களுக்காக நான் பிரார்த்திக்கக்கறேன்" என்றார். அதற்கும் சேர்த்து கனிசமாக ஃபீஸ் வாங்கிக் கொண்டார்! 'இந்தச் செலவுக்கு புத்திரகாமேஷ்டி யாகமே பண்ணியிருக்கலாம்' என்று தோன்றியது.





'அனுபமாவிடம் கல்லூரி நாட்களில் தப்பாக நடந்து கொண்டதற்காக அவள் சபித்து விட்டாளோ, அதற்குரிய தண்டனையைத்தான் அனுபவிக்கிறோமோ?' என்று ரகசியமாக எண்ணினான். 'இது பகுத்தறிவும் இல்லை; பக்தி உணர்வும் இல்லை' என்று தோன்றியது. ஆண்டவன் அன்புமயமானவர் என்றுதான் அவன் கேள்விப்பட்டிருந்தான், படித்துமிருந்தான்.

பிள்ளை இல்லாக் குறைதான் சின்னியை அழைத்துக் கொண்டு போய் வளர்க்க வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கியதா? அல்லது சிறுவனிடம் ஏற்பட்ட பரிவு காரணமா? அல்லது இரண்டும் கலந்த ஒன்றா?

பச்சாதாபம்தான் காரணம் என்று ஒப்புக் கொள்ள சாயா மறுத்தாள். தன்னை

அவன்

குத்திக் காட்டுவதாக

நினைத்தாள். 'இதைவிட மலடின்னு

நேரடியாகவே திட்டியிருக்கலாம்' என்றாள்.

கோபமாகப் பேச எண்ணியவனுக்கு தொண்டை அடைத்தது; நா தழுதழுத்தது.

வருத்தப்படும் போது அவள் இன்னும் அழகாக இருப்பதாக எண்ணினான். நீரும் காற்றும் மட்டுமே உண்டு வாழ்கிறாளோ என்று கருதும்படி கொடி உடல். உயரமும் அதிகமில்லை. அளவான அங்கங்கள். அரும்பாக நெஞ்சகங்கள். அந்தக் கண்கள் மட்டும் மற்ற அவயவங்கள் போலன்றி நீண்டு அகன்று பெரிதாக ஆளை விழுங்கி விடுவது போன்ற பார்வையுடன் விளங்கின. பெண் பார்க்கப் போன போது அவனை அப்படியே கட்டிப் போட்டவை அந்தக் கண்கள்தாம். இப்போது

அவை குளங்களாகி

கரை

உடையப் போவதாக

அச்சுறுத்தின.

பரிவுடன் அணைத்தான். அவள் கண்ணீர் சட்டையை ஊடுருவி மார்பை நனைத்தது. அவள் முதுகைத் தடவியவாறே, "நீ நினைக்கிற மாதிரியெல்லாம் இல்லே. எத்தனையோ தம்பதி

கள், ஏன், ஏற்கெனவே குழந்தை இருக்கிறவங்க கூட தத்து எடுத்துக்கறாங்க. ஒரு ஏழைக் குழந்தைக்கு வாழ்வளித்த திருப்தியை அடையறாங்க..."

அவள் விலகினாள். சோகத்தைத் கோபம் வென்றது. "இந்தக் கதையெல்லாம் வேணாம். தத்து எடுத்துக்கறதுன்னாலும் பால் மணம் மாறாத பாலகனைத்தான் தேடுவாங்க. அல்லது உறவுல சொத்துக்களை அடைய சுவீகாரம் பண்ணுவாங்க. இப்படியா ஊர் பேர் தெரியாத, ஒன்றரைக் கழுதை வயசான தடியனை இழுத்துட்டு வரது? எங்க பிறந்தானோ, எப்படி வளர்ந்தானோ, என்னென்ன பழக்க வழக்கமோ!"

அவனுக்கும் ரோஷம் பிறந்தது. "ஆமாமாம்! பெர்னார்ட்ஷாவைப் படிச்சு, 'தி ஃபைனர் குவாலிடீஸ் ஆஃப் ஹிகின்ஸ்'னு பரீட்சையில் கட்டுரை எழுதி, நூறுக்குத் தொண்ணூறு வாங்கு; மை ஃபேர் லேடி பார்த்து, 'ஐ லவ் ஆட்ரி ஹெப்பர்ன், ஹௌ சார்மிங்'னு பாராட்டு. காரியம்னு வரும் போது கழன்று கொண்டு விடு!"

"அடக்கடவுளே! அந்தப் பையனுக்கு சோறு வடிச்சுப் போடறது போதாதுன்னு படிப்பு வேற சொல்லித் தரணுமா நான்!"

"ஏன் டீச்சர் வேலைதானே பார்க்கிறே!"

"அவனுக்கு கட்டுப் போட்டாலும் படிப்பு வராது. முதல்ல அட்மிஷனே கிடைக்காது. அப்படியே கிடைச்சாலும் நாலாம் கிளாஸ்லதான் சேர்த்துப்பாங்க. ஏழெட்டு வயசுப் பசங்களுக்கு மத்தியிலே குதிராட்டம் வளர்ந்திருக்கும் இவன் உட்கார்ந்தால் பாடம் ஏறாது; காம்ப்ளெக்ஸ் தான் ஏற்படும்."

"அப்ப வீட்டிலேயே சொல்லிக் கொடு. அடுத்த வருஷம் வயசுக்கு ஏத்த வகுப்பிலே அட்மிஷன் வாங்கிடலாம்" என்று வாதத்துக்கு முற்றுப்புள்ளியாக முத்தம் பதித்தான்.

"எனக்கு நம்பிக்கை இல்லே" என்றுதான் அவள் முத்தாய்ப்பு வைத்தாள். அந்தப்படி தான் நடந்தது. சாயா, சின்னி இருவருக்குமே சிரத்தை இல்லாத போது முன்னேற்றம் எப்படி ஏற்படும்?

உப்புக் காற்றில் நின்று விட்டு வந்தவனுக்கு குளித்தால் தேவலாம் போலிருந்தது. தண்ணீர் சிக்கனம் கருதி தவிர்த்தான். ஒரு போர் பம்பை நம்பி பன்னிரண்டு குடியிருப்புகள். டவலை நனைத்து உடலைத் துடைத்து, பவுடர் தெளித்து உள்ளாடை மாற்றி, லுங்கி இறுக்கினான்.

"சின்னி சாப்பிட வா" என்று அறைக் கதவைத் தட்டினாள். திறந்த வேகத்திலேயே கோபம் தெரிந்தது.

"எங்கடா போனே?"

"தம் அடிக்க."

"இன்னிக்கு தம் அடிப்பான்; நாளைக்கு பங் அடிப்பான். தொட்டில் பழக்கம்; திருட்டுத் துட்டு!"

"சாயா ப்ளீஸ்!"

"ஏன், நான் சொல்வதில் என்ன தப்பு? வேணும்னா உங்க அப்பாவைக் கேளுங்க. அவர்தான், 'நேற்றைக்கு சீட்டாட்டத்தில ஜெயிச்ச பத்து ரூபாயைக் காணோம்'னு சொல்லிட்டிருந்தாரு. 'ஒருவேளை ஒரு அவசரத்துக்கு வாசல்ல ஏதாவது வாங்க எடுத்தியோ?'ன்னு என்னைக் கேட்டாரு."

"ஏண்டா சின்னி?"


"நான் திருடலே, எனக்குச் சேர வேண்டிய கூலியைத்தான் எடுத்துக்கிட்டேன்."

"கூலியா? எதுக்குக் கூலி?"

"வீடு பெருக்கினதுக்கு; ஒட்டடை அடிச்சதுக்கு; பாத்ரூம் கழுவினதுக்கு; தண்ணீர் பிடிச்சு ரெண்டு மாடி ஏறி கொண்டு வந்து வைச்சதுக்கு."

சாயா பக்கம் பார்த்தான்.

"நிஜம்தான். அதுனால என்ன? நம்ம வீட்டை நாம சுத்தமா வைச்சுக்காட்டா வேற யார் வந்து சுத்தப்படுத்துவாங்க? ரெண்டு நாளா



வேலைக்காரி வரலே. பத்துப் பாத்திரம் நான் தேய்க்கலையா? அதுக்குக் கூலி கேட்கவா, திருடிட்டுப் போகவா?"

இன்பசாகரனுக்கு சாப்பாடு பிடிக்கவில்லை. அவன் உணவருந்தாததால் மற்றவர்களும் பட்டினி. சமையலறையில் எல்லாவற்றையும் மூடி, தவணை முறையில் பெற்ற ஃப்ரிஜ்ஜில் வைத்து விட்டு தரை அதிர நடந்து, படுக்கை அறைக்குச் சென்று கட்டிலில் விழுந்தாள் சாயா.

'அத்தனை சின்ன பாதங்களுக்கு இத்தனை வலிமையா! தரையை உதைத்து நடந்ததில் வலிக்குமே!' தடவிக் கொடுக்கலாம் போல மனசில் தோன்றிய எண்ணத்தை கஷ்டப்பட்டு ஒதுக்கினான் இன்பசாகரன்.

ரங்கநாதன் இரவல் வாங்கி வந்திருந்த ஜான் க்ரிஷாமில் ஆழ்ந்தார். சின்னி, ரிமோட்டில் ஸ்டார் மூவி சானல் தேர்ந்தெடுத்து அடல்ட் சினிமா பார்த்தான்.

இன்பா ஒரு இனிப் போர்டில் இரண்டு வெள்ளைத் தாள்கள் செருகி, கூர் சீவிய கலர் பென்சில்களுடன் சாய்வு நாற்காலியில் அமர்ந்தான். சின்னியிடம் பேச்சுக் கொடுத்துக் கொண்டே ரஸியாவின் வர்ணனைப்படி, அவள் கழுத்தைத் தன் கரத்தால் சுற்றி வளைத்த வன்முறையாளனின் படம் வரைய ஆரம்பித் தான்.

ஆர்ட்ஸ் காலேஜில் சேர்ந்திருக்க வேண்டி யவன். 'ஏதாவது பள்ளிக்கூடத்தில் டிராயிங் மாஸ்டர் வேலைதான் கிடைக்கும்' என்று அப்பா அந்த ஆசையில் மண்ணை அள்ளிப் போட்டார்... வளைகோடுகளும் நேர்க் கோடுகளும் வண்ணத்தில் தோன்றின...

''இதபாரு சின்னி! வேலைக்காரன்னு உன்னை நீயே நினைச்சுக்கிட்டா நீ வேலைக் காரன்தான். இந்தக் குடும்பத்துல ஒருத்தன்னு நினைச்சுக்கிட்டா உறவுமுறையை விட ஒட்டுதல் அதிகரிக்கும். அம்மா கோபப்படறா, வேலை வாங்கறான்னு நினைக்காதே. அவ ளுக்கு எப்படி உதவி பண்ணலாம், சந்தோஷப் படுத்தலாம்னு யோசி. அவ உன்னை மதிச்சு அன்பு செலுத்தற மாதிரி நடந்துக்க.''

"அன்பாவது மதிப்பாவது? என்கிட்ட எதுக் குக் காட்டணும்? ஆல்ப்டர் ஆல் நான் ஒரு உருப்படாத கழுதை; கஞ்சா கடத்தறவன்; மாஃபியா தாதாவா உருவாகப் போறவன்..."

ஹிப்பி தலைமுடி... நீலக் கண்கள்... நீண்ட முகம்... குழிவிழுந்த முகவாய்... காது வளையம்... பளபளத்த மூக்கு... பரந்த மார்பு... திரண்ட புஜங்கள்... உம்ம்... இன்னும் என்ன சொன் னாள், ரஸியா...?

''உனக்கு எப்படி புரியவைக்கிறது சின்னி. படிப்பு வராட்டி பரவால்லே; நல்லா படிச்சு முன்னேற முயற்சி பண்ணணும். முயற்சிதான் முக்கியம்; படிப்பு இல்லே. நீ சின்ஸியரா முயற்சி பண்றேன்னு தெரிஞ்சா, அம்மாவுக்கு அனுதாபம் பிறக்கும். அனுதாபம் அன்பா மாறும்.''

சின்னி சில கணங்கள் மௌனம் காத்தான். டீவியை அணைத்தான். தலைகுனிந்தான். அவன் விம்மி, விகம்பி அழும் குரல் கேட்டது. இன்பா எழுந்து போய் தட்டிக் கொடுக்க வில்லை. 'அழட்டும்; அழுது அழுதுதான் தாழ்வு மனப்பான்மையின் விளைவான வெறுப்பு உணர்வுகள் கரைந்து வெளியேற வேண்டும்.'

"இன்னிக்கு ஒரு பெண்ணைப் பார்த்தேன். உன்னை விட ரெண்டு வயசு பெரியவளா இருக்கலாம். பிளஸ் டூ. படுகட்டி." சொல்லி விட்டு சிந்தித்தான்: 'முஸ்லிம் அம்மாவுக்கும் ஹிந்து அப்பாவுக்கும் பிறந்த அவளுக்கும் மனோதத்துவ ரீதியிலான சில பிரச்னைகள் இல்லாமல் போகாது. ஆனாலும் எவ்வளவு சாமர்த்தியமாக நடந்து கொண்டாள்!'

"அவளை ஒரு ஆபத்து சூழ்ந்திருக்கு. இல் லாட்டி இங்கே அழைச்சு வந்திருப்பேன்; உனக்கு ஃபிரெண்டா இருக்கும்படி சொல்லி யிருப்பேன்."

"எனக்குக் கூடத்தான் உங்களால ஆபத்து ஏற்பட்டது; இன்பா போகுமிடமெல்லாம் ஆபத்தும் பின்னோடு வரும்!"

"ராமனிருக்குமிடம் அயோத்தின்ற மாதிரி தான்! என்ன செய்ய? என் தொழில் அப்படி!"

'சீஃபுக்கு ஃபோன் செய்து ரஸியாவுக்கு ஒரு காவல் ஏற்பாடு செய்ய வேண்டும்' என்று நினைத்தான். 'ஆனால் அவளை அழிக்க வேண்டும் என்று நினைக்கும் அசுரர்களுக்கு ஒரு மஃப்டி கான்ஸ்டபிள் எப்படி தடையாக முடியும்? நான் அவளை சந்தித்துப் பேசியதை வெடிகுண்டு வீரர்களில் யாரேனும் உளவு பார்த்தார்களா, இல்லையா?'

படத்துக்கு இறுதியாக சில டச்சஸ் கொடுத்தான். இங்கே ஒரு கோடு, அங்கே ஒரு புள்ளி, கழுத்தருகே கொஞ்சம் ஷேட். அவள் வர்ணனையை வடித்து எடுத்திருந்தான்.

"சரி, சரி. சாப்பிட வாங்க" என்றான் சின்னி. என்னோட முட்டாள்தனத்துக்காக எல்லாரும் வயத்தைக் காயப் போட்டுப் படுக் கறதுல என்ன லாபம்?"

"முட்டாள்தனம்னு ஏன் நினைக்கறே? உன் னோட கெட்டிக்காரத்தனம்தான் இவ்வளவு தர்க்கத்துக்கும் இடமளித்து, உன்னை நீயே உணர்வதற்கான உண்மைகளைக் கடைந்தெடுத் துக் கொடுத்திருக்கு! புரியுதா?"

"இப்ப பசி ஒண்ணுதான் புரியுது."

"படம் நல்லா இருக்கா பாரு" என்று பெரு மையாக நீட்டினான்.

"அட! உங்களுக்கு பென்ஜமின்னைத் தெரி யுமா?" என்று அதிசயித்தான் சின்னி. அவன் தலைநிமிர்ந்த போது முகத்தில் அதிசயத்தின் இடத்தை பயம் ஆக்கிரமித்துக் கொண்டிருந் தது!

(தொடரும்)

"கடை வீதியில் ஒரு ரஜினி ரசிகருக் கும், ஒரு கடைக்காரருக்கும் பயங்கர சண்டை...!"

"ஏன்...?"

"ரஜினி ரசிகர் ஒரு ரூபாய் கொடுத்து நூறு ரூபாய்க்கு பொருள் கேட்டிருக் காரு...!"

— தக்கலை சு. கந்தையா

காந்தி பிறந்த மண்

படு கமர்ஷியல் ஆகிவிட்ட சாதி ஒழிப்பு -மாசாரத்தை மீண்டும் எடுத்துக் கொண்டு, ஒட்ட ஒட்ட மசாலா அரைத்திருக்கிறார்கள். மிகவும் சென்ஸிடிவான விஷயத்தின் ஆழம் வரையெல்லாம் போகாமல், மேலாகக் கொரித்திருக்கிறார்கள்.

இரு வேஷங்களில் விஜயகாந்த். வெரைட்டி காட்ட முயன்று, ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறார். மிகவும் பாராட்டுக்குரியவர் அவரது மேக்அப் மேன். இளமை மின்ன வைத்திருக்கிறார். குறிப்பாக, கண்ணாடியும் இருநீறும் சொட்டுநீல வேட்டி-சட்டையுமாக இடைவேளைக்குப் பிறகு வருகிற காந்தி வாத்தியார் கேரக்டர் அத்தனை கலபத்தில் மறக்க முடியாதது.

சாதி வெறிக்கு எதிரான மிக நீண்ட வசனங்களை, அலட்டிக் கொள்ளாமல் பேசும்விதம் ரசனைக்குரியது. பூப்பறிக்கிற பாடலில் குறும்பு கொப்பளிக்கிறது.

நேர்மாறாக மகன் விஜயகாந்த் கேரக்டர். அடியோ, அடியோ, அடியென்று ஒரே துவம்ச மயம். நமக்கே முதுகுவலி வந்து விடும் போலிருக்கிறது!

விஷத்தைக் குடித்து விட்டு ஒன்றரை மணி நேர ஃப்ளாஷ் பேக் கதையைச் சொல்லி முடிந்தது. கடைசியில் 'குடித்தது விஷமல்ல; சர்க்கரைத் தண்ணி' என்னும் போது எரிச்சல் பொத்துக் கொண்டு வருகிறது

கொஞ்ச நேரம் வந்து போனாலும் ரேவதி, ரேவதிதான். நீளி போட படத்தில் இடமில்லாததுதான் சோகம்.

சுந்தர்ராஜனின் காமெடி ட்ராக் கவனிக்கப்பட வேண்டியது. 'சிக் ஜோக்' என்னும் வகையைச் சேர்ந்த, சிலருக்கு சிரிப்பும் சிலருக்கு அலுப்பும் தரக்கூடிய விஷயம். தொடர்ந்து நாலு படங்களில் இந்த ஸ்டைலைத் தொடர்ந்தால் - இது ஒரு ட்ரெண்டாகும் வாய்ப்பு தெரிகிறது.

அப்புறம் தேவா. பாடல்கள், எங்கோ கேட்டது போல் இருப்பினும் 'ரிதம்' புதுசாக இருப்பதால் தாளம் போட வைக்கின்றன.

படத்தின் ஹைலைட், ராஜராஜனின் கேமரா. மாறுபட்ட கோணங்கள், லைட்டிங் மூலம் பிரமிப்பு ஏற்படுத்துகிறார்.

கடைசியாக ஒரு விஷயம். தேசப் பிதாவுக்கும் இந்தப் படத்துக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. படத்தில், ஹீரோவின் அப்பாவுக்கு காந்தி என்று பெயர்! ஹே ராம்!

— ஆர்.பி.ஆர்.





நாடோடி மன்னன்

சரத்குமார், தமது அரசியல் நடுபாட்டை முதல் முறையாகத் திரையில் பகிரங்கப்படுத்தி உள்ளார். காட்சிக்குக் காட்சி, ஜெயலலிதா கட்-அவுட். வசனங்களில் இம்மி பிசகாத எம்.ஜி.ஆர். ஃபார்முலா. 'வாத்தியார் ஆசியும் அம்மாவோட அன்பும் இருக்கிற வரைக்கும்...' என்றெல்லாம் பொழிகிறார்!

'சரத்குமாரை ஜெயலலிதா 'ஷெரீப்' ஆக்கப்போகிறார்' என்று கொஞ்ச நாள் முன்பு உலவிய வதந்தியையே கதை ஆக்கியிருக்கிறார்கள்.

தம் முயற்சியால் ஒரு சாதாரண செருப்பு தைக்கும் தொழிலாளி எப்படி 'ஷூ மேக்கர் லெவி' ஆகி, பின் 'ஷெரீப்' ஆகிறார் என்பது கதை.

நடுவே ஒரு வில்லன், உயிர்த்தியாகம் செய்கிற உத்தம பத்தினி, கிளாமருக்கு மீனா, ஒப்புக்கு விக்னேஷ், சப்புக்கு கௌண்டமணி - செந்தில்.

தாடியுடன் சரத். தைரியமாக வயசான வேஷம் ஏற்றிருப்பதோடு, அலட்டாமல் செய்திருப்பது சிறப்பு. மகளுக்குக் காதல் பாடம் எடுக்கிற இடங்களில் அபார மெச்சூரிட்டி தெரிகிறது. ஒரு மாறுபட்ட கதையும் திறமைவாய்ந்த இயக்குநரும் கிடைத்தால் நிச்சயம் சாதனை புரியக்கூடும். ஏன் இன்னும் கிட்டவில்லை?

இரட்டை வேடங்களில் மீனா. அம்மா வேஷம் தமாஷாக இருக்கிறது. நவராத்திரியில் குழந்தைகள் போடுகிற மாமி டிரெஸ் மாதிரி. கிளைமாக்ஸில் வில்லனைச் சந்திக்க மகள் வேஷத்தில் போகிற போது மட்டும் நடிக்க வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அதைப் பயன்படுத்திக் கொள்ளாதது சோகம்.

மாறாக, டைட் குளோசப்பில் நெற்றி வியர்வையை மட்டும் காட்டி சூழ்நிலைக்குத் தேவையான இறுக்கம் ஏற்படுத்தும் கேமராமேனின் புத்திசாலித்தனம் பாராட்டும்படி உள்ளது.

வீடியோ கேஸட் - போட்டோக்களைக் காட்டி மிரட்டும் வில்லன் கேரக்டரை ரகுவரனை விட யார் சிறப்பாகச் செய்ய முடியும்? குரல் ஏற்ற இறக்கங்கள் மூலம் மட்டுமே வில்லத்தனம் காட்டி அசத்தி இருக்கிறார்.

மிகவும் த்ரில்லிங்காக எடுக்கப்பட்டிருக்க வேண்டிய படத்திற்கு ஒரு ஆர்ட் பிலிம் ரகத் திரைக்கதை எதைத்துக்காக? படா ஸ்லோ!

பாடல்களில் கோட்டை விட்டாலும் ரீ-ரெக்கார்டிங்கில் கொஞ்சம் தரம் காட்டியிருக்கிறார் தேவா. 'ஹாய் ஹாய்' பாடலில் பின்னணி இசை மட்டும் தூள்!

அ.தி.மு.க. அனுதாபிகளுக்குப் படம் பிடிக்கும்!

— ஆர்.பி.ஆர்



''மாமூல் வாங்கட்டும்; அதுக்காக இப்படியா?''

''ஏங்க? என்ன செய் தாங்க?''

''ஆயிரம் ரூபாய்க்கு மேல் மாமூல் தருபவர்களின் பெயர் கல்வெட்டில் பதிக்கப் படும்னு அறிவிச்சிருக் காங்க!''

— கே. ராஜா
திருவேங்கடம்

''நமக்கு கல்யாணம் பண்ணி வைத்த தரகரே நம்ம பொண்ணுக்கும் மாப்பிள்ளை பார்க்கவான்னு கேட்கிறார்டி!''

''வேண்டாங்க! அவளுக்கும் ஒரு உதவாக்கரையைப் பார்த்திட்டு வந்திடப் போறார்!''

— தேனி எஸ்.
மாரியப்பன்



கூவத்தில் குளித்தவர்!

ஆண்டு தோறும் வாழ்த்து!

● சென்னை, ஆர்.கே. நகர் தொகுதி எம்எல்ஏ மதுசூதனன், பொங்கல் திருநாளன்று தம் தொகுதியிலுள்ள அனைத்து இந்துக்களுக்கும் ஈகைத் திருநாளன்று அனைத்து முஸ்லிம்களுக்கும் கிருஸ்துமஸ் அன்று அனைத்து கிருஸ்தவர்களுக்கும் ஆண்டு தோறும் தவறாமல் வாழ்த்து அனுப்புவதை வழக்கமாகக் கொண்டுள்ளார்!

- ப. ராம் முருகன், சென்னை - 87

எப்படிப் பிடித்தேன்?

● பேச்சாற்றல் என்பது பீரங்கி மாதிரி. ஒரு ரப்பர் ஸ்டாம்ப் கூட இல்லாத அரசியல் கட்சியில் நுழைந்து, எனது பேச்சாற்றல் மூலம் தான் நான் ஜெர்மன் ஆட்சியைப் பிடித்தேன்!'

- சொன்னவர் ஹிட்லர். ('உலக செய்திகள் 1000' நூலிலிருந்து)

- ப. ஸ்ரீதரன், கே.கே.நகர்.

கிரிஸ்டல் கூவம்!


● கனிமரா நூலகத்தில், 'அக்கால சென்னைப் பிரமுகர்கள்' என்ற நூலைப் படித்துக் கொண்டிருந்தேன். அதில் பச்சையப்ப முதலியார் பற்றிச் சில வரிகளைப் படித்த போது அசந்து போனேன்!

'ஈஸ்ட் இந்தியா கம்பெனியில் வேலை பார்த்து வந்த பச்சையப்பர், தினம் காலை தம் வீட்டுக்கு அருகே ஓடும் கூவம் நதியில் குளித்துவிட்டுப் பின்னரே அலுவலகம் கிளம்புவார்' என்கிற வரிகளே என் வியப்புக்குக் காரணம். அன்று கூவம் அத்தனை சுத்தமாக இருந்திருக்கிறது!

- வி. பிரபாகர், சென்னை - 41

சீதக்காதி

● அம்பத்தூரில் ஓர் ஓட்டலுக்குக் காப்பி சாப்பிடச் சென்றேன். என் எதிர் டேபிளில் வந்து உட்கார்ந்த இளைஞர்,




"அம்மா! கூரைக்குப் பக்கத்திலிருந்த ஏணியைத் தள்ளிட்டேன்!"

"எனக்கு வேலை இருக்கு. அப்பாவைக் கூப்பிட்டு எடுத்துவெக்க சொல்லு!"

"அப்பா கூரையிலே தொங்கிட்டு இருக்காரே!"

- ஏ. கிரேஸியாஸ், சென்னை - 21



"உங்க படத்துல சண்டைக்காட்சிகள் எப்படி இத்தனை தத்ரூபமா அமைந்தது?"

"படப்பிடிப்பை காங்கிரஸ் கட்சி ஆபீஸ் வாசல்ல நடத்தினோம். அதான்!"

- புளியரை கணேசன், சென்னை - 30

மெட்ராஸ் மசாலா மெட்ராஸ் மசாலா


கல்லாவில் இருந்தவரிடம் கெஞ்சிக் கொண்டிருந்தார்.

"முதலாளி, எட்டணா குறையுது. அப்புறம் தாரேன். இப்ப காப்பி கொடுங்க. தலை ரொம்ப வலிக்குது!"

"முழு காசு இருந்தா காப்பி குடி. இல்ல, எழுந்து போயிடு!"

- கவனித்துக் கொண்டிருந்த நான் குறுக்கிட்டு, "அவருக்கு ஒரு காப்பி குடுத்துடுங்க. நான் காசு தரேன்" என்றேன்.

"நீங்க எதுக்கு எனக்குக் காசு தரணும்? வேணாம்!" - முரண்டு பிடித்தார்.



"அந்த லாரி டிரைவரை ஏன் இப்படிப் போட்டு அடிக்கறாங்க?"

"மணிரத்னம் வீட்டுக்கு எதிர்ல 'பாம்... பாம்'னு ஹாரன் அடிச்சாராம்!"

- இரத்ன. மனோகரன், சென்னை - 99



"நிதி இலாகா ஆலோசகரை ஏன் டிஸ்மிஸ் பண்ணிட்டாங்களாம்?"

"பண வீக்கத்தைக் குறைக்க என்ன வழின்னு கேட்டா, வெந்நீர் ஒத்தடம் கொடுங்கன்றாராம்!"

- என்.கே. பாலசுப்பிரமணியன், சென்னை - 26




"கிளின்டன் அறிக்கை விட்டிருக்கார் படிச்சியா?"

"இல்லையே, என்னவாம்?"

"உனக்கும் எங்கம்மாவுக்கும் நடுவுல நடுவரா செயல்பட அவர் தயாராம்!"

- புனியபரை கணேசன், சென்னை - 30



"பிளேனை ஹைஜாக் பண்ணியது ஒரு ஆட்டோ டிரைவராம்!"

"எப்படி தெரிஞ்சுது?"

"டில்லியிலிருந்து கிளம்பின பிளேனை ஐரோப்பா, அமெரிக்கா வழியா பம்பாய்க்கு ஓட்டச் சொன்னானாம்!"

- ஆர். ஷாலினி, சென்னை - 33

"அட, பரவாயில்லப்பா. நீ காப்பி குடி. நான் பிறகு காரணம் சொல்றேன்."

அவர் கேட்கவில்லை. சர்வர் காப்பியை வைத்துப் போன பின்பும் "நீங்க எதுக்கு குடுக்கணும்?" என்று விடாமல் கேட்டுக் கொண்டே இருந்தார்.

ஒரு வழியாகச் சமானித்து சாப்பிட வைத்தேன். குடித்து முடித்ததும் மறுபடி கேட்டார்.

"நீங்க எதுக்கு எனக்கு காப்பி வாங்கித் தரணும்?"

"உங்க வாட்ச் 'ஸ்ட்ராப்'பில் எம்ஜியார் படம் ஒட்டி இருப்பதைப் பார்த்தேன். நானும் எம்ஜியார் ரசிகன்! நீங்க அந்த ஆளிடம் கெஞ்சுவது எனக்குப் பிடிக்கவில்லை... அதனால் தான்!" என்றேன்.

அவர் கண்களில் கண்ணீர் எட்டிப் பார்த்தது. நா தழு தழுக்க அவர் சொன்னார்.

"பார்த்தீங்களா? தலைவர் செத்துப்போய் இத்தனை வருஷம் கழிச்சும் உதவறாரு!"

- லா.ரா.சப்தரிஷி, சென்னை - 53

மலையாளத் தெருமுனை

● இந்தி தொலைக்காட்சித் தொடர் 'Nukkod' ('தெருமுனை') மலையாளத்தில் 'டப்' செய்யப்பட்டு, 'கவலா' என்ற பெயரில் 'ஏஷியா நெட்'டில் ஒளிபரப்பாகிறது. இதைத் தயாரித்திருக்கும் என்.மோகன் தாஸ் ஒரு சென்னைவாசி. ஆர்.கே.கலர் பிலிம் லேபரட்ரியின் உரிமையாளர். இவரிடம் அதிநவீன "Avid System" இருப்பதால் மொழியாக்க விஷயத்தில் தூள் கிளப்புகிறார்! முதல் வாரத்திலேயே 'கவலா'வுக்கு பயங்கர வரவேற்பாம்!

- கா.ரா. குமார், சென்னை - 116

சுவரெல்லாம் சித்திரங்கள்!

● பாரிஸ் கார்னர் சரவண பவன் ஓட்டலுக்கு ஒருதரம் போய்வந்தால் இந்தியாவிலுள்ள அத்தனை அம்மன் கோவில்களுக்கும் போய் வந்த உணர்வு ஏற்பட்டுவிடும்!

கங்காதேவி, காளஹஸ்தி பிரசுன்னாம்பிகை முதல் தமிழகத்து அம்மன்கள் அத்தனை பேர் உருவங்களையும் ஆள் உயர ஓவியங்களாக வரைந்து மாட்டி உள்ளார்கள்!

- டி.என். பாலகிருஷ்ணன், சென்னை -91

வேண்டுகோள்

யானை முகனே!
சங்கத் தமிழ் மூன்றும்
தருகிறேன்...
நீ எனக்கு
பாலும், தெளிதேனும்
பாகும் பருப்பும்
உடனடியாகத் தா!

- அக. கிருஷ்ணன், வியாசர் நகர்.

மதுரைக்காரர்களே!

அடுத்து உங்கள் முறை. சென்னை வாசிகளை அடுத்து இந்தச் சிறப்புப் பக்கங்களில் இடம்பிடிக்கப் போவது நீங்கள்தான்!

கதை, கட்டுரை, கவிதை, துணுக்கு, ஜோக் என்று ஏதாயினும் சரி.


போஸ்ட் கார்டில் (மட்டும்) எழுதி, மறக்காமல் முகவரிப் பகுதியில் 'மதுரை துணுக்குகள்' என்று குறிப்பிட்டு அனுப்புங்கள்.

அதிகபட்சம் நான்கு வாரங்கள் நீங்கள் புகுந்து விளையாடலாம்! இடம்பெறும் துணுக்குகளுக்குச் சன்மானம் உண்டு.

மிகச்சிறந்த துணுக்காக ஆசிரியர் தேர்ந்தெடுக்கும் ஒன்றுக்கு ரூ.100/- சிறப்புப் பரிசு.

ஜமாயுங்கள்!

- ஆசிரியர்





1995 செப்டம்பர் 3
யுவ ஆவணி 18
மலர் : 54
இதழ் : 5

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்.




வரலாறு காணாத விபத்து!

“பெரோஸாபாத் அருகே நடந்தது ஒரு விபத்துதான்; அதை நாம் விபத்தாகவே நோக்க வேண்டும்....” என்று பிரதமர் சற்று கோபமாகவே பேசியிருக்கிறார்.

கோரமான ரயில் விபத்துகள் நடப்பதும், நூற்றுக்கணக்கான உயிர்கள் பலியாவதும், தொடர்ந்து அரசுத் தரப்பில், ‘மனிதத் தவறினால்’ அது நிகழ்ந்ததென அறிக்கை விடுவதும் வழக்கமாகிவிட்டன.

மனிதத் தவறுகள் ஏன் நடக்கின்றன என்பதைச் சற்று ஆராய்ந்தால், அத்தவறுகளுக்குத் தனியொரு மனிதன் மட்டுமல்ல; ரயில்வே நிர்வாகமும் அதை நடத்தும் அரசுமே பொறுப்பு என்பது தெளிவாகும்.

ரயில்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுவதும் அவை நவீனமயமாக்கப்படுவதும் அவசியமான முன்னேற்றங்கள்தான். ஆனால், அவற்றுக்கு ஏற்ப பாதுகாப்பு, எச்சரிக்கை நடவடிக்கைகளும் பெருக வேண்டும். ஏற்கெனவே நடைமுறையிலுள்ள பாதுகாப்பு அம்சங்கள் மேம்படுத்தப்பட வேண்டும்.



ஆனால், நடந்துள்ளது என்ன....? பல பழைய பாதுகாப்பு முறைகளை நாம் கைவிட்டு விட்டோம்; அவற்றுக்குப் பதில் புதிய, நவீன வசதிகளை அமுல்படுத்த வில்லை.


உதாரணமாக, ஒரு ரயிலின் கடைசி பெட்டியில் மஞ்சள் கோடுகள் வரைந்தும் அபாய விளக்குகள் பொருத்தியும் எச்சரிப்பது உண்டு. சிக்னல் வசதிகள் பெருகிய பிறகு, இவ்வழக்கம் கைவிடப்பட்டு, எந்தப் பெட்டியை வேண்டுமானாலும் கடைசிப் பெட்டியாக இணைத்துக் கொள்கிறார்கள்.

எதிர்பாராத காரணங்களால் ரயில் நின்று போனால், சுற்றுவட்டாரத்தில் இருப்போரின் கவனத்தைக் கவர, இஞ்சின் டிரைவர்கள் அதிர்வேட்டுகளை முன்பு வெடிப்பார்கள். இப்போது அந்தப் பழக்கமும் கைவிடப்பட்டுவிட்டது. அதற்குப் பதிலாக டிரைவர்களுக்கு செலுலர் போன் தரப்பட்டுள்ளதா என்றால், அதுவும் இல்லை!

சிக்னல்கள் என்னதான் நவீனமாக இருந்தாலும் அவற்றை இயக்குபவர்கள் எத்தகையவர்கள் என்பதைப் பார்க்க வேண்டும்.

சிக்னல் சரியாக இயக்கப்படாததால்தான் இந்த விபத்து நடந்துள்ளதாகத் தெரிகிறது. சம்பந்தப்பட்ட சிக்னலை இயக்கும் பொறுப்பில் இருந்த நபர், தொடர்ந்து நீண்ட ஷிஃப்டுகளில் பணியாற்றி, களைத்துப் போயிருந்திருக்கிறார்.

ஊழியர்கள், தொடர்ந்து ஏழு இரவுகள் கூட நைட் ட்யூட்டி பார்ப்பதாகத் தெரியவந்துள்ளது. நைட் டியூட்டி பார்ப்பவர்கள் பகலில் ஓய்வெடுத்துக் கொண்டு பணிக்கு வருவார்கள் என்பது எதிர்பார்ப்பு. 'உண்மையில் அப்படி



நடக்கிறதா?' என்பது ஒருபுறமிருக்க, ஏழு இரவுகள் தொடர்ந்து ஒருவரைப் பணியில் இருத்துவது அபாயத்தில்தான் கொண்டுவிடும்.

நிர்வாகச் சீர்திருத்தங்கள் மூலமாக இத்தவறுகள் தவிர்க்கப்படலாம். ஆனால், பதவி உயர்வு என்பதற்கு தகுதி மட்டுமே அடிப்படையாகும் வரையில் அச்சீர்த்திருத்தங்களால் முழுப்பயன் இராது. அவ்வப்போது மருத்துவப் பரிசோதனை நடத்தி, ஊழியர்களின் நடத்தையையும் கண்காணிக்காவிட்டால் விபத்துகள் தொடரவே செய்யும்.

'மிக எளிய வேலையைச் செய்பவரும் சமுதாயத்தின் ஒட்டுமொத்த அமைப்புக்கு முக்கியமானவர். அவரது ஈடுபாடும் உழைப்பும் இன்றியமையாதவை...' என்ற சிந்தனை வளர வேண்டும். அதன் அடிப்படையில் 'உழைப்புக் கலாசாரம்' உருவாக வேண்டும். அப்போதுதான் ரயில்வே போன்ற பொதுச் சேவை அமைப்புகள் சிறப்பாக இயங்க முடியும்.

இந்த உணர்வை, இந்தியர்களிடையே பெருக்கும் நோக்கில்தான் மனிதவள மேம்பாட்டுத் துறை என்பதாக ஒன்றை ஏற்படுத்தி கல்வி இலாகாவை அதன் கீழ் கொணர்ந்தார் ராஜீவ் காந்தி.

ஆனால், இலாகா மாற்றம்தான் நடந்ததே தவிர, மனித வளம் மேம்படவில்லை என்பதையே அடிக்கடி நடக்கும் கோர விபத்துகள் உணர்த்துகின்றன.

இந்திய மனித வளத்தில் நம்பிக்கையின்றி, ரயில்வே அமைச்சர் மருத்துவ சிகிச்சைக்கு வெளிநாடு போகிறார். இவர் தலைமையிலான இலாகாவை நம்பி நாம் எப்படி ரயிலில் பயணம் செய்வதாம்...?



சென்னை பல்கலைக் கழகத்தில் இவ்வாண்டு முதல் 'க்ரெடிட் சிஸ்டம்' என்ற புதிய பாடமுறை அறிமுகமாகிறது. வெளிநாடுகளிலும், இங்கேயே கூட ஐ.ஐ.டிக்களிலும் ஏற்கெனவே புழக்கத்தில் இருக்கும் இந்த சிஸ்டத்துக்கு கல்லூரி ஆசிரியர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளதால் பல்கலைக் கழகத்தில் 21 அறிவியல் பட்ட மேற்படிப்புப் பிரிவுகளில் மட்டும் இந்தப் புதிய முறை அறிமுகமாகிறது.

மாணவர்களுக்கு மகிழ்ச்சி தரும் முறை இது! ஒரு செமஸ்டரில் 4 பேப்பர்கள் இருந்தால் இரண்டை இப்போது எழுதிவிட்டு, மீதியை அப்புறம் மெதுவாக, நன்றாகப் படித்து எழுதிக் கொள்ளலாம்!

எழுத வேண்டிய பரீட்சைகள், அவற்றுக்குரிய பாயின்டுகள் என முன்கூட்டியே திட்டமிட்டுக் கொண்டு, ஒவ்வொரு மாணவரும் குறைந்தபட்சம் ஒன்பது பாயின்டுகள் பெறும் வகையில் பரீட்சை எழுத வேண்டும். (மொத்த பாயின்டுகள் 72).

இதனால், சரியாகப் படிக்க முடியாமல் எல்லா பரீட்சைகளையும் எழுதி 'சொத்து' சேர்க்கும் (அதாங்க, அரியர்ஸ்!) பிரச்னை தீர்ந்தது! ஆனால், இரண்டு வருட கோர்ஸை, நான்கு வருடங்களில் முடித்தாக வேண்டும்.

- சித்தார்த்

அனுபவம் புதிது!

சமீபத்தில் தமிழக அரசு நடத்திய 'புரொபஷனல் கோர்ஸ்' நுழைவுத் தேர்வு முடிவுகள் வெளியாகி, 'கவுன்ஸலிங்' நடந்தது. மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். கால்நடை மருத்துவக் கல்லூரி அட்மிஷனில் நமக்குக் கிடைத்த அனுபவம் மிகவும் வித்தியாசமாக இருந்தது.

வசதியான இருக்கைகள் கொண்ட அண்ணா ஆடிட்டோரியம். சரியாக ஒன்பது மணிக்கு 'கவுன்ஸலிங்' ஆரம்பம். மிக மெல்லிய வால்யூமில் நாதசுர இசை. மாணவர்களையும் பெற்றோர்களையும் அன்புடன் வரவேற்று, 'கால் லெட்டரைக்' கொடுத்து வருகையைப் பதிவு செய்து, 'மதியம் ஒன்று முப்பதுக்கு வாருங்கள், அட்மிஷனை துவக்கலாம்' என்ற கண்ணியமான அறிவிப்பு தந்தது மனதுக்கு மிக இதம்!

மதியம் 1:30

மாணவர்கள் நுழைவுத் தேர்வில் வாங்கிய மதிப்பெண்கள் படி தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மொத்த இடங்கள் இத்தனை, ஓ.சி., பி.சி., என்று ஒவ்வொரு பிரிவினருக்கும் ஒதுக்கப்பட்ட இடங்கள், மாணவரின் பெயர், நுழைவுத் தேர்வு எண், வாங்கிய மதிப்பெண் என்று மைக் மூலமாக அறிவித்த கண்ணியம் – இவை அனைத்துமே நேர்மையாக, பொது மக்களின் கண் எதிரிலேயே நடந்த தேர்வுகள்! 'சலானை மூன்று இடத்தில் பூர்த்தி செய், பணத்தை அங்கே கட்டு, கவுன்டர்ஃபாயிலை இங்கே காட்டு, கையெழுத்தை அங்கே வாங்கு' என்ற கழுத்தறுப்பே இல்லை!

மேடையில் அட்மிஷனுக்குண்டான பணம் வாங்கி, உடனே ரசீது தரப்பட்டு, அட்மிஷன் ஓவர்!

ஃபென்டாஸ்டிக்! ஹாட்ஸ் ஆப்!

இதே போலத்தான் கோவை விவசாயக் கல்லூரியிலும்.


காலை ஒன்பது மணி. மாணவர்களை மட்டும் உள்ளே அனுமதித்து, சான்றிதழ்களைச் சரிபார்த்து, செலக்ஷனை அறிவித்து, அடுத்த வாரம் ஒரு குறிப்பிட்ட தினத்தன்று அட்மிஷன் ஃபீஸாக ஒரு தொகையை வாங்கிக் கொண்டனர். கல்லூரி வளாகத்திலேயே ரூ. 20/- கட்டினால் மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை.

அடுத்த வாரம் குறிப்பிட்ட தினத்தன்று போனால் டோக்கன் சிஸ்டம் – சான்றிதழ்களை வாங்கிக் கொண்டு காஷ் கவுண்டரில் பணம் கட்டச் சொன்னார்கள். ரசீதைக் கொண்டு வந்து காட்டியபின் ஆகஸ்டு 15க்குள் உங்களுக்கு எந்த காலேஜ் என்ற விவரங்கள் தபாலில் வரும் என்ற சலிக்காத, கண்ணியமான அறிவிப்பு.

எல்லா கல்லூரிகளிலும் இதனைப் பின்பற்றலாமே!

- எஸ். ராமகிருஷ்ணன்

Kalki Shopping Page



பார்வதாஸ் சாரீஸ்

மதுரை சுங்குடி புடவைகள்

1, வடக்கு மாட வீதி,
மைலாப்பூர்,
சென்னை – 600 004.

ஸ்டாக்கிஸ்ட்:-

RANEE SAREES Madurai - 12.

தேவேந்திரா சாரீஸ்

27 ஏலகந்தப்பன் தெரு, சென்னை - 3.

சென்னை விலைக்கே கிடைக்கும்

WE WELCOME YOU TO THE WORLD OF KARISHMA CHURIDARS AND COTTON SAREES

OUR PRODUCTS

1) Karishma Churidars
2) Karishma Sarees
3) Andhra Pochham Palli Cotton Sarees
4) Belgaum Polyster (Saradha) Sarees
5) Seiko Sarees
6) Banaras cotton sarees
7) Beekay Sarees (New Product)

AALURI SAREES

The Shop exclusively for Ladies

(DEALER OF KARISHMA CHURIDARS & SAREES)
WHOLESALE & RETAIL
4/24, R.K. MUTT ROAD, LUZ BAZAAR,
MYLAPORE, MADRAS - 600 004.
NEXT TO SRINIVAS SILK
PHONE : 4935791

WE WELCOME CITIBANK (+) CARDS

KOMALA ADS

பென்ஷனர் பாதுகாப்புத் திட்டம்

பிக்சட் டெபாசிட்

வட்டி **36%**

டெபாசிட் செய்யும் தேதியன்றே மாத வட்டிக்கும் அசல் ரீபண்டிற்கும் செக் தருகின்றோம். டெபாசிட்டுகள், கம்பெனி சொத்தின் மீதான தொடர் உரிமையால் பாதுகாக்கப்படுகின்றன.

பெஸ்ட் பெனிபிட் அண்ட் கேரண்டி பண்ட் டிரஸ்ட்

Regd. (Estd 1979)

3வது மாடி, சாந்தி காம்ப்ளெக்ஸ்,
26, ரங்கநாதன் தெரு, T. நகர்,
சென்னை - 600 017.
போன் : ஆபீஸ் : 4348560 வீடு : 434 7025.

Prof :V.VIVEKANAND
Formerly I.A.S.
Managing Director

Dr.PARAMESWARI,
M.B.B.S.
Chairman.

KOMALA ADS.



புறக்கணிக்கப்படும் தமிழ் சினிமா!



• உச்சிவெயில் படக்காட்சி

"ஏ.வி.எம். சரவணன், கே. பாலசந்தர், இந்துமதி, திருமதி ஒய்.ஜி.பி., ஜெயகாந்தன் - இத்தனை பேர் பரிந்துரை செய்த என் ஸ்கிரிப்டை திரைப்பட வளர்ச்சிக் கழகம் நிராகரித்து விட்டது!" என்று வருத்தப்பட்டார் ஜெயபாரதி.

ஜெயபாரதி?

'குடிசை,' 'ஊமை ஜனங்கள்', 'உச்சிவெயில்' போன்ற கலைப் படங்கள் எடுத்து, முத்திரை பதித்தவர்.

"1996 ஜனவரியில் உலக திரைப்பட விழா நடக்கப் போகிறது. 'இந்தியன் பனோரமா'வில் ஒரு தமிழ்த் திரைப்படம் கூடத் திரையிடப்படப் போவதில்லை. இது நமக்கு எத்தனை அவமானம்? தரமான தமிழ்ப் படம் எடுக்கத் துடிப்பவர்கள் என் போல் பலர் இருக்க, உதவி புரிய மட்டும் ஏன் இப்படித் தயங்குகிறார்கள் என்பதுதான் புரியவில்லை" என்கிறார்.

என்ன விஷயம்?



• ஜெயபாரதி

தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத் தலைவர் டி.வி.எஸ். ராஜூ, கொஞ்ச நாள் முன்பு 'கல்கி'யில் ஒரு பேட்டி தந்திருந்தார். அதில், 'திரைப்பட வளர்ச்சிக் கழகத்தில் ஏராள நிதி இருப்பதாகவும், மலையாள, வங்காளத் திரைப்படத் துறையினர் அதைப் பயன்படுத்தி, நல்ல படங்கள் எடுப்பதாகவும், தமிழர்கள் ஏனோ இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வதில்லை' என்றும் கூறி இருந்தார்.

"அந்த பேட்டியைப் படித்ததும்தான் நான் உற்சாகத்துடன் 'முப்பது வருஷம்' என்று ஒரு ஸ்கிரிப்ட் எழுதி அனுப்பினேன். பிராந்திய பரிசீலனைக்குழு (முதல் வரி நபர்கள்) நிதி உதவிக்கு சிபாரிசு செய்தும், என் ஸ்கிரிப்ட் ஏற்கப் படவில்லை என்று ஒரு வருடம் கழித்து சாவகாசமாக பதில் போட்டிருக்கிறார்கள்!" என்று வருத்தப் படுகிறார் ஜெயபாரதி.

ஏனாம்?

"பிராந்தியக் குழுவால் சிபாரிசு செய்யப்பட்ட ஸ்கிரிப்டைப் பரிசீலித்தவர் ஓர் அரசு அதிகாரி. அவருக்கு தமிழர்கள் என்றால் பிடிக்காதாம்! என்ன அக்கிரமம்! நான் தலைவர் டி.வி.எஸ். ராஜூவிடம் நியாயம் கேட்கப் போனேன். அவரோ, 'அடுத்த முறை பம்பாய் போகும் போது விசாரிக்கிறேன்' என்று கேஷுவலாகச் சொல்லி விட்டார்!"

தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகம், கடந்த 30 வருடங்களில் மூன்றே (தாகம், திக்கற்ற பார்வதி, மறுபக்கம்) படங்களுக்குத்தான் நிதி உதவி செய்திருக்கிறது என்பது கவனிக்கப்பட வேண்டிய விஷயம்.

"இன்றைக்கு வரும் வியாபாரப் படங்களில் ஒரு பாடல் காட்சிக்குச் செலவாகிற பணத்தில் ஒரு தரமான முழு திரைப்படமே எடுத்து விட முடியும்! அதற்கு உதவக் கூட திரைப்பட வளர்ச்சி நிறுவனங்கள் முன்வராததுதான் சோகம்!" என்றார் ஜெயபாரதி.

- ப்ரியன்

டிங்... டிங்...

"படிச்ச ஸ்கூல்லயே வாத்தியாரா வர்றது ரொம்பப் பெரிய விஷயம். அபூர்வமானதும் கூட. நம்ம புது வாத்தியார் தெய்வசிகாமணி என் மாணவன். சொல்லிக்கறதுல எனக்கு எவ்வளவு பெருமையா இருக்கு தெரியுமா? குயவன் கை வண்ணம் பொறுத்து பானை அழகு பெறும். வாத்தியார் கைவண்ணம் பொறுத்தே மாணவனின் அறிவு மெருகேறும். என் தெய்வசிகாமணி ஒரு கைதேர்ந்த குயவன்..."

மாணவமணிகள் கைதட்ட....

எனது கவனம் சற்று முன் ஒலித்த 'ஸ்கூல் பெல்'லில் இருந்தது. கிட்டத்தட்ட, பத்து, பனிரெண்டு வருடம் முன்பு ஒலித்தது போலவே மாசுகுறையாத வெண்கல ஒலி. ஜன்னல் வழியாகப் பார்க்கையில்... தாழ்வாரஇறக்கத்தில் தோசைக் கல் சைசுக்கு தொங்கிக் கொண்டிருந்தது அந்த ஸ்கூல் பெல்.

அந்தக் காலகட்டத்தில் சரியாக உயரம் எட்டாத இந்த ஸ்கூல் பெல்லை, எம்பி ஒரு முறையாவது மணிக்கட்டையால் அடித்து விட வேண்டும் என எவ்வளவு ஏக்கப்பட்டிருப்பேன் தெரியுமா?

படிப்பு முடியும் வரை நிறைவேறவே இல்லை. அந்தக் கசப்பான ஏமாற்றம் என் கண் முன்னே பிரகாச பரிகாசமாய்...

ஹெட்மாஸ்டர் ஆராவமுதன் என்னைப் புகழ்ந்து விடைபெற்றுப் போய் விட்டார். நான் வகுப்புக்குள் நுழைந்து, வருகைப் பதிவேடு பார்த்தேன். ஐம்பதிரண்டு மாணவ மாணவிகள். இடதுவலமாக இனம் பிரிந்து கிளாஸ் ரூம் நிறைத்து உட்கார்ந்து இருந்தார்கள்.

"பசங்களா... வரிசையா எழுந்து... உங்க பெயர், உங்க அப்பா பெயர், அப்பாவுக்கு என்ன வேலைன்னு சொல்லுங்க..."

கைகட்டி எழுந்த முதல் வரிசை மாணவன், செய்யுள் ஒப்பிப்பது போல ஆரம்பித்தான்.

'ஸ்ரீ மீனாட்சி துவக்கப் பள்ளி'யில் நான் மாணவனாக இருந்தபோது, இதே வகுப்பறையில் அ...தோ... நடுவரிசையின் சுவர் ஓரமாக உட்கார்ந்து இருப்பேன்.

வாத்தியார் இருக்கையில் ஒருமுறை ஏறி... கரும்பலகை அழித்த போது, பார்த்து விட்ட வாத்தியார், முதுகு வீங்க அடித்தது ஞாபகம் வர... சிரிப்பும் வந்தது.

ஏதேச்சையாய்ப் பார்க்கையில்... ஸ்கூல்பெல் காற்றில் மிக மெதுவாக ஆடியது. சலன சஞ்சலம் ஏற்படுத்தியது.

ஒவ்வொரு பீரியட் முடியும் போதும் இந்த பெல் அடிக்க மாணவர்களுக்குள் பெரும் போட்டி நடக்கும். மணிக்கட்டை வைத்து இருப்பவனே அன்றைய ஹீரோ. மணிக்கட்டை கனம் கொண்ட கத்தியல் போல இருக்கும்.

இதற்காக தினம் கெஞ்சி இருக்கிறேன். தனிமையில் அழுது... சாப்பிடாமல் கூட இருந்து இருக்கிறேன்.

"டே... டேய்... எ...எனக்கு கொடுங்கடா... லாஸ்ட் பெல் நான் அடிக்கிறேண்டா..."

போண்டா சுரேஷ், "போடா... முடியாது. உனக்குக் கிடையவே கிடையாது..." என்பான்.

என்னை மீறிய அழுகை வரும். கடைசி பெல் என்றால் நிறைய தடவை கணக்கின்றி அடிக்கலாம். முதல் பெல் (ஒரே ஒரு பெல்) அடிக்கக் கூட வழிகிடைக்காத எனக்குள் அனாதை உணர்வு ஏற்படும்.

பெல் அடிப்பதைப் பெருமை பொங்க பேசிக் கொள்வார்கள். "இன்னைக்கு நான்தாண்டா பெல் அடிச்சேன்...!"


ஒருமுறையேனும் பெல் அடிக்க வேண்டும் என்று வாழ்க்கையில் இலட்சியமாகக் கொண்டிருக்கும் எனக்கு, பெருங் கவலையில் ஆத்திரம் மூக்கு வரை திரண்டு வரும்.

போண்டா சுரேஷ் ரெகுலராய் அடிப்பான். அவன் குடிதண்ணீர் பானை மாதிரி குண்டாக இருப்பான். கிளாஸ் வாத்தியார் தெருவைச் சேர்ந்தவன் என்பதால் அவனுக்கு விசேஷச் சலுகை. அவ்வப்போது வாத்தியார் சொடுக்கலுக்கு, மோர், காப்பி என ஓடிப் போய் பெருமையாக வாங்கி வருவான்.

சுரேஷ் வராத ஒருநாள் அந்தச் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. என் துரதிர்ஷ்டம், வராண்டாவில் மூ. கிளாஸ் நழுவ விட்டு... உதை வாங்கினேன்.

பெல் அடிக்கக் கிடைத்த அந்த ஒரு சந்தர்ப்பம் நழுவிப் போனது நினைத்து பெரியதாக அழுதேன். வலி தாங்காது அழுகிறேன் என தப்பாக வாத்தியார் நினைத்து இருப்பார்.

"சுரேஷ்... இன்டர்வெல்ல ஐஸ் வாங்கித் தர்றேண்டா... இன்னைக்கு பெல் அடிக்க ஒரே ஒரு தடவை கட்டை கொடுடா..." மறுநாளே தளராது கெஞ்ச, படுபாவி சிரித்தான்.



"போடா... காலையில் எனக்கு சாக்லெட் வாங்கிக் கொடுத்த சிவாவுக்குத்தான் பெல் கட்டை..."

நோட்டுக் வாங்க வேண்டும் என அந்த வயதில் பொய் சொல்லி வாங்கி வந்த காசை வெறுப்பாய்ப் பார்ப்பேன். அறிவியல் வாத்தியார் சர்.சி.வி. இராமன் பற்றி பாடம் நடத்திக் கொண்டிருக்க... எனது முழு கவனமும் சுரேஷிடம் இருக்கும் பெல்கட்டை மீதே இருக்கும். பீரியட் முடிய இரண்டு நிமிடம் இருக்கும் போது அந்த ராஸ்கல் ராஜ தோரணையில் எழுந்து போவான்.

நான்காவது படிக்கும்போதே... 'பெல்' ஆசை என்னையும் அறியாமல் என்னுள் இருந்தது. சீனியர் மாணவர்களை பிரமிப்புடன் பார்ப்பேன். ஐந்தாவது வந்ததும் சந்தர்ப்பம் தானாகக் கிடைக்கும் என என்னை நானே தேற்றியும் கொள்வேன். எமகாதகன் சுரேஷ் பாலாகி ஐந்தாவது வந்ததும் சுத்தகை எடுத்து மணி அடிக்க... எனது ஏமாற்றம்... ஏக்கமாகவே... தொ...ட...ர்...ந்...த...து...

ஒண்ணாவது, ரெண்டாவது பசங்கள் சுரேஷ் பயலை பெருமையாய்ப் பார்க்கும்.

"பாருடா... நம்ம ஸ்கூல் பெல் அடிக்கிற அண்ணன்..."

எனக்கு, ஒரு கல்லெடுத்து சுரேஷ், மண்டையை உடைக்கலாம் போலத் தோன்றும்.

ரொம்ப சாதுவானவன் இந்த தெய்வசிகாமணி. முரட்டுக்குணம் இருந்தாலாவது மிரட்டி சாதித்துக் கொள்ளலாம். கணேசன் இப்படித்தான் சுரேஷை மிரட்டி ஒரு தரம் 'ஓவர் பெல்'லே அடித்தான்.

வகுப்பறை அமைதியாய் ஆழ... நினைவு திரும்பி இருந்தேன். அறிமுகங்கள் முடித்துக் கொண்ட மாணவ மாணவிகளிடம் நிசப்தம்.

முதல் மணி (சே...!) அடித்து விட்டதில் பாடம் நிறுத்தி எழுந்தேன். அடுத்த பீரியட் வாத்தியார் சிநேகிதச் சிரிப்புடன் உள்ளே புகுந்தார்.

வராண்டாவில் நடக்கும் போது, ஒருகணம் நின்று ஸ்கூல் பெல்லைப் பார்த்தேன். அதிர்வு இன்னமும் அதனிடத்தில் இருக்க, நிறுத்தும் சாக்கில் தொட்டேன். ஜில்..

'தீராத ஏக்கம் விளைவித்த ஸ்கூல் பெல்லே... எனக்கு மட்டும் ஏன் இந்த வஞ்சகம் பண்ணி விட்டாய்?'

நாம்தான் வாத்தியார் ஆகி விட்டோமே... இப்போது நமது ஆசையை நிறைவேற்றிக் கொண்டால் என்ன? சக ஆசிரியர்கள் பரிகாசமாய்ப் பார்ப்பார்கள். பார்க்கட்டுமே... எனது பால்ய வயது ஏக்கம்... ஏமாற்றம் அவர்களுக்குப் புரியாது!

புத்துணர்வு நெஞ்சில் பரவ, நான்காம் வகுப்புக்கு இரண்டாவது பீரியட் எடுத்து விட்டு, ஸ்டாஃப்

இள. அழகிரி

ரூமில் ஓய்வு எடுத்தேன்.

ஹெட் மாஸ்டர் ஆராவமுதன், "என்ன சார்.. டயம் டேபிள் உங்களுக்கு வந்திருக்குமே... லாஸ்ட் அவர்... என்ன கிளாஸ்?"

"ஃப்ரீதான் சார்... ரெஸ்ட் எடுத்துக்கிட்டு இருக்கேன்..."

சிரித்தபடியே போன இந்த ஆராவமுதன், நான் படிக்கையில் உதவி ஹெட் மாஸ்டர்.

சில வாத்தியார்கள் வீட்டுக்குக் கிளம்ப... பெல் அடிச்சே தீருவது என்ற கங்கணம் கொண்டு உட்கார்ந்து இருக்கும் நான் லேசில் அசைந்து விடுவேனா என்ன?

இன்னும் பத்து நிமிடத்தில் காலை வேளையின் நிறைவு பெல்...

இரண்டு மாணவர்கள் மணிக்கட்டை சகிதமாய் பெல் அருகே போக... அந்தச் சமயம் பார்த்தா மூன்றாம் வகுப்பு தமிழ் டீச்சர் வர வேண்டும்?

கிழவி பெருமிதமாய் என்னைப் பற்றி விசாரித்தது. இன்னும் இவர் ரிடையர் ஆக வில்லையா? மனம் இன்றி பேசிக் கொண்டிருந்தேன்.

எனக்குப் பாடம் சொல்லிக் கொடுத்த டீச்சர். நானும் டீச்சரானது ரொம்பவும் அவர்களுக்கு மகிழ்ச்சியாம். எனது மகிழ்ச்சியைக் கெடுத்து விட்டார்களே...!

முந்திரிக்கொட்டை மாணவர்கள் 'பெல்...' அடிக்க... 'ஹோ'வென மாணவ மாணவிகளின் சந்தோஷ ஓட்டம். என் நெஞ்சில் ஆத்திரத் துள்ளல்.

மதியம் முழுவதும் எனக்கு கிளாஸ் ஷெட்யூல். கோபமாக இருந்தது. தெய்வாதீனமாக இறுதி பீரியட் கணித வாத்தியார் வாங்கிக் கொள்ள, நாளை அவரது பீரியட் நான் எடுத்துக் கொள்ள வேண்டும். சந்தோஷமாய் ஒப்புக் கொள்ளக் காரணம், எப்படியும் பெல் அடித்து விட வேண்டும் என்ற கங்கணம்தான்!

நாலரைக்கு இறுதி பெல். நாலே கால் ஆகிவிட்ட போது மெல்ல எழுந்து வராண்டாவில் நடந்தேன். பெல் கட்டையுடன் வந்த மாணவனை அழைத்து.... சாமர்த்தியமாக அதட்டி, கட்டையை கைப்பற்றினேன். இன்னும் பத்து நிமிடத்தில் எனது ஆசை நிறைவேறப் போகிறது. சந்தோஷம். குதூகலம்.

"என்னடா... ரகு, மணிக்கட்டை எங்கே...?"

வருகைப் பதிவேட்டை ஹெட்மாஸ்டர் ரூமில் கொடுத்துத் திரும்பின மாணவன் கேட்க...

"இல்லேடா... கிளாஸ் லீடர்கிட்ட கெஞ்சி... ஓவர் பெல் அடிக்க கட்டை வாங்கினேன். அதிருஷ்டம் இல்ல.. புது வாத்தியார் புடுங்கிக்கிட்டாருடா...."

சோகம் இழையோட போய்க் கொண்டிருந்த ரகு என் குரலுக்குக் கட்டுப்பட்டு, 'திக்... திக்'கோடு வந்தான்.

சின்னதாய் சிரித்து, நான் பெல்கட்டை கொடுத்ததை ஒருகணம் அவன் நம்பவே இல்லை. பிஞ்சு முகத்தில் பிரகாசம்.

ஏமாற்றம்... சின்னஞ்சிறு மனதை ரொம்பவும் பாதித்து விடக்கூடும். நான் பாதிப்பு அடைந்தது போல், இவன் அடையக் கூடாது. என்னைப் போல ஏக்கம் வளர்த்து, நாளை இவன் பெருமூச்சு விட வேண்டாம்.

"என்ன சார்... டீச்சிங் லைன்... எப்படி இருக்கு..." சிரித்தபடி வந்த ஆராவமுதன் கைகளைப் பின்னால் கட்டி இருந்தார்.

"கொடுத்து வச்சிருக்கணும் சார்! எதிர்கால இந்தியாவை உருவாக்குற பொறுப்பு அரசாங்கம் என்கிட்ட கொடுத்திருக்கே!"

ரகு, ஹெட்மாஸ்டர் அறைக்கு வந்து மணி பார்த்துப் போனான்.

"தெய்வசிகாமணி சார்... இன்னைக்கு பியூன் லீவு... அதான் பசங்க பெல் அடிக்கிறாங்க..."

"என்னது பியூனா..! நான் படிக்கிறப்ப... ஸ்கூல்ல பியூன் கிடையாதே!"

"கரெக்ட்.... மேலிடத்துல பிரஷர் கொடுத்து... பியூன் கேட்டது நான்தான். ஐந்தாறு வருஷமா பியூன் இருக்கான்.

முகம் அமைதியில் இருந்தாலும், மனதுக்குள் அவசர எண்ண ஓட்டம். பியூனிடம் கேட்டு நாளை 'பெல்' அடித்துக் கொள்ள முடியாதா என்ன? எனது ஆசையையும்... ஆவலையும் ஒரே ஒருநாள்தானே தள்ளிப் போட்டு இருக்கிறேன்.

மறுநாள் –

வேப்பமர நிழலில் சைக்கிள் நிறுத்தி... சக ஆசிரியர்களுக்கு வணக்கம் சொல்லி, வாங்கி, வராண்டாவில் நடக்கையில் ஷாக்.

வெண்கல மணி தொங்கிக் கொண்டிருந்த இடத்தில்... பெரிய சைஸ் எலக்ட்ரிக் பெல்...

"இதுவும் என்னோட ஏற்பாடுதான்.... விடாது பிரஷர் கொடுத்து... எலக்ட்ரிக் பெல் வாங்கிட்டேன்... மிஸ்டர் தெய்வசிகாமணி..."

'கிர்...ர்" ஸ்கூல் பெல் அடிக்கவும், ஆராவமுதன் பெருமையாய்ப் பார்த்தார். சிறுவர் சிறுமிகளிடம் வெல்லப் பெருக்கு சந்தோஷம். நான் மட்டும் தனித்து விடப்பட்டு, பரிதாபமாய்..

"வ...ண...க்...க...ம் சார்... நீங்கதான் புது வாத்தியாரா? நான் ஸ்கூல் பியூன்...."

குரல் கேட்டுத் திரும்பினதும் திடுக்கிட்டேன்.

போண்டா சுரேஷ் நின்றிருந்தான்.

சி. வி. நரசிம்மன்

இந்திராகாந்தியின் விட்டைச் சுற்றி மிகப் பெரிய கூட்டம் கூடியிருந்தது! மக்கள் முகங்களில் குழப்பமும் 'என்ன நடக்குமோ' என்கிற பதைப்பும் தாண்டவமாடின. அந்தச் சூழல் எனக்கு ஒரு பெரும் கலவரத்தின் ஆரம்பம் போல் தோன்றியது! முன்னாள் அமைச்சர்கள், காங்கிரஸ் கட்சி ஆட்கள், சஞ்சய்காந்தியின் 'படை'யினர் தவிர பொதுமக்கள் என்று அந்தப் பிராந்தியமே திரம்பி வழிவதைக் கண்டேன்

என்னைப் பார்த்ததும் லட்சுமி நாராயணனும் துவேதியும் ஓடிவந்து, "சார்! இந்திரா சூழ்நிலையை மிகவும் 'ட்ரமடைஸ்' பண்ணுகிறார். வெளியே வரத் தாமதிக்கிறார். இரண்டு கைகளையும் குறுக்கே நீட்டி, 'கமான், அரெஸ்ட் மீ! அரெஸ்ட் மீ!' என்று சப்தமிடுகிறார். ஜாமீனில் உடனே விடுவிப்பதாகச் சொல்லியும் ஏற்க மறுக்கிறார்!" என்றார்கள்.

நான் கலவரமானேன். அந்தச் சூழ்நிலையில் என்ன முடிவெடுப்பது - எப்படிச் செயல்படுவது என்பது பெரிய கேள்வியாக இருந்தது. அசம்பாவிதம் ஏதும் நடந்து விட்டால் வேறு வினையே வேண்டாம்!



• இந்திரா காந்தி கைதானதை சரண்சிங், பத்திரிகையாளர் கூட்டத்தில் அறிவிக்கிறார். அருகில் சி.வி. நரசிம்மன்

சற்று யோசித்தேன். விறுவிறுவென்று அவர் வீட்டுக்குள் போனேன். உணர்ச்சிப் பிழம்பாக நின்றிருந்த இந்திராவிடம் சென்று, "மேடம், என்ன பிரச்னை உங்களுக்கு? நீங்கள் கைது செய்யப்பட்டிருக்கிறீர்கள். ஒன்று, ஜாமீன் கோரவேண்டும். அல்லது, ஒத்துழைத்து எங்களுடன் வர வேண்டும். என்ன செய்யப் போகிறீர்கள்?" என்றேன்.

இந்திரா ஒருகணம் என்னை உற்றுப் பார்த்தார். பிறகு, "சரி! முதலில் உங்கள் என்.கே. சிங்கை, நான் வெளியே வர வழி செய்து தரச் சொல்லுங்கள்! பிறகு நான் வருகிறேன்!" என்றார் கடுப்புடன்.

வெளியே அத்தனை கூட்டம்!

மூத்த காங்கிரஸ் தலைவர்களை, நானே நேரில் பேசி, ஒதுங்கி நிற்கச் சொன்னேன். மிகப் பெரிய முயற்சிக்குப் பின் ஒருவழியாகக் கூட்டத்தைக் கட்டுப்படுத்தி, வழி ஏற்படுத்தி, இந்திராவை வெளியே அழைத்து வந்து சி.பி.ஐ. வண்டியில் ஏற்றினோம்.

ஹரியானா பார்டரில் பரீதாபாத்தில் உள்ள 'பட்கல் கெஸ்ட் ஹவுஸி'ல் இந்திராவை அந்த இரவு தங்க வைப்பதாக ஏற்பாடு.

லட்சுமி நாராயணனும் இதர சி.பி.ஐ. அதிகாரிகளும் அவரைக் கூட்டிக் கொண்டு கிளம்பினார்கள். வழியில் ஒரு ரயில்வே கேட், எதிர்பாராமல் அப்போதுதான்

4

மூடப்பட, சற்று நிற்க வேண்டியதாயிற்று.

அப்போது –

பின்னாலேயே வந்து கொண்டிருந்த சஞ்சய் காந்தியும் அவரது சகாக்களும் கும்பலாக முன் வந்து, எங்கள் வண்டியைச் சூழ்ந்து கொண்டார்கள்!

விபரீதங்கள் தவிர்க்கப்பட வேண்டும்...

லட்சுமிநாராயணன் இறங்கி, அவர்களிடம் பேசினார்.

"எக்காரணம் கொண்டும் இந்திராகாந்தியை டெல்லிக்கு வெளியே கொண்டு போகக் கூடாது!" என்று அவர்கள் கூச்சலிட்டார்கள்.

அசம்பாவிதம் ஏதும் நேர்ந்து விடக் கூடாது என்பதால் வண்டி டெல்லிக்குத் திருப்பப் பட்டது.

டெல்லியில் 'கிங்ஸ் வே காம்ப்' என்ற இடத்தில் அன்றிரவு இந்திராவைத் தங்க வைத்து, மறுநாள் கோர்ட்டுக்குக் கூட்டிப் போனோம்.

லட்சுமிநாராயணன் தயங்கி வந்து என்னைக் கேட்டார் :

"சார், ரிமாண்ட் ரிப்போர்ட் எப்படி தயார் செய்வது?"

எனக்கு அவர் சந்தேகம் புரிந்தது. தீர்மான மாகச் சொன்னேன் :

"என்ன நடந்ததோ, அதை அப்படியே கோர்ட்டில் சொல்லுங்கள். ஜாமீன் 'ஆஃபர்' செய்ததையும், அவர் ஏற்க மறுத்ததையும், அதனால் கைது செய்து, கஸ்டடியில் வைக்க நேர்ந்ததையும் சொல்லுங்கள்... தவிர, கைது செய்யப்பட்டவரை ஜாமீன் இல்லாமல் விடுவிக்க சட்டப்படி சி.பி.ஐக்கு அதிகாரம் இல்லாததால், அதற்கான தகுந்த உத்தரவை கோர்ட் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுங்கள்" என்றேன்.

கோர்ட் தொடங்கியது.

நான் கூறியபடியே லட்சுமி நாராயணன், நீதிபதியிடம் சி.பி.ஐயின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

அது மிக வித்தியாசமான சூழ்நிலை. இந்திராவைக் கைது செய்யலாமே தவிர, அடுத்த கணமே ஜாமீனில் விட்டு விட வேண்டுமென்று பிரதமர் ஒருபுறம் உத்தரவிட, ஜாமீனை ஏற்க இந்திரா மறுத்து, மறுபுறம் முரண்டு பிடிக்க, வேறு வழியின்றி ஓரிரவு மட்டும் பிரதமர் உத்தரவுக்கு மாறாக கஸ்டடியில் வைக்க வேண்டியதாகி விட்டது!

மாஜிஸ்டிரேட், தம் பங்குக்கு வினோதமாக ஒரு உத்தரவு பிறப்பித்தார்.

"இந்திரா கைது செய்யப்பட்டிருக்கும் சூழ்நிலையை நோக்க, அவரைத் தொடர்ந்து கஸ்டடியில் வைக்கக் காரணம் இல்லாததால், அவரை நிபந்தனையின்றி விடுவிக்கிறேன்!"

பதிவு செய்யப்பட்ட எப்.ஐ.ஆர். மீது புலன் விசாரணையை முழுவதும் நடத்தி, சி.பி.ஐ. வழக்கப்படி கோர்ட்டில் சார்ஜ் ஷீட் தாக்கல் செய்திருந்தால் நடந்ததே வேறாக இருந்திருக்கும்!

ஓர் அவசர நாடக ஒத்திகை மாதிரியான இச்சம்பவம், செய்தித் தாள்களின் மூலம் மிகத் தவறாகப் பரப்பப்பட்டது!

"இந்திராகாந்தியின் மேல் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் பொய் என்று கோர்ட் தீர்ப்பு; இந்திரா விடுதலை!"

– இது, அப்போது பத்திரிகைகளில் வந்த செய்தி.

எப்படி இருக்கும் எங்களுக்கு? இரவு பகலாகக் கடுமையாக உழைத்து, விவரங்கள் சேகரித்து, உண்மையை வெளிக்கொணர்வதற்கான காலம் கனியக் காத்திருந்த சூழலில்... இப்படி ஒரு சம்பவம்! மக்கள் மத்தியில் சி.பி.ஐ.யின் மதிப்பு என்ன ஆனது என்று சொல்லத் தேவையில்லை!

இது விஷயத்தில் என்னை விட அதிகம் பாதிக்கப்பட்டவர் சரண்சிங். மிகவும் கடுப்பாகிப் போன அவர், உடனே எனக்கு போன் செய்து, "யார் இப்படி ஒரு ரிமாண்ட் ரிப்போர்ட் தயாரித்தது?" என்றார்.

மிகவும் இறுக்கமான சூழ்நிலை. நான் அமைதியாகச் சொன்னேன் :

"சார், நான்தான் முடிவெடுத்து செய்யச் சொன்னேன். ஏனெனில், எனக்கு நீங்கள் தெரிவித்த அரசு உத்தரவு அப்படி!" என்று ஞாபகப் படுத்தினேன்.

மிகவும் கலவரப்பட்டவராக அவர்





ம்ம்ம்மாட்டிக்கினேன்!

பிரபல தொலைக்காட்சித் தொகுப்பாளர் டிக்கி ஆண்டர்ஸன் தான் அறியாமல் செய்த ஒரு முட்டாள்தனத்தை இப்படி நினைவுகூர்ந்தார்:

''ஒரு பெரிய பார்ட்டியில் ஒரு பெண்மணி மிகக் கடூரமாகப் பாடிக் கொண்டிருந்தார். இதைப் பற்றி அருகில் நின்று கொண்டிருந்த ஒருவரிடம் நான் கருத்து கூறியபோது, அதை அவர் ஒத்துக் கொண்ட மாதிரி தெரியவில்லை.

மாறாக, ''அவள்தான் என் மனைவி'' என்று ஒரு அணுகுண்டைத் தூக்கிப் போட்டார்.

சமாளிக்கும் விதமாக, ''ஓ, அப்படியா?... ஆனால் தப்பு உங்கள் மனைவியின் பேரில் இல்லை. பாடல் வரிகள் குப்பையாக இருந்தால் அவர் என்ன செய்வார் பாவம்!'' என்றேன்.

''அப்படியா நினைக்கிறீர்கள்? இந்தப் பாட்டை எழுதியது நான்தான்'' என்றார் அவர்!''

— குல்லூ

போனை வைத்து விட்டார்.

அன்று இரவு, பிரதமர் மொரார்ஜி தேசாய், 'RAX' என்னும் ரகசியத் தொலைபேசியில் (டைரக்டரியில் நம்பர் வராத போன்) என்னைத் தொடர்பு கொண்டார்.

''என்ன நரசிம்மன், இப்படி ஆகி விட்டதே? கோர்ட்டில் என்னதான் நடந்தது? பத்திரிகைகளில் வ்ந்துள்ள செய்தி, நிலைமையைக் குழப்பி உள்ளதே? எங்கே சிக்கல்?'' என்றார்.

அவர் குரலில் ஆழமான வருத்தம் தெரிந்தது! நான் நிலைமையை விளக்கினேன்:

"சார், இந்திரா ஜாமீன் ஏற்க மறுத்ததால் ஓரிரவு மட்டும் கஸ்டடியில் வைக்க வேண்டியதாகி விட்டது. எங்களுக்கும் வேறு வழியில்லை; கோர்ட்டுக்கும் வேறு வழியில்லை! எதற்காக அவரை அநாவசியமாகக் கஸ்டடியில் வைத்திருக்க வேண்டும்? குற்றம் எதுவும் இன்னும் பூரணமாக நிரூபிக்கப்படாத சூழலில்..."

மொரார்ஜி புரிந்து கொண்டார். ஒரு நீண்ட பெருமூச்சுக்குப் பின், "டோன்ட் ஒரி நரசிம்மன். நீங்கள் செய்தது சரிதான்!" என்றார்.

யோசித்துப் பார்க்க வேண்டும். கட்சி, அரசியல், பத்திரிகைகள், நண்பர்கள், சுற்றி உள்ளவர்கள் தந்த தகவல்களையெல்லாம் விடுத்து, நேரடியாக – நடந்ததை நடந்தபடியே அறிய - அவர், அப்படி ஒரு நெருக்கடியான சூழலிலும் அன்றிரவே என்னைத் தொடர்பு கொண்டு விவரம் கேட்டது எனக்குப் பெரும் நிம்மதியாக இருந்தது. கொஞ்சம் சந்தோஷமாகவும் இருந்தது.

அதுதான் மொரார்ஜி!


அதன் பிறகும் அந்த ஜீப் கேஸ் தொடர்ந்தது. நான், தேசிய போலீஸ் கமிஷனின் மெம்பர் செகரட்ரியாகப் பதவி உயர்வு பெற்றுப் போனேன். ஜான் லோபோ என்பவர் புதிய சி.பி.ஐ. டைரக்டராக வந்து, ஜீப் விவகாரத்தை அக்குவேறு, ஆணிவேறாக அலசி, இந்திரா மேல் தீர்மானமாக சார்ஜ் ஷீட் போட்டார்.

அன்று பெயிலில் வர அத்தனை மறுத்து, ஊரைக் கூட்டிய அதே இந்திராகாந்தி, இப்போது தாமே கோர்ட்டுக்குப் போய் சப்தமில்லாமல் பெயில் கேட்டு வாங்கி, வெளியே வந்தார்!

இதுதான் இந்திராகாந்தியின் அரசியல் முகம். (அவர் பெயில் கேட்டு வாங்கி வெளியே வந்ததைப் பத்திரிகைகள் அன்று கண்டுகொள்ளவே இல்லை!)

பின்னால், 1980ல் மறுபடி அவர் ஆட்சிக்கு வந்த போது, பிரதமருக்குச் சாதகமான சில அவசரச் சட்டங்கள் பார்லிமென்ட்டில் இயற்றப்பட்டன. இதனால் அவர் மீது சி.பி.ஐ. தொடுத்த வழக்குகள் அனைத்தும் கோர்ட் விசாரணை – முடிவு பெறாமலேயே போயின! வெளிப்பார்வைக்கு 'இவ்வழக்குகள் சட்டப்படிதான் முடிவு பெற்றன' என்று இந்திரா ஆதரவாளர்கள் கூறி வந்தார்கள். ஆனாலும், இந்த அவசர நடவடிக்கைகள், நியாயமானவை அல்ல என்பது நடுநிலையாளர்களுக்குத் தெரியாதா என்ன!

(அடுத்த வாரம்)



• அசட்டு ஆவேசம்!

● ரொஸாரியோ ரவிச்சந்திரன்,
சென்னை - 59.

? வேலூரர் சிறையிலிருந்து மறுபடியும் 43 எல்.டி.டி.ஈ.யினர் தப்பியது எதைக் குறிக்கிறது?

! 'அயல்நாட்டினரைக் கட்டுப்படுத்த மாநில அரசுக்குப் போதிய அதிகாரங்கள் இல்லை; புலிகளை அடக்கப் போதுமான அளவு நிதியுதவியை மத்திய அரசு தரவில்லை' - என்பதையே இச்சம்பவம் குறிப்பதாக முதல்வர், பிரதமரிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறார். மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் போடும் மற்றொரு ஜோரான முடிச்சு! தமிழன் காதிலே மீண்டும் பூ!

● அ. சரவணன், குளித்தலை. ❑

? அம்மாவின் கால்களில் அமைச்சர்கள் விழுந்து ஆசி பெற(?), அம்மாவோ, ஜெயேந்திரர் காலில் விழுந்த காட்சி...?

! அது சாட்சிக்கு... இது காட்சிக்கு!

● எம். பிரபு, குமராட்சி.

? சோனியா காந்தி அரசியலுக்கு வந்தால் என்ன செய்து விடப் போகிறார்?

! வேறென்ன...? வோட்டுக் கேட்கப் போகிறார்!

● டி. சந்திரசேகரன், சென்னை - 13.

? புலிகளைச் சிறையிலிருந்து மொத்தமாக தப்பிக்க அனுமதித்தது, ஆட்சியைக் கலைக்க வைத்து அனுதாப வோட்டுப் பெற ஜெ. நடத்தும் நாடகத்தின் ஒரு பகுதிதானே?

! ஓஹோ! அதற்கு இப்படியும் ஒரு கோணம் இருக்கிறதா?... பலே பலே!

● பி. ராஜசேகரன், மதுரை - 16.

? சமையல் காஸ் சிலிண்டருக்கான டெபாஸிட் தொகை திடீரென உயர்ந்துள்ளது பற்றி...?

! வயிற்றெரிச்சல் சார்! ரயில்வே சீசன் டிக்கெட் கட்டணமும் அண்மையில் இருபது சதம் உயர்ந்திருக்கிறது! இப்படி பட்ஜெட்டுக்குப் பிறகும் திடீர் உயர்வுகள் செய்வதாக இருந்தால் பட்ஜெட் எதற்கு...?

● கந்தசாமி நாகம்மா இராஜேஸ்வரன்,
மொரட்டுப்பாளையம்.

? இதுவரை 'உங்கள் அன்பு சகோதரி' என்று தமது உரைகளில் கூறி வந்த நமது முதல்வர், இப்போது திடீரென 'உங்கள் அன்பு அன்னை' எனக் கூற ஆரம்பித்துள்ளது எதைக் காட்டுகிறது...?


! வளர்ப்பு மகனுக்கு தாயாகியிருப்பதை!

● கே. என். பாலகிருஷ்ணன், கும்பகோணம்.

? நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி சந்திரசேகரின் மறைவு பற்றி...?

! கோடிக்கணக்கான ஏழைகள் பசியில் வாடும்

'சகோதரி' அன்னையானது எதைக் காட்டுகிறது?



போது, வானசாஸ்திர விஞ்ஞான ஆராய்ச்சிக்கு ஏராளமாக மானியங்கள் பெற்றுச் செயல்படுவது என்ன நியாயம்? என்று அவரிடம் கேட்கப்பட்டது. 'ஏழைகள் உள்ள நமது நாட்டில் கோயில், கும்பாபிஷேகங்களுக்காகக் குறைவின்றிச் செலவு செய்யவில்லையா...? அதைப் போல்தான் இந்தச் செலவும். மதத்தின் வாயிலாக இறைவனைத் தேடுவது போல் விஞ்ஞான ஆராய்ச்சியின் துணையுடன் நாம் உண்மையைத் தேட வேண்டும்' என்று தெளிவாக பதில் சொன்னார் சந்திரசேகர். இந்த பதிலே அவரது மேன்மைக்குப் போதுமான உதாரணம்.

● எஸ். ரோஜா, நாட்டரசன்கோட்டை.

? "என் மனைவி, மராத்திய மாநிலத்தைச் சேர்ந்த சூத்திரச்சிதான்; அதற்காக அவள் கண்களையும் பறிப்பார்களா...?" என்று கமல் ஆவேசப்பட்டுள்ளாரே?

! தேவையற்ற கமெண்ட்! அசட்டு ஆவேசத்தின் மூலம், தாம் செய்த நல்ல காரியத்தின் அழகைக் குலைத்து விட்டார். பாதிக்கப்பட்ட குழந்தை தனம், தமது மனைவியின் ஜாதியைச் சேர்ந்தவள் என்பதால்தான் அவளுக்குக் கமல் உதவ முன்வந்ததாக ஆகிவிடுகிறதே!

● ஈ.டி. விஜயகுமார், ஈரோடு.

? சகிப்புத்தன்மை வளர வேண்டும் என தமது கவர்னர் கூறியுள்ளது பற்றி?

! 'பட்டவர்' சொல்கிறார். கேட்டுக் கொள்வோமே!

☐ ரூ 25 பரிசு பெறுபவர் :
அ. சரவணன்,
15, எம்.பி.எஸ். அக்கிரஹாரம்,
குளித்தலை - 639 104.
திருச்சி மாவட்டம்.

● ஜி. இந்திரா, திருச்சி - 14.

? மதுரை அருகே பேரையூரில், அம்மன் கோவில் திருவிழா ஒன்றில், குழந்தைகளை உயிருடன் மண் குழிக்குள் சில நிமிடங்கள் புதைத்து வைத்து, நேர்த்திக் கடன் செலுத்துகிறார்கள் என்று பத்திரிகை செய்தி வந்துள்ளதே...?

! மூடநம்பிக்கைகளை மட்டும் நமக்குக் குழி தோண்டிப் புதைக்கத் தெரிவதில்லை!

● கானா. கணேசன், பொறையாறு.

? இன்றைய அரசியல் நடப்பது காஞ்சிப் பாதையிலா? ஈரோட்டுப் பாதையிலா...?

! இரண்டும் இல்லாத மன்னார்குடிப் பாதையில்!

● பூமாலை. மணியன், தி. அகரம்.

? 'அ.தி.மு.க.வும் தேசிய முன்னணியில் இணைய வேண்டும்; ஆனால் தி.மு.க.வும் அதில் இடம்பெற வேண்டும்; ரஜினி அரசியலுக்கு வர வேண்டும், பாரத தேசம் என்றொரு கட்சி தொடங்குவோம்' என்று என்.டி.ஆர். ஏன் குழப்புகிறார்?

! அப்புறம், 'நான் அப்படிச் சொல்லவே யில்லை' என்று பல்டி அடித்து, மூக்குடைபடுவதற்குத்தான்!

● ஆர். சுப்பாராவ், திருக்கோவலூர்.

? உலகில் சிறந்த மனிதர் என்ற பட்டத்திற்கு என் உள்ளம் துடிக்கிறது... உபாயமென்ன?

! அதன் பின்விளைவுகளையும் நினைத்துப் பாருங்கள்... துடிப்பு அடங்கிவிடும்!

● எம். ரேவதி, மன்னார்குடி.

? அடுத்த ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று கோட்டையில் கொடியை ஏற்றப் போவது யார்...?

! சந்தேகமென்ன...? தமிழக முதலமைச்சர்தான்!

● இரா. முரளி, மதுரை - 10.

? 'என் மகளின் திருமணத்திற்கு இதுபோல கோடிக்கணக்கில் பணம் செலவழித்திருந்தால், பத்திரிகைகள் வரிந்து கட்டிக் கொண்டு பத்தி பத்தியாக எழுதிக் கிழித்திருக்கும்; காரணம் நான் பிரும்மாவின் கண்ணிலிருந்து வந்தவன் இல்லையே, காலிலிருந்து வந்தவன் தானே...!' என்று கருணாநிதி குறிப்பிடுவது எதை...?

! ஜாதி உணர்வைப் புகுத்திப் பேசுவது கருணாநிதியின் வழக்கம்தான்! அதை ஒதுக்கி விட்டுப் பார்த்தாலும், இவர் முதல்வர் இல்லத் திருமணம் பற்றி அடுக்கடுக்காக விமர்சிப்பதற்கு முதன் முதலில் அடியெடுத்துக் கொடுத்தே தினமணி இதழ்தானே!

● ஜி. மோகன்ராஜ்,
பி.மேட்டுப்பாளையம்.

? தமிழகத்தில் எல்லா கட்சிகளும் உடைந்து விட்டன... ஆனால் அ.தி.மு.க. மட்டும் உடையவில்லையே....?

! யார் சொன்னது? உட்கட்சித் தேர்தலின் போது எழுந்த சண்டை-பூசல், வெட்டு-குத்து எல்லாமே விரிசல் விட்டிருப்பதைத் தானே காட்டுகின்றன!

● பி. காந்திமதி, மதுரை.

? புலிகள் தப்பியது எப்படி என்பதை விவரமாக போட்டோ ஆல்பம் தயாரித்து முதல்வருக்குக் காவல் துறையினர் அனுப்பியுள்ளனராமே?

! ஹும்! இது என்ன பிரமாதம்! அவர்கள் நினைத்திருந்தால், புலிகள் தப்பிச் சென்ற நேரத்திலேயே வீடியோ படம் கூட எடுத்துக் கொடுத்திருப்பார்கள் தெரியுமா?

வந்தால்...



• அழுபவ அறிக்கை!



• குழப்பமும் பயமும்!



• ஜாதியைப் புகுத்தி...



நான் அமர்ந்திருந்த இடத்தை நோட்டம் விட்டேன். செழிப்பு டிஸ்கோ டான்ஸ் ஆடிக் கொண்டிருந்தது.

பெரிய ஹால். தரை விரிப்பு. ஜன்னல் கர்ட்டன். ஆள் புதையும் சோபா. பெற்ற ஷீல்டுகள். தலைவர்களுடன் சிரிக்கும் போட்டோ. சொந்த மிடுக்கை தம்பட்டமடிக்கும் சூழல்.

முள்மேல் அமர்ந்திருப்பது போல ஒரு அந்நியத்தன்மை. பாடம் செய்யப்பட்ட மானின் கண்களை கவனித்தேன். ஐயோ பாவம்!

"வாங்க தம்பி!"

குரல் கேட்டு எழுந்து நின்றேன்.

கனகராஜ் ஐயா. வெள்ளை வேட்டி, ஜிப்பாவில், பெரிய மீசையுடன் எதிரில் வந்தார்.

"உட்காருங்க. என்ன சாப்பிடறீங்க? காபி? எங்கே மீட்டிங்?"

"திருச்சியிலே ஐயா. வரும் இருபத்தி நாலாம் தேதி."

"எதைப் பற்றி?"

"சமதர்ம சமுதாயம்- மலர்ச்சியும், வளர்ச்சியும். இந்த தலைப்புல பேசப் போறாங்க. கடிதம் வந்ததா?"

"ம்ம்! நல்ல காரியம்தான். நீங்க தீவிர உறுப்பினரா?"

பெருமையாய் தலையசைத்தேன்.

"எதுக்கு இந்த மீட்டிங்?"

ஒரு விநாடி தடுமாற்றமாய்ப் பார்த்தேன். என்ன கேள்வி இது? அதுவும் இவரிடமிருந்து?

"உங்க பார்வையோட பொருள் புரியுது தம்பி. நீங்க உங்க கொள்கையை எவ்வளவு தூரம் புரிஞ்சுக்கிட்டு வேலை செய்யறீங்கன்னு தெரிஞ்சுக்கத்தான்."

எனக்கே பரீட்சையா?

"சமுதாயத்துல ஜாதி, மதம் என்ற பெயரால் மக்களை அடிமையாய் அடக்கி வைச்சிருக்காங்க. அவங்க தளையை நீக்கவும், சமுதாயத்துல விழிப்புணர்வை மலர வைக்கவும் தான் போராடுறோம்."

"பலே, பலே!"

பெரிதாய் புன்னகைத்தார்.

"நீங்க இப்ப பண்ற விழிப்புணர்ச்சியை எங்க அப்பா போன தலைமுறையிலேயே செஞ்சுட்டாரு."

வியப்புடன் அவரைப் பார்த்தேன். அரசியலில் செல்வாக்கான ஆள். புரட்சிக் கருத்துக்களை வரவேற்று, ஆதரவு தருபவர். ஆனால் இவர் அப்பாவைப் பற்றித் தெரியாதே?

"யோவ் கணக்குப் பிள்ளை!"

அவரின் அதிகாரக் குரலுக்கு ஒரு இளைஞன் ஓடி வந்தான். கணக்குப் பிள்ளை என்றால் ஐம்பது வயதுப் பெரியவரையே எதிர் பார்த்த கண்ணுக்கு, அந்த இளைஞன் புதிதாய் தெரிந்தான்.

"சம்பத், அந்த அரிசி மில் விவகாரம் முடிஞ்சிடுச்சா?"



"இன்னிக்கு முடிஞ்சுடுங்க"- பவ்யமாய் சொன்னான். படித்த இளைஞனாய்த் தெரிந்தான்.

"எப்பக் கேளு, இதே பதிலு. போ, போ!"

கனகராஜ் ஐயாவின் குரலில் இகழ்ச்சி அதிகமாகவே வெளிப்பட்டது.

அந்த இளைஞன் அகன்றதும் என்னை அர்த்த புஷ்டியோடு பார்த்தார்.

"இவன் யாரு தெரியுமா?"

பதிலுக்குக் காத்திருந்தேன்.

"இவன் தாத்தாவிடம் என் தாத்தா வேலை பார்த்தாரு. நிறைய நிலம், நீச்சுன்னு கொடி கட்டிப் பறந்த குடும்பம். பண்டாரந்துரை! தஞ்சாவூர் பக்கத்து கிராமம். அங்கேதான் இவங்க குடும்ப ஆட்சி."



மீசையை பெருமையுடன் தடவிக் கொண்டார். எதற்குப் பெருமை?

"எங்க அப்பாதான் எதிர்த்து குரல் கொடுத்த முதல் ஆள். இவன் பிறந்தப்ப வீடே அமர்க்களப்பட்டது. பத்து நாளைக்கு ஊர் மொத்தமும் அங்கே தான் சாப்பிட்டது. எல்லாம் இப்ப பெருங்காய டப்பா!"

பெரிதாய் சிரித்தார்.

"எனக்கு நல்லா ஞாபகமிருக்கு. நான் சிறுவனாய் இருந்தப்ப, இவன் அப்பா எதிரிலே உட்காரக் கூடாது, பேசக் கூடாதுன்னு ஏகப்பட்ட கெடுபிடி. நில உச்ச வரம்புச் சட்டம், உழுபவனுக்கே நிலம் சொந்தம்! இந்த கோஷங்களுக்கு உயிர் கொடுத்தாரு எங்கப்பா, கிராமத்துல."

"பெரிய விஷயமுங்க."

"ஆமாம்! ஜனங்க முதல்ல பயந்தாங்க. அப்புறம் அப்பாவை ஆதரிச்சாங்க. அப்பா அந்த ஊரின் நம்பிக்கை நட்சத்திரமாய்த் திகழ்ந்தார். அவரோட புகழில் தான் நான் எம்.எல்.ஏ.ஆக முடிந்தது!"

"ஓ!"

"அதனாலதான் எனக்கும் இதுலே எல்லாம் ஒரு பிடிப்பு. அதே ரத்தம்தானே ஓடுது உடம்புலே?"

மேலும் பத்து நிமிடம் அவரே பேசினார். நான் வந்த நோக்கம் டொனேஷன். மெதுவாய் சொற்பமாய். கிடைத்தது.

கைகூப்பி விடைபெற்றேன். வீட்டின் வெளி வாசலில் அந்த இளைஞன் நின்றிருந்தான்.

மனசில் சம்பத்தின் மேல் ஒரு வித பரிதாப உணர்ச்சி மண்டியது. வாழ்ந்து கெட்ட குடும்பம்.

"என்ன படிச்சிருக்கீங்க சம்பத்?"

"ப்ளஸ் டூ. அதுக்கு மேலே வசதியில்லே படிக்க. அப்பா வேற இல்லை. அம்மா, நான், தங்கை. இதுதான் வருமானம். ப்ளஸ் டூ முடிச்சதும் ஐயா வந்து கூப்பிட்டாரு."

கனகராஜ் ஐயாவின் மீசை தடவிய பெருமை சிரிப்பொலி காதில் ஒலித்தது.

"உங்களுக்கு கஷ்டமாயில்லையா?"

"எதுங்க?"

"இப்படி உங்களிடமே வேலை செஞ்சவங்க இடத்துல நீங்க கைகட்டி நிக்கறது?"

சம்பத் சிரித்தான்.

"பணம், சாப்பாடு, வேலை. யாரிடம் செஞ்சால் என்ன? காலத்தின் சுழற்சி எல்லாம்!"

என்னால் பேச முடியாதபடி யோசனை.

"அது சரி, நீங்க என்ன விஷயமாய் ஐயாவைப் பார்க்க வந்தீங்க?"

சமதர்ம சமுதாய... என் வார்த்தைகளுக்கு அர்த்தத்தைத் தேடிக் கொண்டிருக்கிறேன்.

பாம்பை ஏன் கைது செய்யவில்லை?

பம்பாய் கலகலத்து விட்டது. ஒரு விளம்பரம், நகரையே உலுக்கி விட்டது! சிவசேனா கட்சியின் மகளிர் அணி கொதித்தெழுந்து அந்த விளம்பரம் வெளிவந்த இதழ்களைக் கொளுத்தியதோடு அல்லாமல் நீதிமன்றத்துக்குப் போய் 'ஸ்டே' வாங்கியாகி விட்டது! விளம்பர நாயகி மது சாப்ரே கைது செய்யப்பட்டார்!

பம்பாயின் பிரபல விளம்பர நிறுவனம் ஒன்று, ஒரு ஷூ கம்பெனி கேட்டுக் கொண்டதற் கிணங்க, ஒரு விளம்பரம் தயாரித்தது.

தமது கவர்ச்சி 'போஸ்'களால் ஏற்கெனவே பிரபலமான 'மதுசாப்ரே'வையும் மிலன் சோமனையும் (இவர் மதுவின் காதலரும் கூட!) நிர்வாணமாக நிற்க வைத்து – வெறும் ஷூ மட்டும் மாட்டி, இருவருக்கும் இடையே ஒரு மலைப் பாம்பையும் வைத்துப் படம் எடுத்துத் தர, அப்படம் சினி ப்ளிட்ஸ், மிட்-டே இதழ்களில் வெளியாகி விட்டது!



• மதுசாப்ரே

மகாராஷ்டிரா அரசின் கலாசாரத் துறை அமைச்சர் பிரோமத் நாவல்கர், "இந்த விளம்பரம் ஆபாசமானது மட்டுமல்ல; பெண்ணின் உடலைக் காட்டி, பணம் பண்ணும் கேவலமான செயலும் கூட! இத்தகைய விளம்பரங்களை எதிர்ப்பது மட்டுமல்ல; இவற்றுக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் உங்கள் கடமை" என்று தம் கட்சி உறுப்பினர்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறார்!

சந்தடிசாக்கில், "ஆபாசத்தையும் அரசியலாக்குகிறது சிவசேனா. ஆயிரத்துக்கும் மேற்பட்ட கேபிள் டி.வி. ஆபரேட்டர்களைக் கட்சி உறுப்பினர்களாகக் கொண்ட சிவசேனா, முதலில் ஆபாசத்தையே பிரதானமாகக் கொண்ட ஸ்டார் டி.வி. ஒளிபரப்பைத் தடுத்து நிறுத்தட்டும்" என்கிறார்கள் லோக்கல் எதிர்க்கட்சிக்காரர்கள்.

அது சரி. மதுசாப்ரே என்ன சொல்கிறார்?

"நாங்கள் நிர்வாணமாக நிற்கவில்லை. மெல்லிய ஆடை ஒன்று அணிந்துதான் இருந்தோம்!"

"இதெல்லாம் சுத்த ஹம்பக். ஆடை என்பது எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு சட்டப் புத்தகங்களில் விளக்கம் இல்லாததால், இது தண்டனையிலிருந்து தப்பிப்பதற்கான சால்ஜாப்பு" என்கிறார்கள் பம்பாய் சட்ட வல்லுநர்கள்.

பரபரப்பான இவ்விஷயம் பற்றி உள்ளூர் பத்திரிகை ஒரு ஜோக் வெளியிட்டிருந்தது :

"அந்தப் பாம்பை ஏன் கைது செய்யவில்லை?"

"அதுதான் சட்டையைக் கழட்டவில்லையே!"

— ரமணன்

எனக்கெதற்குப் பாராட்டு?

"நான் முறைப்படி சங்கீதம் கற்றவன் இல்லை. ஒரு சில சூட்சுமங்களை மட்டும் தெரிந்து வைத்திருக்கிறேன். அதனால்தான் நான் ரொம்ப நல்லப் பாடகன் என்று நீங்கள் எல்லாம் நம்பிக் கொண்டிருக்கிறீர்கள்.

"யார் யாரோ எழுதிய பாட்டுகள், அவற்றுக்கு மிக இனிமையாய் இசையமைத்த இசையமைப்பாளர்கள், அவர்கள் குழுவில் இருந்து ஒத்துழைத்த இசைக் கலைஞர்கள் என்று அத்தனை பேருக்கும் ஒரு பாடலின் வெற்றியில் பங்குண்டு. அது மட்டுமில்லை. பாடல்களுக்கு திறமை வாய்ந்த நடிகர்கள் திரையில் ஒரு புதிய பரிமாணத்தை அளிக்கிறார்கள். உண்மை அப்படி இருக்கும்போது, என்னைப் போய் பாராட்டுகிறீர்களே! நான் ரொம்ப சாதாரணமானவன்!

"ஆல் இந்தியா ரேடியோவா, பால்(ஊ) இந்தியா ரேடியோவா என்று கேட்குமளவுக்கு ரேடியோவில் நான் பாடிய பாடல்களை ஒலிபரப்புகிறார்கள். எல்லாவற்றிலுமே என்னுடைய ஒரே மாதிரியான சிரிப்பு, அழுகை, கத்தல். சலிக்காமல் ரசிக்கிற உங்கள் அனைவருக்கும் நான் மட்டுமில்லை; என் குடும்பமே நன்றிக் கடன் பட்டிருக்கிறது."

— ப்ரியாவிஷனின் 'பாடும் நிலா' பட்டமளிப்பு விழாவில் எஸ்.பி. பாலசுப்ரமணியம் பேசக் கேட்டவர் : மௌலி



• எஸ்.பி. பாலசுப்ரமணியம்

ஆர்.எம்.வீ:

'நாடோடி மன்னன்' படத்தைத் தயாரித்த போது எம்.ஜி.ஆருக்கு பணப் பிரச்னை ஏற்பட்டது. பலரிடத்தில் கடன் வாங்க வேண்டியிருந்தது. ஏ.வி. மெய்யப்பசெட்டியாரிடம் மூன்று லட்ச ரூபாய் கேட்டிருந்தார் எம்.ஜி.ஆர். செட்டியாரும் தருவதாகச் சொல்லவே, பணத்தை வாங்கி வர ஆர்.எம். வீரப்பனை அனுப்பினார் எம்.ஜி.ஆர். செட்டியாருக்குச் சந்தேகம். 'கடன் பத்திரத்தில் கையெழுத்துப் போடுவதென்றால், எம்.ஜி.ஆர். வர வேண்டுமே! மானேஜரை அனுப்பி வைத்திருக்கிறாரே!'



ஆர்.எம்.வீயை உட்கார வைத்து விட்டு, வேறொரு அறைக்குச் சென்று எம்.ஜி. ஆருக்கு போன் செய்து தன் சந்தேகத்தை வெளிப்படுத்தினார்.

"எம்.ஜி.ஆர். பிக்சர்ஸைப் பொறுத்த வரையில், என் கையெழுத்தை விட வீரப்பாவின் (அப்படித்தான் எம்.ஜி.ஆர். அழைப்பார்) கையெழுத்துக்குத் தான் மதிப்பு. வரவு, செலவு எல்லாம் அவர் கையில்தான். ஆகவே அவரை நம்பி நீங்கள் தாராளமாகப் பணம் கொடுக்கலாம்" என்றார் எம்.ஜி.ஆர்.


தனது மானேஜர் மீது எம்.ஜி.ஆர் வைத்திருக்கும் நம்பிக்கையைப் பார்த்து பிரமித்துப் போனார் செட்டியார்!

எம்.ஜி.ஆர். 1972ல் தனிக் கட்சி துவங்கிய பின், அரசியல் விவகாரங்களை வகுத்ததிலும், பல திருப்பங்களை ஏற்படுத்திய முடிவுகள் எடுப்பதிலும் ஆர்.எம்.வீயின் பங்கு முக்கியமானது. குறிப்பாக தேர்தல் பிரசார யுத்திகள் வகுப்பதில் ஆர்.எம்.வீ. கில்லாடி.

1980ல் எம்.ஜி.ஆர். கவிழ்க்கப்பட்டு, மீண்டும் தேர்தலைச் சந்தித்த போது போடப்பட்ட அ.தி.மு.க. போஸ்டர் ஒன்று பரபரப்பாகப் பேசப்பட்டது. ஒரு வயதான மூதாட்டியை எம்.ஜி.ஆர். அணைத்துக் கொண்டிருப்பது போன்ற காட்சி அது! ஏழை, எளிய மக்களிடம் எம்.ஜி.ஆருக்குள்ள பரிவை வெளிப்படுத்திய போஸ்டர் அது! 1984 தேர்தலில் "எம்.ஜி. ஆருக்கு உணர்வில்லை; பேச்சில்லை; அவர் அமெரிக்காவிலிருந்து திரும்பியே வர மாட்டார்" என்றெல்லாம் எதிர்க்கட்சிகள் பிரசாரம் செய்த போது ஆர்.எம்.வீ. புத்திசாலித்தனமாக ஆஸ்பத்திரியில் இருந்த எம்.ஜி. ஆரை வீடியோ படமாக எடுத்து, தமிழக பட்டிதொட்டிகளில் காண்பிக்க ஏற்பாடு செய்தார். தேர்தலில் எம்.ஜி.ஆர். இல்லாமலேயே அ.தி.மு.க. மாபெரும் வெற்றி பெற்றது!

ஜெயலலிதாவை அ.தி.மு.க.வில் முன்னணிக்குக் கொண்டு வர எம்.ஜி.ஆர். முனைந்த போது தான் ஆர்.எம்.வீக்கும் எம்.ஜி.ஆருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இருந்தாலும் எம்.ஜி. ஆரின் நம்பிக்கைக்குரியவராகத் தொடர்ந்தார் ஆர்.எம்.வீ. ஜெயலலிதாவின் செல்வாக்கு உயர்ந்த போதெல்லாம் எம்.ஜி.ஆரால் ஆர்.எம்.வீ. மட்டம் தட்டப்பட்டார். ஆர்.எம்.வீயின் அரசியல் எடுபட்ட போதெல்லாம், எம்.ஜி.ஆரால், ஜெ. ஓரம் கட்டப்பட்டார். எம்.ஜி.ஆர். இறக்கும் வரை இந்த நிலை தொடர்ந்தது. ஜெவை 'வஸந்த சேனை' என்று வசைபாடினார் ஆர்.எம்.வீ.

இப்போது ஆர்.எம்.வீக்கு ஏற்பட்டிருக்கும் சிக்கல் கட்சியை உடைப்பதா, கைப்பற்றுவதா என்பது! அ.தி.மு.கவை ஜெவின் பிடியிலிருந்து விடுவிக்க வேண்டும் என்ற எண்ணம் ஆர்.எம்.வீயின் அடிமனத்தில் இருந்தாலும், சரியான சமயத்தை எதிர்பார்த்து, காய்களை நகர்த்திக் கொண்டிருக்கிறார். குறிப்பாக, மாவட்டங்களில் அ.தி.மு.க. நிர்வாகிகள் தேர்தலில் எம்.ஜி.ஆர் விசுவாசிகள் வெற்றி பெற்ற போது அவரது நம்பிக்கை வலுப்பட்டிருக்கும்.



• பிரச்னை கிளப்பிய பாட்ஷா விழாவில்...
(படம்: யோகா)

அடுத்தது என்ன?

ஆனால் அரசியலில் 'பொறுமை' காட்டி, சரியான நேரத்தில் 'strike' செய்வது, ஒருசில அரசியல் சாணக்கியர்களுக்கே கை வந்த கலை.

1988ல், அ.தி.மு.க.வை உடைத்து ஜானகி தலைமையில் அற்ப ஆயுள் மாதிரி சபையை அமைத்தது. ஆர்.எம்.வீ. அவசரப்பட்டதற்கு அடையாளம். அந்த அனுபவத்தின் காரணமாகவோ என்னவோ, அ.தி.மு.க.வின் இரு பிரிவுகள் இணைந்த பிறகு மிகவும் பொறுமை காட்டினார். 1991ல் கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டார். ஆனால் தேர்தலில் அவருக்கு சீட் வழங்கப்படவில்லை. ஜெயலலிதா தான் வெற்றி பெற்ற இரண்டு இடங்களில் ஒன்றான காங்கேயம் தொகுதியை ராஜினாமா செய்தபின், இவர் அதில் நின்று வெற்றி பெற்றார். பிறகு பிற்படுத்தப்பட்டோர் இலாகா அமைச்சராகப் போடப்பட்டார். எம்.ஜி.ஆர் காலத்தில், அவர் வெளிநாடு சென்றபோது, உள்துறையையே கவனித்த ஆர்.எம்.வீக்கு மிகவும் ஜூனியர் மந்திரிகள் கவனித்துக் கொள்ளும் இலாகாக்களைக் கொடுத்தபோதுகூட அவர் பொறுமை இழக்கவில்லை! இடையில் சில காலம் எந்தப் பொறுப்பும் கொடுக்கப்படவில்லை. அப்புறம் பிரச்னைக்குரிய உணவு இலாகா கொடுக்கப்பட்டது. ஆர்.எம்.வீ. காட்டிய பொறுமை அனைவரையும் அசத்தியது! தான் சில காலத்துக்கு பணிந்து போகத் தயாராக இருப்பதாகத்தான் 'அம்மா சரணம்' என்று அமெரிக்காவிலிருந்து அவர் வெளியிட்ட அறிக்கை சொல்லிற்று. ஆனால் அவரை கௌரவமாக வைத்துக் கொள்ள ஜெ. தயாராக இல்லை!

சரியாகச் சொல்லப் போனால், இப்போது களத்தில் தள்ளப்பட்டிருக்கிறார் ஆர்.எம்.வீ. கையில் ஆயுதமேந்த வேண்டிய கட்டாயம். ஒரு பிரபல புள்ளிக்கு பின்னணியாக இருந்து செயல்பட்ட அனுபவம் அவருக்கு போனஸ் என்பதில் சந்தேகமில்லை. ஆர்.எம்.வீயை ஒன்றும் இல்லாமல் ஆக்கிவிடத் துணிந்து விட்டார் ஜெ. ஒரே சமயத்தில் கட்சியிலும் பிரச்னை, காங்கிரஸோடும் தகராறு வைத்துக் கொண்டு சமாளிக்க முடியாது என்பது ஜெ.வுக்கு நன்றாகவே தெரியும். அதனால்தான், கால்நடை இலாகாவுக்கு ஆர்.எம்.வீயை மாற்றிய கையோடு டெல்லிக்குச் சென்று காங்கிரஸோடு கை குலுக்கிக் கொண்டு வந்து விட்டார். இப்போது ஆர்.எம்.வீ. என்ன செய்யப் போகிறார்?

சென்னாரெட்டி கவர்னராக உள்ளவரை ஆர்.எம்.வீ. டிஸ்மிஸ் செய்யப்படுவார் என்ற பேச்சுக்கே இடமில்லை. ஜெயலலிதாவை இக்கட்டான நிலையில் வைப்பதற்காகவே பிரதமரும், கவர்னரை மாற்றப் போவதில்லை. ஆக, ஜெயலலிதாவுக்கு இருக்கும் ஒரே வழி, ஆர்.எம்.வீயை இன்னும் அவமானப்படுத்த முயல்வது. அவரே ராஜினாமா செய்யுமளவுக்கு சூழ்நிலையை உருவாக்குவது. ரஜினியை சந்தித்ததன் எதிரொலி, இலாகா மாற்றம். ஆர்.எம்.வீயின் அடுத்த நடவடிக்கையைப் பொறுத்து, ஜெயின் பதிலடி இருக்கும்.

தான், ஒரு கவர்ச்சிகரமான தலைவராக விளங்க முடியாது என்பது ஆர்.எம்.வீக்கு நன்றாகவே தெரியும். இன்றைக்கு அவர் நம்பியிருக்கும் ஒரே நபர் ரஜினி! அ.தி.மு.க.வை உடைத்து ரஜினியை அதில் இணைத்துக் கொள்வாரா, அல்லது ரஜினியை தனிக்கட்சி துவங்க முடுக்கி விட்டு அதில் இணைந்து கொள்வாரா?

எம்.ஜி.ஆரின் கணக்குப் பிள்ளை என்று அவரை செல்லமாகச் சொல்வார்கள். இன்றைய அரசியலில் அவர் போடும் கணக்கு என்ன என்பது செப்டம்பர் ஒன்பதாம் தேதி தெரிந்து விடும். அன்று ஆர்.எம்.வீயின் 70வது பிறந்த நாள்.

— ப்ரியன்




பழநி! என்ன அருமையான தலம்! மலைச் சாதி மக்களை மாதிரியே நீலமும் கறுப்பும் போர்வையாய்ப் போர்த்து நிற்கும் சித்தன் வாழ்வு. பலநூறு சித்தர்கள் பாதம் பட்டதால் அன்றும் இன்றும் பெருமையுடன் சித்தன் வாழ்வு எனப் பெயர் பெற்ற புண்ணிய பூமி. சித்தர் பெருந்தலைவர் போகர், சித்தநாதன் என்ற பெயருடன் விளங்கிய பெருமை மிக்கது. தண்டம் தரித்தவனாய் ஒற்றைக் கோவணத்துடன் ஒரு கை இடுப்பில் ஊன்றி நிற்கும் தவராசனாய்த் தண்டபாணி தரிசனம் கொடுக்கும் தவபூமி. ஒன்றும் வேண்டாம் எனத் துறவுக் கோலத்தில் நிற்கும் தண்ட பாணிக்குத்தான் உண்டியல் வருமானம் மிக அதிகம். பணக் கார சாமி, நமது தண்டபாணித் தெய்வம்!

அதிலும் ஓர் உண்மை இருக்கிறது! அது வேண்டும், இது வேண்டும் என்று பறக்கிறவனுக்கு எதுவும் கிடைப்பதில்லை. எல்லாமே இங்கு இருக்கிறது என்ற நிறைவு பெற்றவனிடம் எல்லாமே இருந்துவிடுகிறது! எப்படி அமைப்பு பாருங்கள்! இந்த தண்டபாணித் தெய்வ வடிவம் நவ பாஷாணங் களைக் கட்டி போகரால் செய்யப்பட்டது என்பர். ஒன் பது விஷங்களை ஒழுங்குபடுத்திய மூலவருக்கான அபி ஷேக தீர்த்தம், பஞ்சாமிர்தம், சந்தனம் எல்லாம் மருந்து குணம் உடையது.

பஞ்சாமிர்தம் புகழுக்கு என்ன காரணம்? பழம், நெய், வெல்லம் கொண்டு தயாரிக்கும் பஞ்சாமிர்தத்தில் உண்டாகும் புளிப்பு மெல்லிய அமிலத்தன்மை உடையது. நவ பாஷாணத்தால் ஆன மூலவர் உடலில் தடவி எடுக்கும் போது மிகச் சிறிய அளவு அந்த மருந்தைப் பஞ்சாமிர்தப் புளிப்பு சுமந்து வருகிறது! எனவே அபிஷேகப் பஞ்சா மிர்தம் ஒரு மண்டலம் உண்பவருக்குக் கொடிய நோய்களும் குணமாகிவிடும். இரவு சுவாமி மீது சந்தனம் அரைத்துத் தடவி மறுநாள் விடியற் காலை பூஜையின் போது விநியோகம் செய்ய, அதைச் சிறிது உண்ணுவதாலும் தீராத நோய் தீர்ந்து விடும். சித்தர்கள் செய்த மருத்துவ மதம் இந்த மகத்துவத் தலம்!

தமிழ் மக்கள் கேரளாவில் உள்ள ஐயப்பனைத் தரிசிக்க ஆர்வம் காட்டுவது போல் மலையாள மக்கள் விரும்பித் தொழும் மலைக் கொழுந்து நமது பழநி ஆண்டவர். காரணம், இத்தலத்தின் மூலவர் மேற்கு பார்த்த நிலையில் இருக்கிறார். அவர் பார்க்கும் பகுதி மலையாள நாடு. தங்கள் நிலம் பார்க்கும் தலைவன் என்பதால் கேரள மக்கள் விரும்பித் தொழும் தலம் பழநி. இந்தப் பழநி என்ற பெயரைச் சொல்லு பவருக்கு நூறு கும்பிடு போட்டு வணங்க வேண்டும் என்கிறார் அருண



மடிமீதிருக்கும் மலைவாசி!

கிரிநாதர்.

"படிக்கின்றிலை; பழனித் திருநாமம் படிப்பவர் தாள் முடிக்கின்றிலை" என்று நெஞ்சை நோகிறார் அருணை முனிவர்.

இங்கு பங்குனி உத்தர விழா, சூர சம்ஹாரம் பெருவிழா. ஆனால் தைப்பூசம் தனிப் பெரும்விழா. கால் நடையாகவே பல லட்சம் பக்தர் வந்து பங்கேற்கும் பெருவிழா தைப்பூசம். தைமாதம் பூச நட்சத்திரத்தை ஒட்டியே பௌர்ணமி அமையும். தைமாதத்தில் அறுவடை முடிந்ததும் முதல் விளைச்சலைக் காணிக்கையாகச் சுமந்து கொண்டு நடைப் பயணமாகப் பழநிக்கு வருவது பழைய வழக்கம். பகல் நேர வெயிலைத் தவிர்த்து, பௌர்ணமி நிலாக் குளியலில், அரோஹரா போட்டபடி தங்களுக்குப் படியளந்த பகவானுக்குப் படியளக்க பக்தர்கள் வருகிற பழைய விழாவே தைப்பூசம். சங்க இலக்கியத்தில் முருகனுக்கு "கடியுண் கடவுள்" என்று ஒரு குறிப்பு உண்டு. புதிய விளைவை (கடி) உண்பவன் என்று பொருள்.

காவடி என்பது பழநியின் தனிச்சிறப்பு. பால் காவடி, பன்னீர்க் காவடி மட்டும் அல்ல - பாம்பு கொண்டு வரும் சர்ப்பக் காவடி கூட இருந்திருக்கிறது.

இந்தக் காவடி வந்த கதை ஒன்றும் உண்டு. அகத்தியர் ஆணைப்படி, இமயத்திலிருந்து சிவகிரி, சத்த கிரி என்ற இரண்டு மலைகளையும் காவடி மாதிரி கட்டி இடும்பன் சுமந்து வரும் போது இளைப்பாற, நெல்லிமரக் காடாய் இருந்த இவ்விடத்தில் வைக்க, பின்பு பெயர்த்தெடுக்க முடியவில்லை. காரணம்... சிவ மலையில் குரா மரத் தடியில் குமரக்கடவுள் நின்றதுதான். சண்டைக்குப் போன இடும்பன் மாண்டான். பின் இடும்பி வேண்ட, இடும்பனை முருகன் உயிர்ப்பித்தான். மேலும் இடும்பன் வணங்கியதும் "உன் போல் காவடி சுமந்து நம்மிடம் வரும் பக்தர்களைக் காப்போம். நீ நமது மலை வாயில் காவலனாய் விளங்கு" என வரமும் நல்கினான் வள்ளல். அது தவிர கைலாயத்தில் நாரதர் கொணர்ந்த பழத்துக்கு நடந்த பிரச்னையில் முருகன் சினந்து வந்து இங்குக் குடியேற, 'ஞானப் பழம் நீ' என அம்பிகை அழைக்க, பழநி ஆயிற்று என்பது தலபுராணம்.

உண்மையில், பழனம் நிறைந்தது பழநி என்றொரு கருத்து உண்டு. பழனம் எனில் வயல்கள் என்று பொருள். 'பழனம் உழவர் கொழுவில் எழுதும் பழைய பழநி' என்பது திருப்புகழ். ஏர்முனை கொண்டு உழவர் எழுதும் பழனம் நிறைந்த பழநி என்பது அருணகிரி வாக்கு. 'பொதினி' என்ற மலைப் பெயர் மருவி பழநி என்றானது என்றும் ஆராய்ச்சி உண்டு. பழநித் திருக்கோவில் சேர மன்னரால் கட்டப்பட்டது என்பதற்கு "சேரர் கோன் ஆலயத்துள் நின்றிலங்கும் பரஞ்சுடரை" என்ற தலபுராண வரிகள் ஆதாரம்.

நக்கீரரால் பாடப்பெற்ற திருமுருகாற்றுப்படை, திரு ஆவினன்குடி என்று இத்தலத்தைக் குறிக்கிறது. திரு + ஆ + இனன் + குடி என்று பிரித்து இலக்கும், காமதேனு சூரியன் பூசித்த தலம் என்று தற்போது விளக்கம் தருகின்றனர்.

இப்போது பழநி மலை அடிவாரத்தில் அழகிய திருவாவினன் குடிக் கோயில் உள்ளது. பழநி ஊருக்கு மத்தியில் பெரிய சிவாலயம் ஒன்று உள்ளது. அது திருவாவினன்குடி என்பதும் சிலர் கருத்து. எப்படியோ ஆற்றுப்படை இலக்கியத்தில் திருவாவினன் குடியும், குன்று தோறாடலில் பழநியுமாகி இரண்டு படை வீடுகள் ஒரே தலத்தில் அமைந்து விட்டது ஒரு பெருமைதான்.

ஊருக்கு வெளியில் ஓடும் சண்முகநதி மற்றும் வையாபுரிக் குளம், அமுததீர்த்தம், காணாச் சுனை, சரவணப் பொய்கை ஆகியன புண்ய தீர்த்தங்கள். கிரி பிரதட்சணம் என்று மலையைச் சுற்றி வரும் ஒன்றே கால் மைல் பாதையில் வலம் வந்து வணங்குவது சிறப்பு வழிபாடு. நாள் தோறும் பழநியில் இப்பணியை விடாது செய்யும் ஆரோக்யமான முதியவர் பலர் உண்டு.

இத்தலத்தின் மீது வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் பழநிப் பிள்ளைத் தமிழ், பழநித் திருவாயிரம் உள்ளிட்ட 1274 பாடல்கள் அருளினார்கள். இங்கு தோன்றிய மாம்புக் கவிச் சிங்கநாவலர், பழனாபுரி மாலை முதலாய்ப் பல பிரபந்தங்கள் பாடினார். அண்ணாமலைக் கவிராயர் பழநிப் பதிற்றுப் பத்தந்தாதி பாடியுள்ளார். தன்னிகர் அற்ற தவசீலர் பாம்பன் சுவாமிகள் என்கிற குமர குருதாச சாமிகள் குமாரசாமியத்தில் பழநி பற்றி பத்து சருக்கங்கள் பாடியுள்

சுகி சிவம்



கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் நடித்துக் கொண்டிருந்த நாடகம் ஒன்றில் "அடிக்கிற அடியிலே பல் முப்பத்தொண்ணும் உடைந்து விடும்" என்று வசனம் பேசி விட்டார். அவருடன் நடித்துக் கொண்டிருந்த நடிகர் சிரித்துக் கொண்டே "ஒரு பல்லை விட்டு விட்டீர்களே" என்றார். "அந்த ஒரு பல்லிலே பல் வலி வந்தே நீ சாகணும்" என்று சாமர்த்தியமாக வசனம் பேசி எல்லோரையும் சிரிக்க வைத்தார் கலைவாணர்.

- எஸ். முகம்மது யூசுப்

இதுதாண்டா இந்தியா!

பீஹார் மாநில முதல்வர் லல்லுபிரசாத் யாதவின் மகள் மிசாதேவியும் பொதுப் பணித்துறை அமைச்சரின் மகள் அஸ்மாவும் ஜம்ஷெட்பூர் காந்தி நினைவு மருத்துவக் கல்லூரியில் மூன்றாவது வருடம் பயிலும் மாணவிகள்.

வருட இறுதியில் தேர்வுகள் எழுத வேண்டும் என்றால் குறைந்தது அறுபது வகுப்புகள் 'அட்டெண்ட்' செய்திருக்க வேண்டும் என்பது ஒரு விதி. இந்த வி.ஐ.பிக்களின் வாரிசுகள் முறையே 24, 38 வகுப்புகளே வந்திருந்தனர்.

கல்லூரி முதல்வர் யோசித்தார். தேர்வையே இரண்டு மாதங்கள் தள்ளிப் போட்டார். இந்த மாணவிகள் — அறுபது வகுப்புகளை எட்டுவதற்கு வசதியாக!

இவர்கள் இருவர் மட்டும் தங்கும் விடுதி வசதிக்காக — ஏற்கெனவே அங்கிருந்த பதினைந்து மாணவிகள் வெளியேற்றப்பட்டு வேறு இடம் தரப்பட்டனர்!

— 'டெலிகிராஃபி' லிருந்து....

— பார்கவி

ளார்கள்.

சித்தம் சிவமான மகாஞானிகள் விரும்பி இருக்கும் ஞானபூமி இது. கோவையில் பல்லாயிரம் மக்கள் வாழ்வை உயர் நெறியில் மடைமாற்றிய கௌமார மடாலயத்தின் சந்நிதானங்கள் பழநிப் பதியில் பெரும் பக்தி உடையவர்கள். துறவு மேற்கொள்வோர் இங்கு துவராடை பெறுவது உண்டு. இன்னும் பல சித்த புருஷர்கள் மலைக்குக் கீழே வாழுகிறார்கள் என்றொரு நம்பிக்கை உண்டு. அதிசயங்களின் இருப்பிடமாக அன்றும் இன்றும் இம்மலை உள்ளது என்பதால், "அதிசயம் அநேக முற்ற பழநி மலை" என்றார் அருணகிரி நாதர்.

பழநிப்பதி மீது மிகப்பற்றுடையவர் சத்குரு அருணகிரிநாதர். பலநாள் இங்கு தங்கிப் பல பாடல்கள் பாடி உள்ளார். திருவேரகத்தைப் பாட வந்த போது கூட அவருக்குப் பழநி மீது நினைவு வந்து பழநியைப் பாராட்டிய திருப்புகழ் உண்டு. ஒருவருக்குப் பாராட்டு விழா நடக்கும் போது அவரைப் புகழாமல் எங்கோ இருக்கிறவரைப் புகழுகிற மாதிரி, திருவேரகம் திருப்புகழில்,

"அருணதள பாத பத்மம் அதுநிதமுமே துதிக்க
அரிய தமிழ் தானளித்த அயில் வீரா!
'அதிசயம் அநேகம் உற்ற' பழநிமலை மீதுத்த
அழக திருவேரகத்தின் முருகோனே!"

என்கிறார். இது 'சரண கமலாலயத்தை' எனத் தொடங்கும் திருப்புகழ். இதில் பழநி மலை 'அதிசயம் அநேகம் உற்ற' எனப் பாடப் பெற்றது.

அதிசயங்கள் அநேகம் உடையது பழநி மலை என்பது வழக்கமான பொழிப்புரை. திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் 'பழநி மலை' என்ற சொற்களைப் பழ + நிமலை என்று பிரித்து, பழமையான நிமலை - அதாவது குற்றமற்ற பார்வதி தேவியின் மடியில் உதித்த பெருமான் என்று நயம் சொல்வார்கள். மலை மேல் இருக்கும் முருகனைச் சம்பந்தம் இல்லாமல் பார்வதி மடியில் இருக்கும் முருகன் என்று எப்படிச் சொல்லலாம் என்று கேட்டால் அதற்கும் நயமான விளக்கம் உண்டு!

பாரதம் பராசக்தி வடிவம். இமய மலை அவள் தலை மகுடம். அன்னை பராசக்தி பாரதம் முழுமையாக நின்று காட்சி கொடுத்தால் மேற்குத் தொடர்ச்சி மலையும் கிழக்குத் தொடர்ச்சி மலையும் அவள் இரு கால்களாக அமையும். அதில் முருகன் நிற்பது அவள் மடியில் இருப்பது ஆகாதா? பராசக்தி மலைமகள். எனவே எந்த மலையில் முருகன் நின்றாலும் அவள் மடியில் இருப்பதாகத்தான் அர்த்தம்! எனவே 'பழையோள்' எனப்படும் பார்வதியாகிய பழ நிமலை மீதுத்த முருகன் அவன்!



தண்ணீர்ப் பந்தல்!

தேனிசைப் பாட்டு, வேட்டு,
    தெருவெல்லாம் பந்தல் போட்டு,
பானகம், குளிர்மோ ரோடு
    பழரசம் அருந்திப் பேசி,
தானமாய் ஊருக் கெல்லாம்
    தண்ணீரைத் தருவோம் என்பார்:
பானைதான் இருக்கும்; தண்ணீர்
    பார்த்திடல் முயற்கொம் பாகும்!

அடிமையின் மோகம் தீர்ந்தும்
    ஆங்கில மொழியில் மோகம்;
மிடிமையின் சோகம் தீர்ந்தும்
    மீளாத வறுமைச் சோகம்;
குடிபல குழியில் வீழ்ந்தும்
    குறையாத குடியின் வேகம்;
விடுதலைத் தாகம் தீர்ந்தும்
    விடவில்லை தண்ணீர்த் தாகம்!

தமிழகம் முந்நீர்ப் பந்தல்;
    தலைவர்கள், அமைச்சர் எல்லாம்
அமைதியாய் வாழும் இல்லம்
    அனைத்துமே பன்னீர்ப் பந்தல்;
சுமைகளாய் வெறுங் குடங்கள்
    தூக்கியே திரியும் மக்கள்
இமைகளும், விழியும் மட்டும்
    என்றைக்கும் கண்ணீர்ப் பந்தல்!

— தளவை · இளங்குமரன்



மொத்தம் பதிமூன்று டினோசார்கள். நாலு அடியிலிருந்து நாற்பது அடிவரை உயரம். மிரட்சி தரும் உருவங்கள். பீதி கிளப்பும் உறுமல். அசைந்து அசைந்து நடந்து வருவது பார்க்க, ரத்த அழுத்தம் எகிறாத குறை!

நீ-நான் என்று போட்டி போட்டுக் கொண்டு மக்கள் அவற்றைப் பார்க்கக் குவிகிறார்கள்! தொட்டுப் பார்த்து சிலிர்க்கிறார்கள். சின்னக் குழந்தைகள், பயம் கலந்த பரவசத்துடன் அடி மேல் அடி வைத்து அணுகி நோக்குகிறார்கள்.

பின்னே 30 ரூபாய் கட்டணத்தில் டினோசார்களை நேரில், கிட்டே பார்ப்பதென்றால் சும்மாவா?

'என்ன இது கப்ஸா' என்று காதைத் திருக வருபவர்களுக்கு ஒரு வார்த்தை.

கப்ஸா இல்லை ஐயா! இது ஐ.எஸ்.ஐ. உண்மை!

பெங்களூரில் நடந்து கொண்டிருக்கிறது டினோசார் கண்காட்சி! ஒரு சின்ன விஷயம் – இவை எலக்ட்ரானிக் டினோசார்கள்.

அமெரிக்காவிலிருந்து, பலகோடி ரூபாய் செலவில் இந்த எலக்ட்ரானிக் டினோசார்களை ஒரு வருட குத்தகைக்கு வாங்கி, இந்தியாவின் பிரதான நகரங்களில் கண்காட்சி நடத்தப் போகிறது 'ஹரிபர்வத் மெரிலாண்ட் அண்ட் ரிஸார்ட்ஸ் லிமிடெட்' என்கிற டெல்லி நிறுவனம். அதன் ஆரம்பம் தான் இப்போது பெங்களூரில் நடக்கிற கண் (கொள்ளாக்) காட்சி!




விஷுவல் எஜுகேஷன் என்கிற உபயோகமான கல்வி முறை நடைமுறையில் சாத்தியமாகிற விஷயம் இது!


பல்லாயிரம் கோடி ஆண்டுகளுக்கு முன் பூமியில் வாழ்ந்த இந்த ஜுராஸிக் ஜீவராசிகள் பற்றி ஒரு சினிமாவில் சொல்ல பார்க்க முடியாத பல விஷயங்களை நேரில் கண்டுகொள்ளலாம்.

அசல் டினோசார்களைப் போலவே தோற்றமளிக்கும் இந்த எலக்ட்ரானிக் ஜந்துக்கள், மைக்ரோ பிராசஸ் கன்ட்ரோல் முறையில் இயங்குகின்றன.

உலகம் முழுவதும் இதுவரை 560 கண்காட்சிகள் - 80 நாடுகளில்







தொடுகின்ற தூரத்தில் டினோசார்கள்!

நடத்தப்பட்டு, 50 மில்லியன் மக்கள் கண்டு ரசித்திருப்பதாகச் சொன்னார்கள்.

பெங்களூரின் இதமான சீதோஷ்ணம் காரணமாகவே நம் நாட்டில், முதலில் அங்கு நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரே ஒரு சிக்கல்.

இக் கண்காட்சி நடத்த 5000 சதுர அடி இடம் தேவையாம்! டினோசார் காட்சியோடு கூட சிறிய அளவில் ஒரு பொருட்காட்சியும் நடத்துவதால் இத்தனை இடம் வேண்டியிருக்கிறது.

அடுத்து சூரத் போகிறார்கள். டெல்லி, ஹைதராபாத், பூனா என்று பெரிய நகரங்களைத் தொடர்ந்து சென்னைக்கு வரப் போகின்றன இந்த டினோசார்கள்! வந்தால் விடாதீர்கள்!

(பி.கு : வசூலில் ஒரு பகுதி 'CRY' என்னும் குழந்தைகள் நல நிறுவனத்துக்குப் போகிறதாம்.)

- வி.எஸ். ராஜகோபால்

சூட்கேஸ் கணக்கில் மொய்!

♦ 'வீம்புக்காக விநாயகர் ஊர்வலம்' – தலையங்கத்தில், வம்புக்கு (மதக்கலவரம்) பிள்ளையார் சுழி போடும் ஹிந்து முன்னணியினருக்கு நச் சென்று நெத்தியடி தந்திருந்தீர்கள். பாராட்டுக்கள்.
விழுப்புரம், வை. சண்முகசுந்தரம்.

♦ தலையங்கக் கருத்துக்கள் சிந்தனை நோக்கில் அமையாமல், கண்டன நோக்கில் அமைந்துள்ளதானது வருத்தத்திற்குரியதாகும். வினாயகர் சதுர்த்தி ஊர்வலத்தின்போது சமுதாய ஒற்றுமையை "ஜாதி வேறுபாடுகளின்றி" காண முடிகின்றது. ஊர்வலத்தை நிறுத்துவது என்பது வேண்டாத வேலையாகும். வினாயகர் சதுர்த்தி ஊர்வலத்தினால் வகுப்புக் கலவரங்கள் தோன்றுவதில்லை. பெரும்பான்மை மக்கள் தங்கள் வழிபாட்டு ஊர்வலங்களை நடத்துவது தார்மீக உரிமையாகும். இதற்கு ஆதரவளிப்பது சிறுபான்மையினரின் கடமையும் கூட.
சென்னை – 39, பா. ச. நாராயணன்.

♦ என்ரான் திட்டம் கைவிடப்பட்டதற்கு, லட்ச லட்சமாக நஷ்டஈடு கொடுக்க வேண்டி வந்தால் மகாராஷ்டிர ஆளுங் கட்சியினரா தம் சட்டைப் பையிலிருந்து அள்ளித் தரப் போகிறார்கள்? இதற்கும் சாமானியரின் வரிப்பணம் தானே போய்ச் சேரப் போகிறது!
தஞ்சை – 7, வளர்மதி ஆசைத்தம்பி.

♦ என்ரான் திட்டத்தில் மறைக்கப்பட்டது சுற்றுப்புற சூழல். மறைக்கப்பட்டது மாபெரும் ஊழல். ஊழல் நிறைந்த என்ரான் ஒப்பந்தம் செல்லுபடி ஆகாததால், அவர்களுக்கு நாம் பயப்படவோ, நஷ்டஈடு தரவோ தேவையில்லை. நம் நாட்டிற்குள்ளே வந்து, எந்த வகையிலாவது காரியத்தை சாதித்து, செல்வத்தைச் சுரண்டிச் செல்லலாம் என்று ஏய்க்க நினைக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு இது ஒரு நல்ல பாடம்.
சிவகாசி, கு. ஷண்பகராஜன்.

ரூ.20/- பரிசுபெறும் கடிதம்

♦ முதல்வர் வீட்டுக் கல்யாண அழைப்பிதழ் வராத வரைக்கும் சரி. சந்தோஷப்படுங்கள். பிறகு, சூட்கேஸ் கணக்கில் மொய் எழுத வேண்டி வந்துவிடும்!
சிதம்பரம் – 1, ஸ்ரீவித்யா காளிதாஸ்.

♦ நிறங்களும் நிஜங்களும் கட்டுரையில் பல பயனுள்ள, புதிய விஷயங்களைத் தெரிந்து கொள்ள முடிந்தது. பாராட்டுக்கள்.
மணியக்காரன்பாளையம், ஏ.ஜி. கல்யாணசுந்தரம்.

♦ சென்னைபுரத்துச் சின்ன ராஜாவை வாழ்த்தி வரவேற்கும் விதமாக கவர் ஸ்டோரி வெளியிட்ட கல்கிக்குப் பாராட்டுக்கள்!
பொன்மலை, ஆர். பிரகாஷ்.

♦ இசையில் வலுவான அடித்தளமும் மிகுந்த ஆர்வமும் அதோடு ஆன்மீகத்தில் ஆழ்ந்த பற்றும் கொண்ட கார்த்திக்ராஜா, எதிர்காலத்தில் மிகச் சிறந்து விளங்குவார் என்பதை இப்போதே நம்மால் உணர முடிகிறது.
இலால்குடி, எம். இராஜேந்திரன்.


♦ ஜெயேந்திரர் மணிவிழாச் செய்திகளை அழகு மிளிர விவரித்த விதம் அருமை!
பல்லவன்நகர், சீதாமகன்.

♦ இன்னும் ஐ.ஆரோ, டிஏவோ, அநௌன்ஸ் பண்ணலியேன்னு அன்றாடம் காய்ச்சிகள் அல்லல்பட்டுக் கொண்டிருக்கையில், சர்வதேச நகைக் கண்காட்சி பற்றிய செய்தியை வெளியிட்டு எம் வயிற்றெரிச்சலை ஏன்யா கொட்டிக் கொள்கிறீர்?!
சென்னை – 30, புளியரை கணேசன்.

♦ ஸ்ரீ ஆண்டாளை, தொட்டில் குழந்தையாக ஓர் அன்பர் வித்தியாசமாகச் சிந்தித்ததைப் பிரசுரித்த கல்கியாரே! 'தொட்டில் குழந்தை' என்பது மனிதப் பிறவியோடு தொடர்புடைய சமீப கால சொல்லாட்சி. ஆண்டாளை தெய்வப் பிறவியாகக் கருதுவதுண்டு. அரங்கனுக்குப் பன்னு திருப்பாவை பல்பதியம் இன்னிசையால் பாடிக் கொடுத்த நற்பாமாலை, பூமாலை சூடிக் கொடுத்தாளை, 'தொட்டில் குழந்தை' என்று நீங்கள் பிரசுரிக்கலாமா?
சென்னை–41, எஸ். கண்ணன்.

♦ 'பாசவலை'க்கு நறுக்குத் தெறித்தாற்போல் மிக நயமாக விமர்சனம் செய்திருந்தீர்கள். என்ன ஒரு குறை, கமல் நடிப்பை இன்னும் கொஞ்சம் பாராட்டியிருக்கலாம்.
மொரட்டுப்பாளையம், க.நா. இராஜேஸ்வரன்.

♦ 'நாகூர் பயணம்' சிறுகதை நெஞ்சை நெகிழ வைத்தது. உசேன் பாய் இன்னும் மனதில் நிற்கிறார்.
தஞ்சாவூர் – 5, வனிதா ரவி.



பரிசு

ரூ. 500/- மூன்றாம் பரிசு பெறும் இரண்டாவது சிறுகதை

அ. விநாயகமூர்த்தி

இரவு பத்தரை மணி. மதுரையிலிருந்து சென்னைக்குச் செல்கிற அந்த பஸ்ஸில் டிரைவர் சங்கரலிங்கம்; கண்டக்டர் வேலாயுதம்.

துவரங்குறிச்சியில் ஏறிய இரண்டு பயணிகளுக்கு டிக்கட் கொடுத்துவிட்டு ஏதோ முணுமுணுத்தபடி வந்து அலுப்போடு தன் இருக்கையில் அமர்ந்தான் வேலாயுதம்.

"என்னப்பா சங்கடம்?" என்றார் டிரைவர்.

"அண்ணே, எல்லாருமே இருபது ரூபா நோட்டும் அம்பது ரூபா நோட்டும் கொடுத்தா இந்த ராத்திரி வேளையிலே சில்லறைக்கு நான் எங்கே போறது? சில்லறை வச்சிருக்கறவங்க கூட இப்படி லொள்ளு பண்றாங்க. சீட்டுப் பின்னாலே குறித்துக் கொடுத்தாலும், என்னவோ திருடனைப் பார்க்கிற மாதிரி பார்க்கிறாங்க. இப்பவும் அதுதான் தகராறு."

"ஆமாப்பா, அரை ரூபாயும் ஒரு ரூபாயும் கூடத் திரும்பத் தராம இறங்கி, மறந்த மாதிரி டிக்கட் ரூமுக்குள்ளே சில பேர் நுழைஞ்சிடறீங்க. பாசஞ்சர், ரிக்ஷாவைப் பிடிப்பானா, உங்களைத் தேடுவானா?"

பயணிகள் பலர் அரைத் தூக்கத்திலும் முழுத் தூக்கத்திலும் இருந்தார்கள். துவரங்குறிச்சி வளைவு தாண்டி, வேகமெடுத்தது பஸ்.

"சரியப்பா, ஏன் ரெண்டு நாளா சோர்வா இருக்கே, கலகலப்பே காணோமே?"


"என்னவோ போங்க அண்ணே! ஏண்டா இந்தக் கண்டக்டர் வேலைக்கு வந்தோமின்னு இருக்கு. பாருங்க, இந்தப் பதினஞ்சு நாளிலே எனக்கு நாலு டபுள் டூட்டி போட்டுட்டாங்க. உடம்பே நறுக்கித் துவைத்த மாதிரி கிடக்கு."

"புதுசா ஆள் எடுக்கிறது இல்லை; ஓய்வு பெற்றவர்களுக்கு மாற்றாவது போடலாமில்லே? அதுவுமில்லை. அப்புறம் நமக்கு டபுள் டூட்டி வராம என்ன பண்ணும்?"

"அதுக்குன்னு இப்படியா பிரச்னைங்க?"

"தம்பி, எந்த வேலையிலே பிரச்னை இல்லை? ஒவ்வொண்ணும் ஒவ்வொரு இனுசு. அலுப்பு வரத் தான் வரும். அதையும் கடந்து தான் வேலை செய்ய வேண்டியிருக்கு. உன்னால முடிஞ்ச அளவு கடமையைச் செய்; மற்றதை 'அவன் பார்த்துப்பான்' என்று விடு."

"ஆமாம், அவன் பார்த்துத்தான் என் கடமைக்குப் பரிசு தரப் போகிறான்! நீங்க ஒருத்தர், எனக்குன்னு சேர்ந்தீங்க, என் நிலைமை தெரியாமல்..."



பாண்ட் ஷர்ட் போட்ட வாலிபன் ஒருவன் எழுந்து வேலாயுதத்திடம் வந்தான்.

"சார், அந்த வாராவதிகிட்டே வண்டியை ஸ்லோ பண்ணிக்குங்க. நான் இறங்கணும்" என்று மெதுவாகச் சொன்னான்.

"என்னய்யா இது, ஸ்டேஜ் இல்லாத இடத்திலே, நான் நிறுத்தக் கூடாது. இதோட விராலிமலைதான். ஆமா, நீ திருச்சிக்குத்தானே டிக்கட் எடுத்தே?"

"கோபிச்சுக்காதீங்க சார். இங்கே என் மாமன் வீடு. இங்கே இறங்கினால் பத்து நிமிஷத்திலே நடந்துடுவேன். திருச்சி போனா நாளைக் காலையிலே இதுக்காக மறுபடி வரணும்."

"துவரங்குறிச்சியிலே இறங்கியிருக்கலாமில்லே?"

வாலிபன் இரங்கிய குரலில் வேண்டினான், "இந்தப் பதினோரு மணிக்கு டவுன் பஸ் ஏதுங்க? தயவுசெய்து ஸ்லோ பண்ணச் சொல்லுங்க."

உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த டிரைவர் வேகத்தைக் குறைத்தார்; வாலிபன் சூட்கேசுடன் இறங்கிக் கொண்டு, "தாங்க்ஸ் ஸார்" என்றான்.

வண்டி புறப்பட்டது.

"இப்படி எத்தனைவிதமான கிராக்கியண்ணே. அரை டிக்கெட் வாங்காமே பிள்ளையைக் கூட்டி வர்றவங்க, மண்ணெண்ணெய்க் கேனைப் பையிலே வைச்சு மறைச்சு வர்றவங்க. சொல்லச் சொல்லக் கேக்காம புகை பிடிக்கறவங்க. செக்கிங் வருகிறபோது பழைய டிக்கெட்டை எடுத்துக் கொடுத்துட்டுப் பராக்குப் பார்க்கிறவங்க; எத்தனை ரகம்?"

"வேலாயுதம், இதெல்லாம் சமாளிக்கவும் வேணும்; ஆனா ரசிக்கவும் கத்துக்கணும். தெரியாமலா 'உன்னை நாடகம் ஆடுவித்தவா'ன்னு பாடியிருக்காங்க?"

"போங்கண்ணே, ரசிக்கணுமாம், இதை. இங்கே இப்படியா, வீட்டிலயும் நிம்மதியில்லே. எனக்குத் தெரியாமே தன் தம்பிக்கு இது வரையிலே காசுதான் கொடுப்பா என் சம்சாரம். நானும் கண்டும் காணாமே விட்டுடுவேன். நேத்து மூணு பவுன் சங்கிலியைக் கொடுத்திருக்கா. கேட்டால் சண்டை. எந்த நிம்மதியிலே நான் ஓட்டி பார்க்கிறது? எரிஞ்சி விழுறேன்னு பாசஞ்சருங்க புகார்."

"ஒரு விஷயம் சொல்றேன், கேட்டுக்க தம்பி. உனக்கு உள்ள இத்தனைப் பிரச்னையும் பாசஞ்சருக்குத் தெரியாதில்லே. எனக்கும் பிரச்னைகள் இல்லியா என்ன?"

"என்ன அண்ணே, நீங்க ராஜா வீட்டுக் கண்ணுக்குட்டியாட்டம் கவலையில்லாதவர் ஆச்சே?"

"தம்பி, வெளித் தோற்றத்தைப் பார்க்காதே. மூத்தவனைப் படிக்க வச்சு, தெரிஞ்சவர் கிட்டே சொல்லி ஒரு வேலையும் வாங்கிக் கொடுத்தேன். கல்யாணமாகி ரெண்டு குழந்தை

நேற்று : பொன் இன்று : மண் நாளை : மரம்

அபிராமியின்

தேக்கு மரத்திட்டம்

உங்கள் வளமான வாழ்க்கைக்கு இன்றே இணைவீர்! வளம்பெறுவீர்!!

ரூ. 540/- = ரூ. 75,000/-

- செலுத்தும் பணத்திற்கு உத்திரவாதமாக கேஷ் சர்டிபிகேட்
- ரூ. 10,000/- இலவச விபத்துக்காப்பீடு
- ரூ. 150/- வீதம் 4 மாதங்கள் தவணை முறையிலும் செலுத்தலாம்

ரூ. 1080/- = ரூ. 1.5 லட்சம்

- செலுத்தும் பணத்திற்கு உத்திரவாதமாக கேஷ் சர்டிபிகேட் அல்லது 1 சென்ட் நிலம்
- ரூ. 20,000/- இலவச விபத்துக்காப்பீடு
- ரூ. 150/- வீதம் 8 மாதங்கள் தவணை முறையிலும் செலுத்தலாம்

ரூ. 5400/- = ரூ. 7.5 லட்சம்

- செலுத்தும் பணத்திற்கு உத்திரவாதமாக கேஷ் சர்டிபிகேட் அல்லது 7 சென்ட் நிலம் இலவசம்
- ரூ. 20,000/- இலவச விபத்துக்காப்பீடு
- ரூ. 600/- வீதம் 10 மாதங்கள் தவணை முறையிலும் செலுத்தலாம்

ரூ. 10800/- = ரூ. 18 லட்சம்

- செலுத்தும் பணத்திற்கு உத்திரவாதமாக கேஷ் சர்டிபிகேட் அல்லது 11 சென்ட் நிலம் இலவசம் (4800 ச.அடி)
- ரூ. 20,000/- இலவச விபத்துக்காப்பீடு
- ரூ. 1000/- வீதம் 12 மாதங்கள் தவணை முறையிலும் செலுத்தலாம்

ரூ. 21600/- = ரூ. 36 லட்சம்

- செலுத்தும் பணத்திற்கு உத்திரவாதமாக கேஷ் சர்டிபிகேட் அல்லது 22 சென்ட் நிலம் இலவசம் (9600 ச.அடி)
- ரூ. 20,000/- இலவச விபத்துக்காப்பீடு
- ரூ. 1000/- வீதம் 24 மாதங்கள் தவணை முறையிலும் செலுத்தலாம்

✿ திட்ட காலம் 20 வருடம் ✿ மூன்று மாதங்களுக்கு ஒரு பரிசுக்குலுக்கல் மூலம் தொடர்பு ✿ ரூ. 10,800/- மற்றும் ரூ. 21,600/- க்கு இடைக்கால வருமானம் 6வது மற்றும் 12வது வருடம் பெறுவீர்

அபிராமி தேக்கு யூனிட்ஸ்

பதிவு அலுவலகம்: சித்ரா காம்ப்ளக்ஸ், சத்திரம் பஸ்ஸ்டாண்ட், திருச்சி - 2. ✆ 31467

கிளைகள் : ● 49/21, முருகன் காம்ப்ளக்ஸ், பிருந்தாவன் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை – 33. ✆ 4840258 ● 55/B, சின்னையா காம்ப்ளக்ஸ், ஐந்து ரோடு, கௌரி தியேட்டர் எதிரில், சேலம் – 4. ✆ 445037. ● D-6, K.L.R. பில்டிங், 207, சாஸ்திரி ரோடு, ராம் நகர், கோயம்புத்தூர் – 9. ✆ 230345.PP. ● 545, அருணா காம்ப்ளக்ஸ், இரண்டாவது தளம், கவின் மருத்துவமனை எதிரில், பெருந்துரை ரோடு, ஈரோடு–11. ✆ 74781.● ரெஸிடென்ஸியல் மேனேஜர் : திரு K.R. ராமமூர்த்தி, 34 லைன் தெரு, நாமக்கல் – 1.✆ 22310pp

SANMAC

30 சான்மேக்கின் விசேஷ நாட்கள்

டெபாசிட் சேகரிப்பு விழா

ஆகஸ்டு 15 முதல்
செப்டம்பர் 13, 1995 வரை.

ரூ.25 கோடி டெபாசிட் அடிப்படையையும், 20,000 டெபாசிட்தாரர்களையும் கொண்டுள்ள வெற்றிகரமான சான்மேக் நிதி நிறுவனம், செழிப்பான வருங்காலத்தை அமைத்துக் கொள்ள உங்களை வரவேற்கிறது.

ADEQUATE SAFETY
A
CARE

- [illegible]
- சுடுபடுத்தப்பட்டுள்ள நிதி ரூ.50 கோடி.
- EPS ரூ.5/- (ஆண்டு கணிப்பிலானது).
- கிளைகளின் எண்ணிக்கை 26.

ஒவ்வொரு டெபாசிட்டுக்கும் கவர்ச்சிகரமான பரிசு

SMF

SANMAC MOTOR FINANCE LIMITED

HIRE PURCHASE • LEASING • PUBLIC DEPOSITS
OTCEI • PROPERTY DEVELOPMENT

கார்ப்பரேட் அலுவலகம் : "ஜே.வி.எல். பிளாசா", 501, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. போன் : 4349678 / 4349508 / 4349805 .பேக்ஸ்:4343305

பதிவு அலுவலகம் : 14, கே.என்.கே. சாலை, சென்னை - 600 006. போன் : 8250601.

கிளைகள் : சென்னை - அண்ணாநகர் மேற்கு ✆ 6214454. அண்ணா சாலை ✆ 8520921. அசோக் நகர் ✆ 4824525, 4824624. மயிலாப்பூர் ✆ 8258637, 8251232, 4992488. புரசைவாக்கம் ✆ 6425036. தி.நகர் ✆ 8278515. மேற்கு தாம்பரம் ✆ 2366327. கோயம்புத்தூர் ✆ 446375. கடலூர் ✆ 22728. கும்பகோணம் ✆ 24844. மதுரை ✆ 23334. நெய்வேலி ✆ 22984. சேலம் ✆ 446607. திருநெல்வேலி ✆ 322032. திருவண்ணாமலை ✆ 23333, 22922. திருச்சி ✆ 25324. வேலூர். பெங்களூர் ✆ 5583856. மங்களூர் ✆ 428114. பாண்டிச்சேரி ✆ 37779. ஹைதராபாத் ✆ 397879. திருப்பதி ✆ 24376. விசாகப்பட்டினம் ✆ 545854. புதுதில்லி ✆ 5618257 பம்பாய் ✆ 8930278 (PP.). கொச்சி ✆ 366221.

SRICHAKRA COMS. 685/95

யுமிருக்கு. நம்ம வீட்லேயே இருக்காங்க. சம்பளத்திலே ஒரு பைசா குடுக்கிறதில்லை. குடியிலே இறங்கிட்டான். அந்தப் பொண்ணு கண்ணீர் விடுது."

"உங்களுக்கு ஒரு மகள் உண்டே?"

"இருக்கு. அது நல்லாப் படிக்குதேன்னு எம்.ஏ. வரைக்கும் படிக்க வச்சேன் ாாப் பிள்ளை கிடைக்கல்லே. படிப்பைப் பார்த்துப் பயப்படுறான். அல்லது, வேலையிலே இருக்கானாங்கிறான். என் மனைவிக்கு ஏழெட்டு வருஷமா சர்க்கரை நோய். அப்பப்ப ஃபோர் பினஸ்ஸ¬க்குப் போயிடுது. சிரமப்படுறா. மனசுக்கு வருத்தமாயிருக்கு...."

"அண்ணே, இவ்வளவிலே எப்படி முகம் சுளிக்காம ஓட்டி பண்ணுறீங்க?"

"தம்பி, நம்ம கஷ்டம் தனி என்று வச்சிட்டேன். இந்த இருபத்தோரு வருஷத்தில் ஒரு விபத்தும் இல்லாமல் வண்டி ஓட்டினேன் என்றால் காரணம் இருக்கு அப்பா. வண்டியிலே ஏறினா ரோட்டு ஞாபகம், வீட்டுப் படி ஏறினா குடும்ப ஞாபகம். இதுதான் என் சூத்திரம்."

ஒரு பாசஞ்சர் அலறினார்.

"அய்யய்யோ, என் சூட்கேசைக் காணோமே. சார், சார், வண்டியை நிறுத்துங்க."

"என்னய்யா ஆச்சு?" என்றான் வேலாயுதம் எரிச்சலோடு.

"என் பெட்டியைக் காணோமய்யா, என் கால் பக்கத்திலே இங்கேதான் வச்சிருந்தேன். பக்கத்திலேயிருந்த ஒரு பையனையும் காணோம்."

தூக்கம் கலைந்த பயணிகள் ஆளுக்கு ஆள் பேசினார்கள். முன் வரிசையில் இருந்த ஒருவர் சந்தேகம் கிளப்பினார். "அரைமணி முன்னாலே ஆள் ஒருத்தன் இறங்கினானே, அவன் கையிலே இருந்த சூட்கேசாயிருக்குமோ?"

"சார், அது என் பெட்டிதான். சந்தேகமேயில்லை."

"என்னடா இது சங்கடம்" என்றான் வேலாயுதம்.

"இன்னுமா அந்த ஆள் அங்கேயிருப்பான். இந்த இருட்டிலே எந்தப் பக்கம் போனானோ?"

"பக்கத்திலே ஏதாவது தோப்பிலே மறைந்துவிட்டிருப்பான்."

"இல்லேன்னா, எதாச்சும் ஒரு கிராமத்திலே நுழைஞ்சு இருப்பான்."

"பெட்டியிலே என்னய்யா இருந்தது?" என்றார் சங்கரலிங்கம், வண்டியை மெதுவாக்கிய படி.

"இருபத்தஞ்சு சவரன் நகையும் பதினாறாயிரம் ரூபாயும் இருந்தது. ரெண்டு பட்டுப் புடைவையும், தங்கச்சி மாப்பிள்ளைக்கு வாங்கிய ஒரு கைகடியாரமும் இருந்தது."

அருள்வாக்கு



சப்தம் என்பது என்ன? Vibrationதான் (அதிர்வுதான்) என்று இன்றைய ஸயன்ஸில் சொல்கிறார்கள். அணு விஞ்ஞானமும், ஐன்ஸ்டீன் கொள்கையும் என்ன சொல்கின்றன வென்றால், 'அணுவுக்குள் புகுந்து பார்த்தால் எல்லா வஸ்துவும் ஒன்றுதான், (அத்வைதம்தான்.) லோகமெல்லாம் ஒரே சக்தி வெள்ளம்தான். எல்லாம் ஒரே electro-magnetic (மின்-காந்த) பிரவாஹம்தான். ஆனால் ஏன் இப்படி வேறு வேறு வஸ்துக்களாகத் தெரிகிறது என்றால், அந்த ஒரே சக்தியில் தோன்றுகிற வெவ்வேறுவிதமான Vibrationsகளால்தான்' என்று சொல்கின்றன.

அதிர்வு உண்டானால் சப்தம் உண்டாகிறது. இதையே திருப்பிச் சொன்னால் சப்தம் உண்டாக வேண்டுமானால் அதற்கான அதிர்வு ஏற்பட்டாகவேண்டும்.

ஒரே சக்தியில் பலவித Vibration ஏற்படுவதால், லோக ஸ்ருஷ்டி உண்டாவதாகச் சொல்கிற விஞ்ஞானக் கருத்தும், பரமாத்மாவின் சுவாஸமான வேத சப்தத்திலிருந்து லோகம் வந்தது என்பதும் முழுக்க ஒன்றேதான்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

நேசம்

உங்களை நேசிப்பவர்களை மட்டும் நேசிப்பதால் நற்பெயர் கிடைக்கும் என்று நினைக்கிறீர்களா? உங்களுக்கு நன்மை செய்பவர்களுக்கு, நீங்கள் நல்லது செய்தால், அதில் என்ன அதிசயம் உள்ளது? பாவிகளும் அந்த அளவுக்கு நன்மை செய்கின்றனர். உங்கள் எதிரியை நேசியுங்கள். அவர்களுக்கு நன்மை புரியுங்கள். பின் பரமண்டலத்திலிருந்து உங்களுக்குக் கிடைக்கும் பரிசு உயர்ந்ததாக இருக்கும்; நீங்கள் இறைவனின் புதல்வர்களாக, உண்மையில் நடப்பவர்கள் ஆவீர்கள்.

– இயேசுநாதர்.



"காலத்துக்குத் தகுந்த மாதிரி எங்க தாத்தா தன்னை மாத்திக்குவார்!"

"அதுக்காக நாகம்மாங்கற உங்க பாட்டி பேரை, 'நக்மா'ன்னு கூப்பிடறது நல்லாவா இருக்குது?"

- எஸ். பழனிவேலு

"சரி அய்யா, இவ்வளவு அசாக்கிரதையா நீ இருக்கலாமா?"

"என்ன சார் பண்ணுவேன்? பதினஞ்சு நாளா நிலத்தை விற்க, பத்திரம் பதிய, கடை கண்ணிக்குப் போக இப்படி ஒரே அலைச்சல். கண் அசந்திட்டேன்."

"இப்போ பார்! அவ்வளவும் வீணாப் போச்சு. எவனோ ஒருத்தன் இடையிலே புகுந்து எல்லாத்தையும் அடிச்சிட்டான்" என்றார் ஒரு பெரியவர்.

அவரவர் பேசினார்கள். வேலாயுதம் இந்தத் தலைவலிக்கு என்ன செய்வது என்றபடி சங்கரலிங்கத்தைப் பார்த்தான்.

அவர், "தம்பி, இவருக்கு அதிருஷ்டம் இருக்கிறதா என்று பார்க்கிறேன். முன்பக்கத்தில் உள்ள சென்னை என்ற போர்டை எடுத்துட்டு மதுரை என்ற பலகையைப் போடு. நான் வண்டியைத் திருப்பறேன். நல்லவேளை, எதிர் வண்டி எதுவும் இன்னும் போகல்லே. என் ஊகம் எப்படியாகுதோ?"

வண்டியை ஓரமாகக் கொண்டு போய் வந்த வழியே திருப்பினார். உள் விளக்குகள் எல்லாவற்றையும் அணைத்தார். முன் விளக்குகள் இரண்டையும் பிரகாசமாக்கினார்.

வண்டி வேகமெடுத்தது.

பயணிகள் ஆர்வமிகுதியால் ஒருவர்க்கொருவர் பேசினார்கள்.

டிரைவர் குரல் கொடுத்தார். "அய்யா, யாரும் சத்தங்கொடுக்காதீங்க. தூங்கறவங்களாகவே இருங்க."

வேலாயுதத்துக்கு அவரது இலக்கு புரிந்தது; கம்மென்று இருந்தான். 'போன பொருளாவது கிடைப்பதாவது' என்று நினைத்தபடி.

"இந்தா வேலாயுதம், இந்த மப்ளரைத் தலையிலே சுற்றிக் கொள்" என்றார் டிரைவர். வாங்கித் தலைப்பாகை மாதிரி கட்டிக் கொண்டான்.

பாலத்தை நெருங்கிக் கொண்டிருந்தது வண்டி. முன்விளக்கு வெளிச்சத்தில், பாலத்தின் கீழிருந்து ஒருவன் அவசரமாகச் சாலையில் ஏறுவதும், வண்டியின் மேல் போர்டை உற்றுப் பார்ப்பதும் தெரிந்தது.

"அவன்தான், அவனேதான்" என்றார் முன் வரிசைக்காரர்.

"உஸ், உஸ்...." என்று அடக்கினார் மற்றொருவர்.

பெட்டியைக் கையில் பிடித்தபடி, வாலிபன், நிறுத்துமாறு கையாட்டினான். டிரைவர் சஸ்பென்ஸ் கொடுத்துப் பத்தடி அவனைத் தாண்டிச் சென்று வண்டியை மெதுவாக்கினார்.

மப்ளர் தலை சற்று வெளியே நீண்டு, "என்ன?" என்றது கரகரத்த குரலில்.

"மதுரைக்கு ஒரு டிக்கட்."

"இடமில்லே, ஸ்டாண்டிங்தான்" என்று தன் பங்குக்கு சஸ்பென்ஸ் கொடுத்தான் வேலாயுதம்.

"பரவாயில்லே, நின்னுக்கிட்டே வர்றேன்."

வண்டி நிற்க, வாலிபன் ஏறியதும் கதவைத் தாழிட்டான் வேலாயுதம்.

"இங்கே ஒரு வேலையாக வந்தேன். நேரமாகி விட்டது...." என்ற பேச்சு தடைப்பட்டது. உள்விளக்குகள் எல்லாவற்றையும் போட்டார் சங்கரலிங்கம். வாலிபன் திகைத்தான், உட்புறத்தைப் பார்த்து.

முண்டாசை அவிழ்த்தான் வேலாயுதம். பெட்டிக்காரன் பாய்ந்து சென்று பெட்டியைப் பிடுங்கி அணைத்தான்.

வாலிபனுக்குத் தர்ம அடி விழத் தொடங்கியது.

கால்மணி கழித்துத் துவரங்குறிச்சிக் காவல் நிலையத்தின் எதிரே வண்டி நின்றது. அந்தப் பழைய கேடியைக் குப்பையாக உள்ளே தள்ளிக் கொண்டு போனார்கள்.

வெளியே....

பெட்டிக்காரன் கண்களில் நீர் முத்துகள் திரண்டன.

"அய்யா, நீங்க ரெண்டு பேரும் என் குடும்பத்தை வாழ வச்சீங்க. உங்களுக்கு நான் என்ன உபகாரம் செய்யப் போறேன்..." அவன் நாக்கு தழுதழுத்தது. விக்கினான்.

வேலாயுதம் பிரமிப்புடன் சங்கரலிங்கத்தையே பார்த்தபடி நின்றான்.

"என்னப்பா, பார்க்கிறே. 'கடமை என்ன கடமை; சலிப்பா இருக்கு; வேலையே பிடிக்கல்லே; இதிலே பரிசு என்ன கிடக்கு'ன்னு சொன்னியே. இந்த ஆள் விடுகிற கண்ணீர்தான் நமக்கு ஆண்டவன் தருகிற பரிசு! தெரிஞ்சுக்கோ" என்றார்.

22

என்னுயிரும்

“கதிரேசன், நீங்க வீட்டுக்குப் போற எண்ணத்தை இப்போதைக்கு உட்டுறுங்க. இப்ப பெய்திருக்கிற மழைக்கே பாதை புரண்டு போய் இருக்கும். உங்களுக்கு இந்த எஸ்டேட் புடிச்சிருக்கோ, இல்லையோ... இந்த எஸ்டேட்டுக்கு உங்களைப் புடிச்சுப் போச்சு! எஸ்டேட் புள்ளையாருக்கு உங்களைப் புடிச்சுப் போச்சு! வேண்டாம், வேண்டாம்னாலும் சிலருக்கு சில சௌபாக்கியங்கள் மடியில வந்து ஒட்டத்தான் செய்யும்.

“பிரட் சாண்ட்விட்ச் பண்ணித் தாரேன். காத்தால குழம்பு இருக்கு. புதுசா சாதம் வடிச்சு குழம்பு சூடு பண்ணித் தரேன். சாப்பிட்டுட்டு இங்கேயே படுங்க” கிருஷ்ணமூர்த்தி அய்யர் உத்தரவு போல் சொன்னார்.

சரி, சரி, சரிசரி என்று இடிஇடித்தது. கூடவே பசித்தது. உண்டு முடித்ததும் களைப்பு ஏற்பட்டது. மழையைப் பார்த்துக் கொண்டிருந்ததில் கிறக்கம் வந்தது.

“இங்க படுத்திருங்க.”

கிருஷ்ணமூர்த்தி அய்யர் தமது அறையைக் காட்டினார். கதவைச் சாத்தி விட்டு ஹாலில் பாய் விரித்துப் படுத்துக் கொண்டார்.

பாலகுமாரன்

இருட்டும் மழையும் இவையால் ஏற்பட்ட ஒரு குளிரும் அருகே இளமை கொண்ட பெண்ணும் இருக்க, மனம் கரையாமல் போவதற்கு மிகுந்த பயிற்சி வேண்டும்.

“இந்த எஸ்டேட் முடிச்சுடலாமா?” சொர்ணலட்சுமி எதிரே உட்கார்ந்து கேட்டாள்.

“தெரியலை. இது கிருஷ்ணமூர்த்தி அய்யரைப் பொறுத்திருக்கு. நாப்பதாயிரத்தை விட பெரிய ஆசை ஒண்ணும் வந்துடாது. அதும் தவிர எஸ்டேட்ல சரி பண்ண வேண்டியது நிறைய இருக்கு.”

“ஏன் காப்பி வாங்குற மாதிரி முடிவு பண்ணிட்டீங்க? பக்கத்து எஸ்டேட் இல்ல வாங்கணும்னு பேசிட்டிருந்தீங்க?”

“இதுக்கே காசு பத்தாது! பக்கத்து எஸ்டேட்டுக்கு நாம விலை விசாரிச்சா போதும், ரொம்ப உயரமா விலை சொல்லுவான். கவனிக்காத எஸ்டேட்டா இருந்தாக்கூட ஏலக்காய்க்கு நிறைய பேர் வர்றாங்கன்னு தெரிஞ்சு, ஏத்துவான். காப்பி எஸ்டேட் அனாதைக் குழந்தை மாதிரி. விட்டுட்டு வேற தொழில் செய்ய எல்லாரும் தயாராயிட்டாங்க. காப்பிக் கொட்டை விக்கவேயில்லை. வாங்குறவன் சொல்றதுதான் விலையாயிருக்கு.”

“அப்படின்னா நீங்க ஏன் வாங்கறீங்க?”

“எங்கப்பா செய்ததையே நானும் செய்தா என்ன மதிப்பு? ஏலக்காயில நான் எவ்வளவு கொடிகட்டிப் பறந்தாலும், எங்கப்பா விட்டு மாதிரி எஸ்டேட் கொடுத்துட்டுப் போனா ருன்னுதான் வரும்.”

“பகவதியக்காகிட்ட கேக்க மாட்டீங்களா?”

“எது, எது கேக்கறது?”

“வாங்கலாமா, கூடாதான்னு.”

“அவங்களுக்கு காப்பி எஸ்டேட் பத்தி ஒண்ணும் தெரியாது.”

“அப்ப என்ன தைரியத்துல வாங்கறீங்க?”

“உள்ளே ஏதோ வாங்கணும்னு ஒரு குரல் கேட்குது.”

“தப்பாயிடுச்சின்னா?”

“அம்மாவுக்கு வட்டியும் முதலுமா பனிரெண்டரை லட்ச ரூபாய் கடன் கொடுக்கணும். கல்யாணத்துக்கு வர்ற பொண்ணு கிட்ட நகையா பாத்திரமா காசா வாங்கி அம்மாட்ட கொடுத்துட்டு, ஜீரோவிலிருந்து ஆரம்பிக்கணும்.”

சொர்ணலட்சுமி முகம் வாடினாள். எத்தனை அன்பாய், உரிமையாய் பேசினாலும் தான் அவன் சாதிப் பெண் இல்லை. தன்னை மதித்து இவன் திருமணம் செய்ய மாட்டான் என்று நினைத்து வருந்தினாள்.

கதிரேசன் அவ



ளையே பார்த்துக் கொண்டிருந்தான். பனிரெண்டரை லட்சத்தை அம்மா கேட்கப் போவதில்லை. குதிரை மீது கட்டுவது போல, சூதாடுவது போல இந்தக் காப்பி தோட்டத்தில் காசு போடலாம். புதிய தொழில் என்பதால் ஆர்வமாய் பலதும் கற்கலாம். புதிய தொழிலாளர்களை நியமிக்கலாம். புதிதாய் சம்பளம் பேசலாம். எல்லாம் எனக்குத் தெரியும் என்று அலட்டிக் கொள்கிற தொழிலாளியிடமிருந்து அன்னியமாய் இருக்கலாம்.


அப்பா போன தடத்திலேயே மகன் போவதில் மிகப் பெரிய இடைஞ்சல் இருக்கிறது. அப்படிப் போகும் மகனை அப்பா வளர்த்த நாய் கூட மதிக்காது. எதிர்த்துக் குரைக்கும். 'சின்ன முதலாளி, உங்களுக்கு ஒண்ணும் தெரியாது. சும்மா இருங்க' என்று வசனம் பேசும்.

எல்லாவற்றையும் விட கதிரேசன் பகவதியைப் பற்றி அச்சப்பட்டான். வீட்டோடு எத்தனை ஒட்டினாலும் அம்மா மீது எவ்வளவு மரியாதை வைத்தாலும், தன் மீது எத்தனை பாசம் பொழிந்தாலும், அந்த எஸ்டேட்டில் பகவதி சின்னம்மாவே நம்பர் ஒன். ஒரு வார்த்தை அவளை அனுமதி கேட்டே ஆக வேண்டும். ஒவ்வொன்றுக்கும் கேட்டே ஆக வேண்டும்.

அப்பா என்கிற மிகப் பெரிய தூண் விழுந்து, தலைக்கு மேல் உள்ள கூரை சரிந்து வெட்டவெளியாகி விட்டது. விதி, 'நீயே உன் கூரையைக் கட்டிக் கொள் கதிரேசா' என்று

நீயல்லவோ





"ஏண்டா ஒரு மணி நேரம் லேட்டா வர்றே?"

"கடுமையான தலைவலி சார்!"

"எனக்கும்தான் தலைவலி. நான் சீக்கிரம் வரலையா?"

"உங்களுக்குச் சம்பளம் கொடுக்கிறாங்களே, சார்?"

— பெ. கலாசாமி

சொல்லி விட்டது. இதற்குப் பிறகு எவரோடும் எதற்கும் ஒட்டுவதில் அர்த்தம் இல்லை. 'நீயே வளர்ந்து வா' என்று விதி சொன்ன பிறகு வேறு யார் முன்னும் கை கட்டுவதில் லாபம் இல்லை.

சரியோ, தவறோ, லாபமோ, நஷ்டமோ தொழில் சுயமாக இருக்க வேண்டும். நட்டமெனில் அது பாடம். லாபமெனில் அது மகத்தான வெற்றி. இவை இரண்டுமே என்னைக் கவிழ்த்து விடாது. என்னை அடையாளமின்றி ஆக்கி விடாது. இந்த இரண்டு அனுபவங்களுமே என்னை பலமுள்ளவனாக்கும். என்னைப் பார்த்து நானே பதறாமல் இருக்கத்தான் கற்றுக் கொள்ள வேண்டும்.

கட்டிலில் சாய்ந்து கால்களை நீட்டி கண்களை மூடிக் கொண்டு யோசித்தான்.

யோசிக்கிற அந்த ஆண் மகனை சொர்ண லட்சுமி ஆவலோடும் ஆசையோடும் பார்த்தாள். அவள் வீட்டு ஆண்கள் யாரும் அப்படி யோசிப்பதில்லை. அப்படி யோசிக்கிறவனை அவளுக்குப் பிடித்திருந்தது. எப்படியாவது இவனை மடக்கிப் போட்டு இவனுடைய விஷயங்கள் எல்லாவற்றிலும் பங்குபெற வேண்டும் என்று தோன்றியது. இன்னும் சற்று நெருங்கி உட்கார்ந்தாள்.

சொர்ணலட்சுமி கதிரேசனுடைய உடம்பின் கம்பீரத்தால் கவரப்பட்டாலும் முன்னேற வேண்டும் என்றும் அப்படி முன்னேற வேண்டுமெனில் தான் தனியாகச் செயல்பட வேண்டும் என்பதும், துணிச்சலாய் சோதனைகள் செய்து பார்க்க வேண்டும் என்று ஆசைப்படுவதையும் உற்று கவனித்துக் கொண்டாள்.

"அய்யோ... எங்க வீட்டில திட்டுவாங்க" என்று துணிச்சல் இல்லாத ஆண் பிள்ளையாக இவன் இல்லை. பகவதியிடம் இவனுக்கு ஒரு மரியாதை இருக்கிறது. சின்னம்மாவின் நேசிப்பில், உபசரிப்பில், அப்பாவைப் பற்றி அவள் நினைவுகூர்ந்து அழுவதில் இவன் நெகிழ்ந்து போகிறான். இந்த நெகிழ்வு அவனை மழுங்கடிக்கும். கொஞ்சம் தடுமாற வைக்கும். ஆண் பிள்ளை மிகக் குறைவாகத்தான் நெகிழ வேண்டும், மனைவி மகள், மகள் என்றுதான் பிரியம் காட்ட வேண்டும். சின்னம்மா, பெரியம்மா, தாத்தா, பாட்டி என்று போனால் அன்பில் ஊறவைத்துத் தின்று விடுவார்கள். ஆண் சற்று முரடாக இருப்பதும் தெளிவாக இருப்பதும் நல்லது.

கதிரேசன் முரடாக இருக்க வேண்டும் என்றால் அவனை பகவதி அக்காவிடமிருந்து பிரிக்க வேண்டும். அவனை பகவதி அக்காவிடமிருந்து பிரிக்க வேண்டும் என்றால், தன் பக்கம் இழுக்க வேண்டும். இந்த எஸ்டேட்டை வாங்கும்படி செய்ய வேண்டும்.

இவனைத் தன் பக்கம் இழுக்க வேண்டும் என்றால்... சொர்ணலட்சுமி கூர்மையாக யோசித்தாள். பின், துள்ளி எழுந்தாள். பூமி குலுங்கியது.

"**நா**ன் மழை வேடிக்கை பார்க்கப் போறேன்."

ஜன்னலோரம் போனாள். எம்பி, கண்ணாடிக் கதவுகளைக் கைதூக்கித் திறந்தாள். விஷத்தில் தோய்ந்த அம்பு போல குளிரில் தோய்க்கப்பட்ட சாரல் முகத்தில் தாக்கியது. கோட்டையைச் சுற்றிக் கொண்ட குதிரைப் படை போல ஊதக்காற்று ஆளைச் சுற்றிக் கொண்டது.

மலை வீடுகளில் அறையோரம் புகை போக்கியோடு கணப்பு இருக்கும். காய்ந்த விறகுக் கட்டைகள் அருகே இருக்கும். அரை பாட்டில் கெரசினும் நெருப்புப் பெட்டியும் அறைக்குள் எங்காவது வைக்கப்பட்டிருக்கும்.

சகலமும் தேடி, கதிரேசன் கணப்பு பற்ற வைத்தான். கணப்பு கொழுந்து விட்ட நேரம் பெரிய இடி இடித்தது. மின்சாரம் துண்டிக்கப்பட்டது. மழை இன்னும் வலுத்துப் பெய்தது.

"கடவுளே இருட்டுல மழை எவ்வளவு நல்லாருக்கு!"

நெருப்பு வெளிச்சத்தில் சொர்ணலட்சுமியின் வனப்பு சிவந்து தகதகத்தது. கதிரேசன் அவளை வைத்த கண் வாங்காமல் பார்த்தான்.

'உனக்குன்னு ஒரு செட்டியார் பொண்ணு எங்காவது இருநூறு சவரனோட பொறந்திருப்பா கதிரேசா! அவகிட்டயும் இந்த அழகெல்லாம் இருக்கும். இவகிட்ட மாட்டாதே. ஜாக்கிரதையா இரு. இது முக்கியமில்லை கதிரேசா. பொம்பளையை விட பொழப்பு முக்கியம். பொம்பளையால பொழப்பு கெட்ட மாதிரி ஆயிடக் கூடாது.'

மனத்தின் ஒரு கோடி கடுமையாக எச்சரித்தது. கதிரேசன் அந்த எச்சரிக்கையை கவனமாகக் கேட்டுக் கொண்டான்.

'ஒழுக்கமா இருந்துட்டா உயர்வா மாறிடலாமா? உயரத்துல இருக்கிறவன் எல்லாம்

நிலையான பாதுகாப்பு... நிறைவான வருமானம்...

திருமகள்

வழங்கும்

25% + 5%

வட்டி ஊக்கத் தொகை

36
மாதங்களில்
உங்கள் முதலீடு
இருமடங்காகிறது

திருமகள்.. உங்கள் வீட்டுப் பொன்மகள்...

THIRUMAGAL LEASING & HIRE PURCHASE CORPORATION

H.O.: D-1, Hongkong Complex, 9, Ramanathan Street,
T. Nagar, Madras - 600 017. Ph : 434 7408
Branch : 194, V.V.P. Building, Anna Salai, Thiruvarur, Ph: 22906.

வேலை நேரம் : 10.00 A.M. To 6.30 P.M.
ஞாயிறு : 10.00 A.M. To 1.00 P.M.

SPRINGHEAD



"வேலை ஏதாவது கொடுங்க சார்."
"இல்லப்பா!"
"ஐயா சாமி தர்மம் போடுங்க!"
"முதல்ல வேல கேட்ட.... இப்ப பிச்சை கேக்கற?"
"முதல்லயே பிச்சை கேட்டிருந்தா, 'உடம்பு நல்லாத்தானே இருக்கு; உழைச்சுப் பிழைச்சா என்ன'ன்னு மடக்கிடுவீங்களே!"

— ஆலத்தம்பாடி ராஜகோபால்

ஒழுக்கமாத்தான் இருக்கானா? வாய்ப்பு கிடைக்கறப்ப உட்டுட்டு, வாய்ப்பே இல்லாத போது ஏங்கி சாவாதே. இந்த எஸ்டேட் நீ வாங்கப் போற. இதுக்கு இந்த பொம்பளை இடைஞ்சலா? கதிரேசா எதையும் நீயா யோசிக்கக் கத்துக்க. உன்கிட்டயிருந்து ஆரம்பி. மத்தவங்க சொன்னாங்க, பெரியவங்க கட்டளை - இப்படித்தான் உன்னால யோசிக்க முடியும்னா இந்த காப்பி எஸ்டேட் உன்னால வாங்க முடியாது. நீ வாங்க வேண்டிய அவசியம் கிடையாது. பகவதி சின்னம்மா என்ன சொல்றாங்களோ அதைக் கேட்டுகிட்டு மதுரைக்கும், மலைக்கும் அலைஞ்சுட்டு கிட. தாலி கட்டின செட்டியார் பொண்ணு திட்டினா வாங்கிக்க. கொண்டாடினா நான் இல்லை, கடவுள்னு சொல்லு.'

'கதிரேசா சரியோ, தவறோ, நல்லதோ கெட்டதோ, இன்னொருத்தர் மேல பாரம் போடாதே. நீயா செய். வந்ததை அனுபவி.'

மனசு உரக்கக் கத்தியது.

'ஹலோ... என்னா பயமுறுத்தறீங்க? இவளைத் தொட்டுட்டா நாங்க எல்லாத்தையும் இழந்திடுவோமா? மிஞ்சி, மிஞ்சிப் போனா இன்னா நடக்கும்? என்னைக் கல்யாணம் பண்ணிக்கோன்னுவா. முடியாதுன்னு சொல்லிப் பாப்போம். அழுது பிடிவாதம் புடிச்சா வாங்கற எஸ்டேட்டுல குடித்தனம் வைச்சுக்கிடுவோம்.'

'அப்ப செட்டிப் பொண்ணு?'

'அதுவும் நடக்கும்.'

'அதெல்லாம் அந்தக் காலம்! உங்கம்மாவுடைய காலம். இப்பெல்லாம் இந்த விளையாட்டுக்கு எந்தப் பொண்ணும் ஒத்துக்க மாட்டா.'

'சரி, அப்ப செட்டியார் பொண்ணு வேணாம். இவ போதும்.'

கதிரேசன் எழுந்து போய் அவளை ஆவலோடு பார்த்தான்.

அவள் வெளியே காட்டிக் கொள்ளாமல் உள்ளுக்குள் பரபரத்தாள். தவித்தாள். இன்னும் நெருங்கட்டும் என்று தயாரானாள்

"இன்னா?"

அவள் குரலில் அவளை மீறிய நடுக்கம் இருந்தது.

"ஒன்றுமில்லை."

"ஏன் அப்படி பார்க்கிறீங்க?"

"ஏன் பார்க்கக் கூடாதா?"

"பயமாயிருக்கு."

"என்ன பயம்?"

"எதாவது பண்ணிடுவீங்களோன்னு பயம்."

"இதுக்கு பயப்படுவானேன்!"

"அடுத்த ரூம்ல அய்யர் இருக்காரில்லை?"

"பொண்டாட்டின்னு சொல்லி வைச்சிருக்கியே!"

"நான் சொல்லலை. அவர் நினைச்சிக்கிட்டார்."

"அது இன்னும் உத்தமம்!"

"ஆனா நாம்ப புருஷன், பொண்டாட்டி இல்லியே."

"அதனால இன்னா?"

"தப்பாயிடும்."

"எப்படி தப்பாகும்?"

"வாணாங்க!"

"ஏன்?"

"எனக்கு பயமாருக்கு!"

"விட்டுட்டு, மதுரைக்கு ஓடிப் போயிடுவேன்னு நினைக்கிறியா?"

அவள் மௌனமாக இருந்தாள். அந்த மவுனத்தில் 'ஆமாம்' என்கிற சொல் ஒளிந்திருந்தது.

"அப்படி ஓடிட்டா நீ சும்மா உட்ருவியா, இல்ல சின்னம்மாதான் சும்மா இருப்பாங்களா! ஊரு நாறி, உறவு நாறி மறுபடியும் உன் கூட வாழ்ந்துதான் ஆகணும்னு எல்லாரும் கட்டளை போட்டு, அப்படி வாழற போது கஷ்டமாயிடாதா? உன்னைப் புடிச்சிருக்கு சொர்ணலட்சுமி! உனக்கு என்னைப் புடிச்சிருக்கா?"

அவள், 'என்ன பதில் சொல்வது' என்று தெரியாமல் தடுமாறுவது போல் நடித்தாள்.

"உன்னைப் புடிக்கலை, உன்னை விட பெட்டரா ஒரு ஆம்பளையத்தான் நான் புருஷனா எதிர்பார்க்கிறேன்னு நீ சொன்னா நான் விலகிடறேன்!"

அவள் சட்டென்று அவன் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

அக்னியிலிருந்து உண்டானது அக்னியை வளர்க்கும். காமத்திலிருந்து உண்டானது காமத்தை வளர்க்கும். ஆனால், காதலற்ற காமம் தவறு. காதலற்று எது செய்தாலும் தவறு. அவர்கள் காமத்தைக் காதலென்று நினைத்துக் கொண்டார்கள்.

(தொடரும்)

காசி பில்டர்ஸ் வழங்கும்

காசி குருப் ஹவுசிங் பெனிபிட் ஸ்கீமின்

50% சிறப்புத் தள்ளுபடி

காசி குருப் ஹவுசிங் பெனிபிட் ஸ்கீம்: இத்திட்டத்தில் ரூ. 1,500/- முதல் ரூ. 5,000/- வரை மாதத்தவணைகளாகச் செலுத்தி குலுக்கல் மூலம் 300 முதல் 1000 சதுரடிகள் வரை உள்ள வீட்டினை தேர்ந்தெடுத்து சொந்த வீடாக்கிக் கொள்ளலாம். மீதித் தொகையை சொந்த வீட்டில் இருந்துகொண்டே வாடகைபோல் செலுத்தலாம். இத்திட்டத்தில் வீடு பதிவு செய்பவர்களுக்கு முதல் தவணைத் தொகையில் 50% சிறப்புத் தள்ளுபடி வழங்கப்படும்.

சுபமங்களா திட்டம்: இத்திட்டத்தின் கீழ் தங்களுக்கு பிடித்தமான வீட்டைத் தேர்ந்தெடுத்து ரூ. 10,000/- மட்டுமே அட்வான்ஸாகக் கொடுத்து உடனடியாக உங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளலாம். பின்பு, ஒரு மாத காலத்திற்குள் வீட்டின் மொத்த தொகையில் 25% மட்டுமே செலுத்த வேண்டும். மீதமுள்ள 75% தொகைக்கு கடன் வழங்கும் நிறுவனமான எல்.ஐ.சி., கேன்ஃபின் ஹோம் மூலமாக தங்களுக்கு கடன் உதவி ஏற்பாடு செய்து தருகிறோம்.

ஒரு சதுரடியின் விலை
500/-
மட்டுமே

வீடு கிடைக்கும் இடங்கள் - சென்னை கே.கே.நகர் மேற்கு, விருகம்பாக்கம், வளசரவாக்கம், போரூர், வடபழனி, சாலிகிராமம், நங்கநல்லூர், கோடம்பாக்கம் (ரங்கராஜபுரம் மெயின்ரோடு), பல்லாவரம் (ரயில் நிலையம் அருகில்) ஆகிய இடங்களில் வீடுகள் பெறலாம்.

குறிப்பு: மேலும் ''காசி குருப் ஹவுசிங் பெனிபிட் ஸ்கீம்''ன் தவணைமுறைத் திட்டத்தின் மூலமாக விரைவில் மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், பெங்களூர் போன்ற பெருநகரங்களில் வீடுகள் கட்டித் தரப்படும்.

குறிப்பு :- வாடிக்கையாளர்கள் எங்களது ''காசி குருப் ஹவுசிங் பெனிபிட் ஸ்கீம்''ல் உறுப்பினராக சேர விரும்புவோர் கீழ்கண்ட கூப்பனை நாள், நேரம் குறிப்பிட்டு பூர்த்தி செய்து கீழ்கண்ட எங்களது முகவரிக்கு அனுப்பி வைப்பீர்களேயானால், எங்கள் நிறுவனத்தின் பிரதிநிதி தங்களின் இருப்பிடத்திற்கு நேரில் வந்து அனைத்துத் திட்டங்களையும் தங்களுக்குப் புரியும்வண்ணம் எடுத்துரைப்பார்கள். தாங்கள் ''காசி குருப் ஹவுசிங் பெனிபிட் ஸ்கீம்''ல் சேர விரும்பி அதற்கான தொகையை, எங்கள் பிரதிநிதியிடம் பணமாகவோ அல்லது காசோலையாகவோ செலுத்தும் பட்சத்தில் பணம் பெற்றுக் கொண்டதற்கான ரசீது மற்றும் சான்றிதழ்களை தாங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு

காசி பில்டர்ஸ் மற்றும்

காசி ஹவுசிங் & டெவலப்மெண்ட் லிட்.

காசி டிரேட்டர் காம்ப்ளெக்ஸ் 91, 92 ஜவஹர்லால் நேரு சாலை, அசோக் நகர், சென்னை - 600 083.
போன் : 4822206, 4821969, 4825506 FAX : 044-4825606
கிளை அலுவலகம் : எ. 13 கிழக்கு ஜோன்ஸ் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை-15. போன் : 456464

ஞாயிறு முழு அலுவலகம் உண்டு.

காசி குருப் ஹவுசிங் பெனிபிட் ஸ்கீமின் வெற்றிகரமான 17வது குலுக்கல் வரும் 29.10.95 அன்று நடைபெற உள்ளது.

தங்கள் நிறுவனத்தின் ''காசி குருப் ஹவுசிங் பெனிபிட் ஸ்கீம்''ல் உறுப்பினராக சேர விரும்புகிறேன். இது பற்றிய விபரம் அறிந்துகொள்வதற்கு தங்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

பெயர் : ....

முகவரி : ....

....

நாள் .... நேரம் ....

கையொப்பம்

ஹலோ, ஹார்ட் லைன்!

டெலிவிஷன், டெலிபோன் மாதிரி டெலிமெடிசின் வந்தே விட்டது!

"இதயத் துடிப்பு அதிகரித்து - பால்பிடேஷன் மாதிரி - படபடவென்று அடித்துக் கொள்கிறதா? அல்லது செஸ்ட் பெய்ன் தொடங்குகிறதா? சின்ன வாக்மேன் சைஸில் இருக்கும் இந்த டெலிபீப்பரை எடுத்துக் கொள்ளுங்கள். இதன் மூன்று எலக்ட்ரோடு முனைகளில் இரண்டை இடது, வலது கைகளுக்கு அடியிலும், மூன்றாவது முனையை இடுப்பு பெல்ட் கட்டுகிற இடத்திலும் பொருத்திக் கொள்ளுங்கள். பிறகு அப்போலோ கார்டியாக் சென்டரை டெலிபோனில் அழைத்து, டெலிபோன் அருகே பீப்பரைப் பிடித்துக் கொள்ளுங்கள்.

டெலிபோன் வழியே கார்டியாக் சென்டரை அடையும் ஒலி அலைகள், கம்ப்யூட்டர் வழியாக 40 செகண்டுகளில் பதிவாகி, ஈசிஜி பிரின்ட் அவுட் தயாராகி விடும்" என்கிறார் அப்போலோ மருத்துவமனை இதய சிகிச்சைப் பிரிவு தலைமை மருத்துவர் டாக்டர் கே. பி. மிஸ்ரா.

கொஞ்சம் நம்ப முடியாமல் நாம் விழிக்க -

"தேவைப்பட்டால் ஆம்புலன்ஸை அனுப்பி, அப்போலோவிலோ அல்லது பேஷன்ட் தேர்ந்தெடுக்கும் வேறு மருத்துவமனையிலோ அட்மிட் செய்து சிகிச்சை கொடுப்போம். இல்லை, பிரச்னை சாதாரணம்தான் என்றால், 'ரிலாக்ஸ்டா இருங்க. ஒரு ஆஸ்பிரின் மாத்திரையைச் சாப்பிட்டுச் சும்மா படுங்க. எல்லாம் சரியாயிடும்' என்போம். இல்லை வேறு மருந்து தேவைப்பட்டால், டெலிபோனிலேயே அந்த மருந்தைச் சொல்லுவோம். ஒருநாளைக்கு 24 மணி, வருடத்துக்கு 365 நாட்கள் இந்த கார்டியாக் சென்டர் இயங்கும். ஆகவே எந்த நேரமும் டெலிபோன் ஆலோசனை கிடைக்கும். வெளியூர் நோயாளிகள் கூட எஸ்.டி.டி. மூலம் இந்த ஆலோசனை பெறலாம்."

"டெலிபோனில் கரகர, கொண கொண சத்தம் எல்லாம் குறுக்கிட்டால், ஈ.ஸி.ஜி. ஸ்கேன் கோணல் மாணலா கோடு வரையாதா?"

"ஹா! அதற்குத்தான் நாய்ஸ் எலிமினேஷன் வசதி! அதை எல்லாம் ஃபில்டர் பண்ணி, துல்லியமாய், துடிப்பை மட்டும் எங்கள் டெலிபோனில் வடிக்கும்!"


மருத்துவமனையில் அனுமதி, அலைச்சல் எல்லாம் ஒன்றும் கிடையாது. 10 சதவிகித ஹார்ட் அட்டாக் கேசுகளைத் தவிர்த்து விடலாம்.

"அறுபது சதவிகித ஹார்ட் அட்டாக் நோயாளிகள், மருத்துவ உதவி இல்லாமல் முதல் ஒரு மணி நேரத்திலேயே மரணம் அடைந்து விடுகிறார்கள் - அதனால் இது ஒரு வரப்பிரசாதம்!" என்றார் டாக்டர் மிஸ்ரா.

ட்யூட்டி போடாமல் இருந்தால் பாதி விலைக்கே கிடைக்குமாம். முழு விலை? 3000 முதல் 5000 ரூபாய் வரை.

"ஆகா, டாக்டரிடம் போனில் அட்வைஸ் கேட்டு மருந்தைச் சாப்பிட்டு விடலாம். 'பில்'லே வராது இல்லையா, டாக்டர்?"

"நோ, நோ. யார் யார் டெலிபீப்பர் வாங்குகிறார்கள் என்று எங்களுக்குத் தெரியாதா? நாங்கள்தானே விற்கப் போகிறோம்? அட்வைஸ் கொடுத்தவுடன், 200 ரூபாய்க்கு பில் வரும். ஈசிஜி ரெக்கார்டிங், ஸ்கேனிங், அட்வைஸ் எல்லாவற்றுக்கும் சேர்த்து."




• மிஸ்ரா

இஸ்ரேலில் உள்ள ஏரோடெல் நிறுவனத்துடன் இணைந்து அப்போலோ வழங்கும் இந்தக் குட்டி எந்திரத்தைத் தொழிற்சாலைகள், நர்சிங் ஹோம்கள் கூட வாங்கி வைத்துக் கொள்ளலாம். ஆனால் அவர்களுக்கு விலை 25000 ரூபாய் ஆகும்!

- சாருகேசி

புகைப்படம் : யோகா



பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன். ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

THE TWO FACES OF THE IFB WASHING MACHINE



AS SEEN BY YOUR JEANS



AS SEEN BY YOUR CHIFFONS

Only an IFB Washing Machine is capable of treating your filthy jeans and exquisite Chiffons differently. Here's how it's done:

The Gentlest Wash: The Tumble Wash system handles your expensive Chiffons gently. It's the closest you can get to actually washing your clothes yourself.

The Toughest Wash: The Pre-wash facility gives dirty jeans an initial soak to dislodge dirt. Then, the main wash goes to work. With its powerful motor and Stainless Steel Drums (both inner and outer), the IFB Washing Machine makes light work of the heaviest loads. And, that's only the beginning.

Temperature Control: Washes clothes at any setting from room temperature to 95°c. For the removal of stains and better detergent action.

3 Rinses and 2 Spin Cycles: To remove detergent completely.

Faster Spin Cycle: To dry your clothes in no time.

Lowest Water and Detergent consumption: Only 70 litres of water and 50% less detergent, for a full 5 kg load.

To fully appreciate the capabilities of the IFB Washing Machine, drop in at any IFB Dealer for a demonstration. You'll soon find out why clothes are happiest in an IFB!



ISO 9002

IFB

THE WORLD'S MOST ADVANCED WASHING SYSTEM.

Mudra:IFB:2932:95

MANUFACTURED BY IFB INDUSTRIES LTD.: Sales Offices in India: Ahmedabad: Ph:460628; Bangalore: Ph:2242725, 2274091; Bombay: Ph: 6408914, 6425577, 6432977; Calcutta: Ph:4758291; Chandigarh: Ph:45968; Cochin: Ph:364029; Goa (Panjim): Ph:224536, 223681; Hyderabad:811562; Indore: Ph:467190; Lucknow: Ph: 273161; Madras: Ph: 4349080; 4349486; New Delhi: Ph:6425984, 6425985, 6422569; Pune: Ph:627530, 626972.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka